
தமிழரசு
1-4-1992 ரூ.1

# *KhadiKraft* HONEY!
# A pure product of nectar and pollen now comes your way!

Nature's bounty comes your way.
Now from *KhadiKraft*. In the shape of honey a sweetener, so pure and divine.
A food product for the family.
*KhadiKraft* Honey brings a lost tradition to your home. It contains vitamins and necessary ingredients to ensure perfect health, nourishment and strength. It can be used with every meal or as a soft drink. A true miracle food.
*KhadiKraft* Honey comes in enticing bottles.

*For Babies Health*

**PURE HONEY**








**Honey-Nature's own gift!
For you and the family.**

**Available at all**

# *KhadiKraft*

Tamilnadu Khadi and Village Industries Board,
Kuralagam, Madras-600 108

DIPR/ 580 MS/92

# இந்த இதழில்...


சட்டமன்றத்தில் ... 2

காவிரி (கவிதை) ... 4

தமிழகத்தில் மின்வெட்டே இல்லை!
—மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு ... 5

மதுவிலக்கு ஆயத்தீர்வை, தீயணைப்புத்துறை, காவல்துறை - விவாதங்களுக்குச் சட்டமன்றத்தில் மாண்புமிகு முதல்வர் பதிலுரை ... 9

நெஞ்சையள்ளும் செஞ்சி ... 19

பெரியார் மாவட்டத்தில் சமுதாய நலப்பணிகள் ... 22

காவியமும் கற்பனையும் (இலக்கியம்) ... 24

தண்டமிழ் வளர்க்கும் தமிழ்ப் பல்கலைக் கழகம் ... 27

கீரைகளின் மருத்துவக் குணங்கள் (மருத்துவம்) ... 30

சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கு அரசின் சலுகைகள்
மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு ... 44

பயணிகளின் சொர்க்கம் கன்னியாகுமரி ... 46



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023

பங்குனித் திங்கள் - 19

மலர்:22 இதழ்:19

1-4-1992


## சென்னையில் குழந்தைகள் திரைப்பட விழா!

குழந்தைகள் திரைப்பட விழா சென்னையில் ஜூன் மாதம் நடத்தப் படஉள்ளது. தமிழக அரசும் இந்தியக் குழந்தைகள் சங்கமும் இவ்விழாவை நடத்தும்.

இந்தியக் குழந்தைகள் திரைப்பட சங்கத்தினால் தயாரிக்கப்பட்ட அல்லது அந்தச் சங்கத்திடம் உரிமம் பெற்று வெளியிடப்படும் திரைப் படங்களுக்குக் கேளிக்கை வரி ரத்து செய்யப்படும். இதன்மூலம் அதிக அளவில் குழந்தைகளுக்கான திரைப் படங்களைத் தமிழ் மொழியில் தயாரிக்க வாய்ப்பு உருவாகும்.



மதுவின் தீமையைப் பிரச்சாரம் செய்யும் நோக்குடன் அரசு சார்பில் ரூ.85 இலட்சம் செலவில் தயாரிக் கப்படும் திரைப்படம், மகாத்மா காந்தி பிறந்த நாளான அக்டோபர் 2-ஆம் தேதி வெளியிடப்படும். இதேபோலத் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றச் செயலாளர் ஆர்.எஸ். மனோகர் ரூ.2 இலட்சம் செலவில் தயாரிக்கும் 'வெளிச்சம்' என்ற நாடகம் மே மாதம் முதல் தேதி அரங்கேற்றப்படும்.

### ஆபாச சுவரொட்டி

ஆபாசமான சுவரொட்டிகள் ஒட்டினால் அரசு கடுமையான நட வடிக்கை எடுக்கும்.


திரையரங்குகளில் போலி நுழை வுச் சீட்டுகள் விற்கப்படுவதைத் தடுக்கவும் அரசு கடுமையான நட வடிக்கை எடுத்து வருகிறது.

## அண்ணா சாலை மேம்பாலம்

சென்னையில் உள்ள அண்ணா சாலையில், போக்குவரத்து நெரி சலைக் குறைக்க 12.8 கி.மீ. தூரத் திற்குத் தனிவழிப் பேருந்து மேம் பாலம் அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

உலக வங்கியின் உதவியுடன் செயல்பட உத்தேசிக்கப்பட்டுள்ள இத்திட்டம் குறித்துப் பொறியாளர் களின் ஆய்வுக்கு விடப்பட்டுள்ளது. 1987-இல் நாள் ஒன்றுக்கு அண்ணா சாலையில் 94,600 மோட்டார் வாகனங்கள் ஓடியதாகவும், 2011-இல் 1,77,800 வாகனங்கள் ஓடக்கூடும் என்றும் ஆய்வுகள் கூறுகின்றன.

1989-இல் சென்னைப் பெரு நகர் வளர்ச்சிக் குழுமத்தின் உதவி யுடன் பல்லவன் போக்குவரத்து ஆய்வுக்குழுவால் 2000-ஆம் ஆண்டில் வாகனக் கொள்ளளவு பற்றி ஆராயப்பட்டது.



# சட்டமன்றத்தில்...

## பிற்படுத்தப்பட்டோர் நலனை ஆராய புதிய கமிஷன்

பிற்படுத்தப்பட்டோர் நலன்களை ஆராய மூன்றாவதாக ஒரு கமிஷனை அமைக்கத் தமிழக அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது என்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சட்டப்பேரவையில் தெரிவித்தார் (23.3.1992).


தமிழ்நாட்டில் வறட்சிப் பகுதிகளில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க ரூ.9 கோடியே 72 இலட்சம் வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார் என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் அறிவித்தார்

இந்தத் தொகையில் 1,500 ஆழ்துளைக் கிணறுகள் அமைப்பதற்கு 4 கோடியே 75 இலட்சம் ரூபாயும், வேலைவாய்ப்புக்காக ரூபாய் 3 கோடியும், இதர பணிகளுக்காக ரூபாய் ஒரு கோடியே 97 இலட்சமும் ஆக மொத்தம் 9 கோடியே 72 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.

(23.3.1992).

## மாணவிகளுக்கு 13 புதிய விடுதிகள்

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மாணவிகளுக்காக இவ்வாண்டு தமிழ்நாட்டில் 23 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாய் செலவில் 13 புதிய விடுதிகள் கட்டப்படும்.



மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை, 31.3.'92 அன்று, இராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த ஸ்ரீதுளசி எனும் சமணப் பெரியாரின் மடத்தைச் சார்ந்த சமணப் பெண் துறவிகள் சந்தித்தனர்.

## அருங்காட்சியகத்தில் குளிர் சாதன வசதி

சென்னையிலுள்ள அருங்காட்சியகக் கலையரங்கில் குளிர்சாதன வசதி செய்யப்பட உள்ளது. கட்டட விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

அருங்காட்சியக வளாகத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றத் தனியார் ஒத்துழைப்பை நாட உத்தேசிக்கப்பட்டுள்ளது. அருங்காட்சியகத்தின் சிறப்புகளைப் பல வழிகளில் விளம்பரம் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மதுரை திருமலைநாயக்கர் அரண்மனையின் அடித்தளத்தை வலுப்படுத்தும் பணி இந்த ஆண்டு தொடங்கப்படும்.

இதே போல் தஞ்சை அரண்மனையில் தர்பார் மண்டபம், மணிக்கோபுரம், ஆயுதக் கோபுரம், சர்ஜா மண்டபம் போன்றவைகளை சீராக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிகளில் ரூபாய் 15 இலட்சம் செலவில் நூலகங்கள் அமைக்கப்படும் என்று மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. ஆர்.எம். வீரப்பன் அவர்கள் அறிவித்தார் (23.3.1992).

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., பணிகளுக்குத் தேர்வு எழுத மாணவ- மாணவிகளுக்குப் பயிற்சி அளிக்க ரூ.35 இலட்சம் செலவில் தனிப்பயிற்சி நிலையம் ஒன்று சென்னையில் கட்டப்படும் என்று மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. ஆர்.எம். வீரப்பன் அவர்கள் அறிவித்தார் (23.3.1992).

### எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகம்

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் மற்றும் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகங்களைப் பிரித்து 'புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகம்' என்ற பெயரில் புதிய போக்குவரத்துக் கழகம் ஒன்று 1.4.1992 முதல் காஞ்சிபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் அறிவித்தார். (24.3.1992).

### 3 புதிய பாலிடெக்னிக்குகள்

போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்காகச் சென்னை, தருமபுரி மற்றும் திருநெல்வேலியில் மூன்று புதிய பாலிடெக்னிக்குகள் அமைக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார் என மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் தெரிவித்தார் (24.3.1992).

### மின்சாரத்தில் ஓடும் பஸ்

தமிழகத்திலேயே முதன்முறையாகச் சென்னையில் பல்லவன் போக்குவரத்துக் கழகமும், கோவையில் சேரன் போக்குவரத்துக் கழகமும் மின்கலத்தால் (பேட்டரி) இயக்கப்படும் பேருந்துகளைப் பரீட்சார்த்தமாக இயக்கும் என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் அறிவித்தார் (24.3.1992).

வனப்பகுதிகளில் திருட்டுகளைத் தடுக்க ரூ.52 இலட்சம் செலவில் 45 வயர்லெஸ் கருவிகள் அமைக்கப்படும் என்றும் - நடப்பு ஆண்டில் புதிதாக 2,000 பேருந்துகள் இயக்கப்படும். 1,842 பேருந்துகள் புதுப்பிக்கப்படும் என்றும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் தெரிவித்தார் (24.3.1992).

### பார்வையாளருக்குக் கட்டணம்

அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளை பார்க்கச் செல்லும் பார்வையாளர்களிடம் இனி கட்டணம் வசூலிக்கப்படும் என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எஸ். முத்துசாமி அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்தார் (20.3.1992).

### மக்கள் குறை நீக்க...

மாவட்ட மக்களின் குறைகளைக் கேட்டு நடவடிக்கை எடுப்பதற்காக மாவட்டத்துக்கு ஒருவர் வீதம் 22 புதிய துணை மாவட்ட ஆட்சியரை நியமிக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார் என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் தெரிவித்தார் (19.3.1992).

### சத்யஜித்ரேக்குப் 'பாரத ரத்னா' விருது

உலகப் புகழ்பெற்ற வங்காளத் திரைப்பட இயக்குநர் திரு. சத்யஜித்ரேக்கு இந்தியாவில் வழங்கப்படும் விருதுகளில் மிக உயர்ந்த விருதான 'பாரத ரத்னா' விருது வழங்கப்பட்டுள்ளது. திரைப்படத் துறைக்கு இவர் ஆற்றியுள்ள சேவையைப் பாராட்டி இவருக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

திரு. சத்யஜித்ரேக்கு 1959-இல் 'பத்ம ஸ்ரீ' பட்டமும், 1965-இல் 'பத்ம பூஷன்' பட்டமும், 1976-இல் 'பத்ம விபூஷன்' பட்டமும் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# காவிரி



மடந்தையெழில் காவிரியாள் கடலை யடைய
மகிழ்ச்சியுடன் வருகின்றாள் தமிழகந்தான்
அடைந்திடத்தான் செய்வதும்நம் கடமையாகும்
அஃதேதான் நடுவர்தம் தீர்ப்பும் ஆகும்.
"நடந்தாய்வாழி காவேரி" என்று சொல்லும்
நல்லுரைக்குப் பொருளாகும் அவள் நடந்தால்!
நடந்துஅவள் வருவதாலே செழிக்கும் நாடே!
நீருக்குத் தடை போட்டால் நேரும் கேடே!

தென்னாட்டுக் கங்கைதானே காவிரி யாறும்?
தடுத்தாலதைச் செழித்திடுமா ஒருமைப்பாடும்
தென்னகந்தான் செழித்திடவே கங்கை நீரைத்
திருப்பிடுவார், அதுவரைக்கும் காவிரிதானே!
இந்தியத்தாய் பெற்றெடுத்த மக்கள் நாமே.
இனிதேதான் ஒற்றுமையாய் வாழ்வதாலே
தண்ணீரை யிரக்கமின்றித் தடுத்தா லங்கே
தழைப்பதெங்கே தமிழர்கள்நாம் மடிவோமிங்கே

தஞ்சையுந்தான் சிறந்திடுமா பொன்னி யின்றி?
தானழியும் மனித நேயம் அன்பும் குன்றி
கொஞ்சுமந்த யியற்கையினி யழிந்தே போகும்
குழந்தைகூட சிரிப்பதற்கு மறந்தே போகும்
நஞ்சைநிலம் என்பதப்போ ஏது நாட்டில்?
நெல்மணிகள் வீட்டிலிரா, இருக்கும்ஏட்டில்
புஞ்சைக்கும் பஞ்சந்தான் இனிமேல், வானம்
பருவமழை தருவதில்லை தந்தால் சேதம்!

தண்ணீர்தான் காவிரியில் இல்லை யென்றால்
தமிழ்நாடே சுடுகாடாய் வறண்டு போகும்
கண்ணீரே பின்நாளில் செந்நீராகும்
குடிப்பதற்கும் நீரின்றி உயிர்கள் சாகும்
அன்னையினும் தயவுடைய முதல்வர் தம்மின்
அறிவுத்திறம், அணுகுமுறை, ஆற்றல் தம்மால்
மண்ணகமே போற்றப் பல வெற்றி கொண்டார்
மகத்தான வெற்றிதனை யிதிலும் கொள்வார்.

கேசவாநந்த கிருஷ்ண குரு



# 'தமிழகத்தில் மின்வெட்டே இல்லை'

## மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு



தமிழகத்தின் ஈடில்லாத் தொழில் வளர்ச்சிக்கும், தொழில் பெருக்கத்திற்கும் மின்சாரம் இன்றியமையாதது என்பதை நன்கு உணர்ந்த இந்த அரசு பொறுப்பு ஏற்ற நாள் முதல் மின் உற்பத்தியை அதிகரிப்பதில் முன்னுரிமை கொடுத்து நடவடிக்கைகள் மேற்கொண்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள்.

கடுமையான சூழ்நிலையினிடையே இந்த அரசு பொறுப்பு ஏற்றபொழுது உயர் அழுத்தத் தொழிற்சாலைகளில் மின் உபயோகத்தில் 25 சதவிகித மின் வெட்டும், மின் சுமையில் (Maximum Demand) 30 சதவிகித மின் வெட்டும் அமலில் இருந்து வந்தது. இதனால் தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறன் வெகுவாகப் பாதிக்கப்பட்டதோடு, உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் விலையும் கணிசமாக அதிகரித்தது.

மின்னாக்கிகள் (Generators) மிக அதிக அளவில் உபயோகப்படுத்தப்பட்டதால், டீசல்

### சென்னை துரித இரயில் திட்டம்: கூட்டு நிறுவனம் அமைப்பு

சென்னை விரைவு போக்குவரத்துத் திட்டத்தின் இரண்டாவது கட்டப் பணிகளைச் செயல்படுத்தத் தனி நிறுவனம் ஒன்றை ஏற்படுத்தத் தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. இந்த நிறுவனத்துக்குச் ''சென்னை மாநகர விரைவுப்போக்குவரத்து நிறுவனம்'' எனப் பெயரிடப்படும். கூட்டுத்துறை நிறுவனமாக இது செயல்படும். சென்னை துரித இரயில் இரண்டாம் கட்டப் பணிகள் மயிலாப்பூர்-லஸ்ஸிருந்து தரமணி வரை செயல்படுத்தப்படும்.

முதற்கட்டமாக இந்த நிறுவனத்தின் பங்குத் தொகைக்கு அரசின் பங்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை நிறைவேற்ற 190 கோடி ரூபாய் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. விரைவாகச் செயல்படுத்தத் தேவைப்படும் நிதி ஆதாரங்கள் பல்வேறு நிதி நிறுவனங்கள், கூட்டுத்துறை தொழிலதிபர்கள் ஆகியோரிடமிருந்து பெறப்படும் என்று மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. டி.எம்.செல்வகணபதி அவர்கள் அறிவித்தார் (27.3.'92).

நுகர்வும் (Consumption) அதிகரித்து, பல பிரச்சினைகளுக்கு வழி வகுத்தது. இயற்கை ஒரு புறம் உதவாத நிலையில், மற்றொருபுறம் அனல் மின் நிலையங்களை இயக்குவதற்குத் தேவையான நிலக்கரி கிடைக்காது ஓரிரு நாட்களுக்கு மட்டுமே நிலக்கரி கையிருப்பு உள்ள அவல நிலை இருந்தது.

மக்கள் நலனில் தீவிர ஆர்வம் கொண்ட இந்த அரசு எடுத்துக் கொண்ட ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளின் காரணமாக, இந்நிலை தற்போது முற்றிலும் மாற்றப்பட்டு ஒரு மாதத்திற்குத் தேவையான நிலக்கரி நம் கைவசம் தாராளமாக உள்ளது.

எண்ணூர், தூத்துக்குடி மற்றும் மேட்டூர் அனல் மின் நிலையங்கள் இந்த அரசு எடுத்துக்கொண்ட துரித நடவடிக்கைகளின் காரணமாகத் தற்போது நன்முறையில் இயக்கப்பட்டு, தங்களுடைய முழுமையான உற்பத்தித் திறனை எட்டியுள்ளன. புனல் மின் சக்தி நிலையங்களும் சிறந்த் முறையில் தங்கள் முழு உற்பத்தித் திறன் அளவிற்கு மின் உற்பத்தி செய்ய தேவையான நீரையும் இயற்கை நமக்கு ஒரு வரப்பிரசாதமாக இந்த ஆண்டு அளித்துள்ளது.

நாங்கள் எடுத்துக்கொண்ட சீரிய முயற்சிகளின் பலனாகச் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு மின் உற்பத்தி சுமார் 10 சதவிகிதம் உயர்ந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின் உற்பத்தியில் நாம் எடுத்துக் கொண்ட ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளின் காரணமாக, மின் வினியோகத்தில் தற்போது அமலில் உள்ள மின் சுமையில் 10 சதவிகித மின் வெட்டையும் (Power cut) இன்று முதல் முழுமையாக நீக்க ஆணையிட்டுள்ளேன்.

தமிழகத்தின் சரித்திரத்தில் இது ஒரு மாபெரும் திருப்பு முனை ஆகும். கோடைக்காலத்தில் மின் வெட்டு அதிகரிக்கப்படும் என்ற அறிவிப்புகளை எதிர்பார்த்த தமிழக மக்களுக்கு, மின்வெட்டே இல்லை என்ற இந்தச் செய்தி தேனாக இனிக்கும் என நான் நம்புகிறேன்.

**(மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டப்பேரவையில் 26.3.92ல் வெளியிட்ட அறிவிப்பு)**

## டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவகம் இந்த ஆண்டே புதுப்பிக்கப்படும்

கடற்கரையில் உள்ள எம்.ஜி.ஆர். நினைவகத்தை மாற்றி அமைக்கும் பணி அவரது நினைவு நாளான டிசம்பர் 24- ஆம் தேதிக்குள் முடிவடையும்.

எம்.ஜி.ஆரின் நினைவகத்தை மாற்றி அமைக்க ரூ.1.25 கோடியில்



திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதேபோல ராஜீவ் காந்திக்கு ஸ்ரீபெரும்புதூரில் 12.19 ஏக்கர் நிலப்பரப்பில் நினைவகம் அமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. அதற்காகப் பிரதமர் நரசிம்ம ராவ் தலைமையில் உள்ள குழுவில் நானும் உறுப்பினராக இருக்கிறேன். ராஜீவ் காந்தி நினைவகத்துக்கு வடிவமைக்கப்பட்டு விரைவில் பணிகள் தொடங்கப்படும்.

### திருவள்ளுவர் சிலை

கன்னியாகுமரியில் 135 அடி உயரத் திருவள்ளுவர் சிலை அமைக்கும் பணி, சிற்பக் கலைஞர் கணபதி ஸ்தபதியிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. சிலை, பீடம் ஆகியவற்றை அமைக்கும் பணி சோளிங்கநல்லூர், கன்னியாகுமரி, அம்பாசமுத்திரம் ஆகிய இடங்களில் நடந்து வருகிறது. கடந்த ஆண்டு இதற்காக ரூ.50 இலட்சம் ஒதுக்கப்பட்டது. பணியின் தன்மைக்கு ஏற்ப அவ்வப்போது தேவையான தொகை ஒதுக்கப்படும்.

### தந்தை பெரியார் நினைவகம்

தந்தை பெரியாருக்குக் கேரள மாநிலம் வைக்கத்தில் நினைவகம் அமைக்கும் பணி முடிந்துவிட்டது. அவரது நினைவகம் விரைவில் திறக்கப்படும்.

சிவகங்கையில் சிறப்பாக ஆட்சி புரிந்த மாமன்னர்கள் பெரிய மருது, சின்ன மருது சகோதரர்களுக்குப் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் காளையார் கோயிலில் நினைவுச் சின்னமும் சிலையும் அமைக்கும் பணி முடியும் நிலையில் உள்ளது. திறப்பு விழா விரைவில் நடைபெறும்.

### திரைப்பட நகர்

திரைப்படத் தொழிலுக்காகச் சென்னையில் திரைப்பட நகர் அமைக்க ரூ.70 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டு விழா ஏப்ரல் 16-ஆம் தேதி நடத்தப்படும். இந்நகர் அரசுக்கு அதிக வருவாயை ஈட்டித்தரக் கூடியதாக அமையும்.

பத்திரிகையாளர்களுக்கான ஓய்வூதியம் ரூ.400-லிருந்து ரூ.500 ஆக ஏப்ரல் மாதத்திலிருந்து உயர்த்தப் படும்.

மாவட்டத் தலைமையகத்திலிருந்து செய்திகளையும் புகைப்படங்களையும் விரைவாகப் பெற்றிடவும் செய்திகளை அனுப்பவும் ஃபாக்ஸிமிலி என்ற நவீன சாதனம் ரூ.4 இலட்சம் செலவில் சென்னை கோட்டையில் செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை அலுவலகத்தில் வைக்கப்படும்.

### கேபின் டி.வி.

தமிழ்நாடு வீடியோ கேசட் மூலம் தொலைக்காட்சியில் திரைப் படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) தொடர்பாகச் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் வெளி

யிடப்பட்டுள்ளன. இதன்மூலம் கேபிள் டி.வி. தொழில் உரிமம் வழங்கும் முறையின் கீழ், கொண்டு வரப்பட்டுள்ளது. மாவட்டங்களில் ஆட்சித் தலைவர்களும், சென்னை நகரில் காவல்துறை ஆணையரும் கேபிள் டி.வி.-க்கு உரிமம் வழங்கு வார்கள்.

### வள்ளுவர் கோட்டம்

சென்னை வள்ளுவர் கோட்டத் தில் ரூ.50 இலட்சம் செலவில் குளிர்சாதன வசதி செய்யப்படும்.

### செய்தி மையம்

வெளி மாநில மக்களுக்கும் சுற்று லாப் பயணிகளுக்கும் உதவும் வகை யில் தில்லியில் தமிழக அரசின் செய்தி மையம் ஒன்று அமைக்கப் படும்.

### ஊர்ப்பெயர் பிழைதிருத்தத் தனிக் குழு

தமிழகத்தில் சில ஊர்ப் பெயர் களில் உள்ள இலக்கணப் பிழை, பொருள் பிழைகளைத் திருத்தி சரியான பெயர்களை நடைமுறைக் குக் கொண்டுவர தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.

இதற்காக ஒரு குழு ஏற்படுத்தப் பட்டுள்ளது.

## தமிழகத்தில் உலகத்தமிழ் மாநாடு

டாக்டர் எம்.ஜி.ஆர். முன்பு மதுரையில் நடத்தியதைப் போலத் தமிழ்நாட்டில் மீண்டும் உலகத் தமிழ் மாநாட்டை மிகச் சிறப்பாக நடத்த எண்ணியுள்ளதாக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார்.

செய்தி-தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறைகளுக்கான மானியக் கோரிக்கை மீது நடைபெற்ற விவாதத்துக்குப் பதிலளித்துப் (25.3.'92) பேசுகையில் அவர் கூறியதாவது:

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தை மேலும் வலுப்படுத்த உரிய வழிவகைகளைக் கண்டறிய மூத்த தமிழ் அறிஞர்களைக்



கொண்ட குழு ஒன்று விரைவில் அமைக்கப்படும்.

சென்னையிலுள்ள அரசு அருங்காட்சியக அரங்கில் மாதந்தோறும் 'பண்பாட்டுப் பலகணி' என்ற பெயரில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதைப் போல இனி வாரம் இரு முறை கலை நிகழ்ச்சிகளை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த அருங்காட்சியகத்திலுள்ள 2,000-க்கும் மேற்பட்ட கலைப் படிமங்களை வைத்து அரிய கண்காட்சியை அடுத்த மாதத்தில் தொடங்க அரசு உத்தேசித்துள்ளது.

அனைத்து நிலைகளிலும் தமிழை ஆட்சி மொழியாக நடைமுறைப்படுத்தி ஊக்கம் அளிக்கும் வகையில் எல்லா மாவட்டங்களிலும் மாவட்ட, வட்ட நிலை அலுவலர்கள் பங்குபெறும் ஆட்சி மொழிக் கருத்தரங்குகளை அரசு தொடர்ந்து நடத்தும்.

## பாரதிதாசன் பாடல்கள் 3 மொழிகளில் மொழிபெயர்ப்பு

பாவேந்தர் பாரதிதாசனின் 100 பாடல்களை கன்னடம், மலையாளம், தெலுங்கில் மொழி பெயர்த்து வெளியிடும் பணி தொடங்கிவிட்டது.

செந்தமிழ்ச்சொற்பிறப்பியல் தயாரிப்புத் திட்டத்தில் இந்த ஆண்டில் 'ஆ' முதல் 'ஔ' முடிய உள்ள இரு பகுதிகள் வெளியிடப்படும்.

தேவநேயப் பாவாணரால் ஆராய்ச்சி செய்து தொகுக்கப்பட்ட அகரத்தில் தொடங்கும் 6,500 சொற்கள் பேரகர முதலியின் முதல் பகுதி 1985-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. அதன்பின் 1989-ஆம் ஆண்டு முதல் தன் இயக்கமாகச் செயல்படும் அகர முதலித் திட்ட இயக்ககம் பேரகர முதலி முழுமைக்கும் தேவையான 60,000 சொற்களைச் சொல்லடைவு செய்துள்ளது.

தமிழக மரபு வழிக் கலையை இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ளுவதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் அவற்றைப் பதிவு செய்யத் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் முடிவு செய்துள்ளது.



தமிழகத்திலுள்ள புகழ் வாய்ந்த வாய்ப்பாட்டுக் கலைஞர்களின் இசையையும் மன்றம் ஒலிஇழையில் பதிவு செய்யும்.

உதகை, மதுரை ஆகிய இடங்களில் ஓவியக் கலையரங்கு அமைக்கப்படும்.

ஆட்சிச் சொல்லகராதியின் கையடக்கப் பதிப்பு அச்சில் உள்ளது. அரசு ஊழியருக்குப் பயன்படும் புதிய ஆங்கிலம் தமிழ், தமிழ்-ஆங்கிலம் அகராதிகளை வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

**- மாண்புமிகு முதல்வர் அவர்கள், சட்டமன்றத்தில் செய்தி-மக்கள் தொடர்புத்துறை மானிய விவாதத் திற்குப் பதிலளித்துப் பேசிய உரை யிலிருந்து (25.3.1992).**

# நூல் நயம்

## இதழியல் உலகில் 'தமிழரசு'

**ஆசிரியர்:** புலவர் தமிழ்ப்பித்தன்

**வெளியீடு:**

மணிவாசகர் பதிப்பகம்
55, லிங்கி தெரு
சென்னை-600 001

**விலை:** ரூ.35 பக்கம்: 288

தமிழக அரசின் அதிகாரபூர்வ ஏடான 'தமிழரசு' [illegible] கடந்த 21 ஆண்டுகளாக, தகவல் அறிவிப்புச் சாதனங்களில் [illegible] முக்கியப் பங்காற்றி வருகின்றது.

'தமிழரசு' வெறும் அரசு இதழாக மட்டுமின்றி, பல்சுவைத் திங்களிருமுறை இதழாகவும் வெளிவருவதை நாம் முக்கியமாகக் குறிப்பிட வேண்டும்.

அரசின் திட்டங்களையும், சட்டங்களையும், செயல்பாடுகளையும் தெள்ளத் தெளிவாகக் கூறும் இதழாக மட்டுமின்றி, வெண்பாப் போட்டி, தமிழ் வளர்த்த பெரியார், இலக்கிய விருந்து போன்ற பகுதிகளையும் கொண்டு தமிழிலக்கியத் தொண்டையும் ஆற்றி வருகின்றது.

இதேபோல தலைவர்கள், அறிஞர்கள் நினைவாகச் சிறப்பு மலர்களையும், அரசின் வளர்ச்சிப் பணிகளை விளக்கிடும் மாவட்டச் சிறப்பு மலர்களையும், அரசின் சாதனைகளை விளக்கிடும் தொகுப்பு மலர்களையும், தமிழர் திருநாள் போன்ற சிறப்பிதழ்களையும் வெளியிட்டு வாசகர்களின் மனமுவந்த பாராட்டுகளைப் பெற்று வருகின்றது.

அத்துடன் சட்டப்பேரவையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரைகளைத் தொகுத்து இலவச இணைப்புகளையும் அவ்வப்போது இது வழங்கி வருகின்றது.

அரசு இதழ்களிலேயே வடிவமைப்பிலும், அச்சமைப்பிலும் இது தன்னிகரற்று விளங்குவது, இதன் தனிச் சிறப்பாகும்.

இத்தனைச் சிறப்புகளையும் உள்ளடக்கிய இந்த நூலை, புலவர் தமிழ்ப்பித்தன் அவர்கள் எழுதியிருப்பது இன்னொரு சிறப்பு அம்சமாகும்.

புலவர் தமிழ்ப்பித்தன் தமிழரசு தொடங்கப்பட்ட காலம் முதலே பணி ஆற்றி வந்தவர். தமிழரசோடு இணைந்து இழைந்து உழைத்தவர். இந்தத் தொகுப்பை எழுத இவரே ஏற்றவர்.

அந்த வகையில் இந்த நூலை மிக அழகாக, தெளிவாக நல்ல தமிழில் எழுதித் தந்திருப்பது பாராட்டுக்குரிய செயலாகும்.

ஒரு அரசு இதழின் ஏறக்குறைய கால் நூற்றாண்டுப் பணிகளைத் தொகுத்தும் பகுத்தும், வகுத்தும் தருவது என்பது அவ்வளவு எளிதான செயலல்ல. அந்த அருஞ்செயலை ஆற்றியிருக்கின்ற நூலாசிரியரை எவ்வளவு போற்றினாலும் தகும்.

இதழியல் உலகில் தமிழரசுக்கு ஒரு நிலையான இடமுண்டு என்பதைக் காட்டும் காலக் கண்ணாடியாக இந்நூல் விளங்குகிறது.

இளைய தலைமுறையினர்க்கு, குறிப்பாக இதழாராய்ச்சியாளர்க்கு இந்நூல் மிகச் சிறந்த வழிகாட்டியாக அமையும் என்பதில் எள்ளளவும் ஐயப்பாடில்லை.

- பொ. மறைமலை

## ஆரோக்கிய வாழ்விற்குப் பயன்தரும் கீரை வகைகள்

**ஆசிரியர்:** டாக்டர் ஏ.ஆர்.என்.துரைராஜ்

**வெளியீடு:**

கற்பகம் புத்தகாலயம்
59, ஆடம் தெரு
மைலாப்பூர், சென்னை-600 004

விலை: ரூ.25 பக்கம்: 222

கீரைகளின் பயன்கள் பற்றி நாம் ஓரளவேனும் அறிந்திருந்தாலும், அவற்றின் முழுப் பயன்கள் மற்றும் செய்முறைகள் பற்றி இந்நூலில் ஆசிரியர் நன்கு விளக்கியிருக்கிறார். இந்திய நாடெங்கும் பரந்து காணப்படுகின்ற சுமார் 27 கீரை வகைகளின் குண இயல்புகளையும், இந்தக் கீரைகளின் சிறப்பான குணங்கள் பற்றிய சித்தர் பாடல்கள் மற்றும் சங்கப் புலவர்களின் பாடல்களையும் கோடிட்டுக் காட்டி இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

குறிப்பாக, சிறுநீரகம் நன்றாகச் செயல்பட, தீராத இருமலை நிறுத்த, சிலந்திக் கடிக்கு என்று இன்னும் பல வேறு பிணிகளுக்கு 'ஆடாதொடை' என்ற மூலிகை எவ்வாறு பயன்படுகிறது என்பதை ஆசிரியர் நன்கு விளக்கியிருக்கிறார். 'துளசி'யின் பயன் நமக்குத் தெரிந்திருந்தாலும், அதன் மூலம் குணமாகும் நோய்கள் பற்றியும் ஆசிரியர் விரிவாகக் கூறியிருக்கிறார்.

நோயின்றி நீண்ட நாள் நலமுடன் வாழ, எளிதாகக் கிடைக்கும் கீரைகளின் பயன்கள் பற்றி நாம் அறிந்து கொள்ள இந்நூல் பெரிதும் பயன்படும்.

- ஜே. சந்திரன்.

## சிந்தனை மொழிகள்

**ஆசிரியர்:** பெ. வேலுச்சாமி

**வெளியீடு:**

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
(பி) லிமிடெட்,
சென்னை-600 098.

பக்கம்:59 விலை:ரூ.6/-

பழமொழிகள் சுவையானவை. சிந்தனையைத் தூண்டுபவை. ஆன்றோர்களின் அனுபவ மொழிகளாகவும் அவை இருப்பதால் வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும் விளங்குபவை. இந்நூலின் ஆசிரியர் அகர வரிசையில் தொடங்கி, பல அரிய பழமொழிகளைத் தொகுத்து வழங்கியுள்ளார்.

''ஒரு துளி மை பத்து இலட்சம் பேர்களைச் சிந்தனை செய்யத் தூண்டக் கூடியது''

''ஒரு மனிதனின் கெட்ட குணங்களை வெறுத்து விடு. ஆனால் அம்மனிதனை வெறுக்காதே'' - போன்ற புதுமொழிகளை இடையே புகுத்தியுள்ளது பாராட்டு தற்குரியது.

—சுகுமாரன்

## மங்கையர் அனுபவத் தையற்கலை ஆசான் (முதல் மற்றும் இரண்டாம் பாகங்கள்)

**ஆசிரியர்:** பி. தாமோதரன்

**வெளியீடு:**

வாணி கலாமந்திர் கலைநூற் பதிப்பகம்
மயிலாப்பூர்,
சென்னை-600 004

விலை: (இரண்டு பாகங்களும் தலா ரூ.45)

இந்நூல், இரண்டு பாகங்களாக வெளிவந்துள்ளது. இவை, தையற் கலையின் அடித்தளத்தைப் பலப்படுத்தவும், அதன்மேல் மிகவும் உறுதியான 'தையற்கலை' என்னும் கட்டடத்தை ஏற்றவும் உதவும்.

சாதாரண முறைமட்டுமல்ல இக்கலையின் நூதன முறையும் மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

இந்நூலாசிரியர், முதல் பக்கத்தில் மங்கையரின் அத்தியாவசியமான உடைகளைப் பற்றிய விளக்கம் கூறியிருக்கிறார். இதில் சோலியைப் பற்றி நான்கு வகைகளைக் குறிப்பிட்டு விளக்கம் கொடுத்திருக்கிறார். சோலியைத் தைக்க அவர் கொடுத்திருக்கும் தெளிவான வரைபடம், விளக்கவுரை, நூதன முறையைச் சொல்லி இருக்கும் விதம், மிகச் சுலபமாக நாம் மாதிரி பேப்பர் பேட்டர்ன் எடுத்து தைத்து விடலாம். ஆங்காங்கே இவர் கொடுத்திருக்கும் குறிப்பு மிகவும் உதவியாக இருக்கிறது. இப்புத்தகத்தில் மேலும் சில நவநாகரீக ஆடைகளை குறிப்பாகத் தேர்ந்தெடுத்து விளக்கம் தந்திருக்கிறார்.

— இ. நித்தியக்கல்யாணி

# மதுவிலக்கு - ஆயத்தீர்வை

# தீயணைப்புத்துறை - காவல்துறை

# விவாதங்களுக்குச் சட்டமன்றத்தில்

# மாண்புமிகு முதல்வர் பதிலுரை!

அரசியல் சாதுரியமும், தொலைநோக்குப் பார்வையும் படைத்த தமிழக மக்கள், தமிழகத்தில் முந்தைய ஆட்சிக் காலத்தில் நடந்த அநியாயங்கள், அக்கிரமங்கள், அலங்கோலங்கள், அருவருக்கத் தக்க நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் அதிருப்தி அடைந்து, தங்களுக்குப் பாதுகாப்பு வழங்குகிற, மக்கள் பணி செய்கிற ஒரு நல்ல நிலையான, முறையான ஆட்சி தமிழகத்திற்கு வரவேண்டும் என எண்ணினார்கள். அந்த எண்ணத்திற்குச் செயல்வடிவம் தந்து, அ.இ.அ.தி.மு.க.-வைச் சேர்ந்த எங்களைப் பெருவாரியாகத் தேர்ந் தெடுத்து, மகத்தான தேர்தல் வெற்றியை வழங்கி, இந்த மாமன்றத்திற்கு, அனுப்பி வைத்தார்கள். நல்லது நடக்கும், பாதுகாப்புக் கிடைக்கும் என்று கருதிய மக்களின் பெரும் எதிர்பார்ப்புகளையும், ஏக்கங்களையும் நிறைவேற்றுகிற வகையில், நாங்கள் உழைத்து வருகிறோம்; இனியும் மக்களுக்கு உழைத்திடத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன். ஆட்சிக்கு வந்த 9 மாதங்களுக்குள், இரண்டாவது வரவு-செலவுத் திட்டத்தினை இப்போது சமர்ப்பித்துள்ளோம். விண்ணை முட்டும் அளவில் மக்களின் பல்வேறு எதிர்பார்ப்புகள் ஒரு புறம், எதையுமே செய்ய முடியாத அளவுக்கு நிதிப் பற்றாக்குறை மறுபுறம். இவற்றோடு-தேர்தல் களத்திலே படுதோல்வியைச் சந்தித்தவர்கள், எங்களின் மாபெரும் வெற்றியைக் கண்டு பொறாமைப்பட்டுப் பொறுக்க முடியாத வர்கள், நாங்கள் செய்யும் எதையுமே குற்ற நோக்கோடும், குறுகிய மனப்பான்மையோடும் பார்த்துக்கொண்டு, வசைபாடிக் கொண்டிருக் கிறார்கள்.

மக்களின் நலன்களுக்காகவும், வசதிகளுக்காக வும் செய்யப்படும் மாபெரும் நற்காரியங்களுக்குக் கூட, மாசு கற்பிக்கிறார்கள்; மனக்குழப்பம் அடை கிறார்கள். இவற்றை எல்லாம் நான் இங்கே சூசகமாகச் சொல்லுவதற்குக் காரணம், எப்படிப் பட்ட சூழ்நிலையில் இந்த அரசு தனது கடமையைச் செய்ய வேண்டி இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டத்தானே தவிர, யார் மீதும் சுடுசொல்லை வீச வேண்டும் என்பதற்காக அல்ல. மக்களுக்காகச் செயல்படத் தயாராக உள்ள, எங்கள் அரசின் அணுகுமுறை பற்றிய விளக்கங்களை, நான் பல முறை இந்த மாமன்றத்தில் பேசியிருந்தாலும், அவைகளை மீண்டும் உங்களுக்கு நினைவுபடுத்த நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளதைக் கருதி, எனது பதிலுரையை வழங்க விழைகிறேன்.

**மதுவிலக்கு**

நமது மாநிலத்தில் 31 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. அவை சர்க்கரையை உற்பத்தி செய்வதோடு, உபபொருளாக (By product) கருப்பஞ்சாற்றுக் கசண்டையையும் (Molasses) உற் பத்தி செய்கின்றன. வடிசாலைகளில் (Distilleries) கருப்பஞ்சாற்றுக் கசண்டிலிருந்து சாராவியைத் (Alcohol/Sprit) தயாரிக்கின்றனர். அவ்வாறு தயாரிக்கப்பட்ட சாராவியில் இருந்துதான் சாராயம், மது தயாரிக்கப்படுகிறது. அவை மட்டுமின்றித் தொழிற்சாலைகளுக்குத் தேவையான பல்வேறு இரசாயனப் பொருட்களும் தயாரிக்கப்படுகின்றன.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றபோது, சர்க்கரை ஆலைகளில் கருப்பஞ்சாற்றுக் கசண்டு வெகுவாகத் தேங்கிக் கிடந்தது. அவற்றை இரும்புத் தொட்டிகளில் சேமித்து வைக்க இடமில்லாததால், திறந்த வெளிகளில் வெட்டப்பட்ட குழிகளில் சேமித்து வைக்க வேண்டிய கட்டாய நிலையில் சர்க்கரை ஆலைகள் இருந்தன. இதனால் ஆலை களுக்குப் பெரும் இழப்பு ஏற்பட்டது. இதற்கு உடனடியாகத் தீர்வு காணவேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்பட்டது. இப்பிரச்சினையைத் தீர்க்க, நீண்ட காலத் திட்டங்களையும், குறுகிய காலத் திட்டங்களையும், தொலைநோக்குப் பார்வை யோடு வகுக்க, இந்த அரசு பல முயற்சிகளை மேற் கொண்டது. மத்திய அரசின் மூலமாக, ஒரு இலட்சம் மெட்ரிக் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டு, வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

கருப்பஞ்சாற்றுக் கசண்டு தொழிற்சாலைகளுக்கு வழங்குவதில், இருந்துவந்த தடை தளர்த்தப்பட்டது. இந்திய அரசின் மூலமாக வெளி மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது. இது போன்ற குறுகிய கால நடவடிக்கைகளை, உடனடியாக மேற்கொண்டதால், இந்தப் பிரச்சினை கணிசமான அளவிற்குத் தீர்க்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, சர்க்கரை ஆலைகளால் அதிகமாக உற்பத்தி செய்யப்படும் கருப்பஞ்சாற்றுக் கசண்டை வீணாக விடாமல், நாமே நிரந்தரமாகப் பயன்படுத்தும் தொலைநோக்கு எண்ணத்தில், புது வடிசாலைகளை (Distilleries) அமைப்பதற்கு அனுமதி வழங்குவது, என்ற ஒரு கொள்கை முடிவினை இந்த அரசு எடுத்தது. அதில் குறிப்பாகச் சர்க்கரை ஆலைகளுக்கு முன்னுரிமை கொடுக்கலாம். அப்படிக் கொடுக்கப்படும் சர்க்கரை ஆலைகளில் தனியாருக்கும் வாய்ப்பு அளிக்கலாம்; அதே நேரத்தில் கூட்டுறவு நிறுவனங்களுக்கும், அரசு நிறுவனங்களுக்கும் முன்னுரிமை கொடுக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

இந்தக் கொள்கை அடிப்படையில் Aruna Sugars, Arooran Sugar Mills, Kothari Sugars & Chemicals Limited, Rajashree Sugars & Chemicals Limited ஆகிய நான்கு தனியார் சர்க்கரை ஆலை நிறுவனங்களுக்கு, ஒரு இலட்சத்து 80 ஆயிரம் மெட்ரிக் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டை, ஆண்டுதோறும் வழங்குவது என்ற ஒரு முடிவை இந்த அரசு எடுத்துள்ளது. இது தவிர, ஏற்கெனவே இயங்கி வரும் வடிசாலைகளை விரிவாக்க விரும்பினால், அவர்களுக்கும் தகுதி அடிப்படையில் கருப்பஞ்சாற்றுக் கசண்டு வழங்கலாம் என்ற முடிவினையும் இந்த அரசு எடுத்து இருக்கிறது.

அடுத்து, மாநில ஆயத்தீர்வை பற்றிய கருத்தைச் சொல்லுகின்றபோது, டாஸ்கோ நிறுவனத்திடமிருந்து பீர் தொழிற்சாலையை ஏன் விற்றீர்கள்? என்ற ஒரு பெரும் கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. இந்த மாமன்றத்திற்கு நன்றாகவே தெரியும். மலிவு விலை மதுவை ஒழிப்பது இந்த அரசின் கொள்கை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போதுதான் மலிவு விலை மதுவைத் தயாரிக்கும் பிளண்டிங் யூனிட்டுகளை நிறுவுவதற்காகத் தமிழ்நாடு சாராவிக் கழகம் (TASCO) என்ற ஒரு நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது. அரசுக்குச் சொந்தமான டாஸ்கோ நிறுவனம்தான், சாராவிக் கலவைத் தொழிற்சாலைகளை நிறுவி நடத்தி வந்தது. இந்தக் கழகம் EMPEE DISTILLERY என்னும் தனியார் பீர் தொழிற்சாலையை அரசுத் தரப்பில் எடுத்துக் கொண்டு பீர் உற்பத்தி செய்யத் தொடங்கியது.

இந்த அரசு பதவி ஏற்றவுடன், மலிவு விலை மதுவை ஒழித்து, அரசுத் துறையில் பீர், மது போன்றவற்றை உற்பத்தி செய்வதைக் கைவிட வேண்டும் என்ற கொள்கை முடிவு எடுத்தது.



மலிவு விலை மதுவை ஒழித்ததால், அதைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளை (பிளண்டிங் யூனிட்டுகளை) மூட வேண்டிய நிலை ஏற்பட்டது. டாஸ்கோ நிறுவனத்தின் பெரும் வேலையாகிய சாராயத் தயாரிப்பு ஒழிக்கப்பட்டபின், டாஸ்கோ நிறுவனத்தின் வேலை வெகுவாகக் குறைந்து விட்டது. அந்த நேரத்தில் இந்த பீர் தொழிற்சாலையை மட்டும் நடத்துகின்ற ஒரு சூழ்நிலை அவர்களுக்கு ஏற்பட்டது.

அதன் தொடர்ச்சியாக முந்தைய அரசு வாங்கிய பீர் தொழிற்சாலையைத் திரும்பக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தச் சூழ்நிலையில், யாரிடமிருந்து அந்தத் தொழிற்சாலையை எடுக்கப்பட்டதோ, அவருக்கே, அவர் விரும்பினால், திருப்பிக் கொடுப்பதில் முன்னுரிமை வழங்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது. இது நியாயமும் கூட. அதன்படி, ஏற்கெனவே யாரிடமிருந்து இந்தத் தொழிற்சாலையை அரசு வாங்கியதோ - அவருக்கே தற்போதைய விலை நிர்ணயிக்கப்பட்டு, அதுவும் உயர்மட்ட அதிகாரிகளையும், வல்லுநர்களையும் கொண்ட குழு நிர்ணயித்த விலைக்கே விற்கப்பட்டிருக்கிறது. கொள்கைக் குறிப்பில் சுட்டிக் காட்டியபடி, ரூ.8.02 கோடிக்கு 1989-இல் வாங்கிய இந்தத் தொழிற்சாலை இப்போது ரூ.10.44 கோடிக்கு விற்கப்பட்டுள்ளது என்பதை நினைவுப்படுத்த விரும்புகிறேன். ஒரு வேளை Empee Distillery - தனக்கு இந்த பீர் தொழிற்சாலையை வேண்டாம் என்று சொல்லியிருந்தால், டெண்டர் முறையைப் பின்பற்றி அது விற்பனை செய்யப்பட்டிருக்கும். எனவே, இதனை விற்றதில், அரசுக்கு இலாபமே தவிர எவ்வித இழப்பும் இல்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இதே சந்தர்ப்பத்தில் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இப்போது மூடிக்கிடக்கின்ற சாராவிக் கலவை ஆலைகள், ஆவினுக்குக் கொடுப்பதாகக் கொள்கைக் குறிப்பில் சொல்லியிருக்கிறதே, இதை வைத்து ஆவின் நிறுவனத்தார் என்ன செய்ய போகிறார்கள்? அவர்கள் சாராயமா தயாரிக்கப் போகிறார்கள் என்று கேட்டார்.

‘ஆவின்’ மிகப் பெரிய கூட்டுறவு நிறுவனம், சென்னை மாநகரத்தில் ‘ஆவின்’ மூலமாகப் பால் பொட்டலங்கள் வழங்கப்படுவது, உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். இதைப்போல ஏனைய நகரங்களில் பால் பொட்டலங்கள் வழங்கு வதற்கு, இந்தச் சாராவி கலவைத் தொழிற் சாலைகள் மூலமாக ஏற்பாடு செய்வதற்காகத் தான், ‘ஆவின்’ நிறுவனத்தார் சில பிளண்டிங் யூனிட்டுகளைக் கேட்கிறார்கள். சாராயப் பாக்கெட் போடும் அதே மெஷின்களைச் சிறிது மாற்றம் செய்து, பால் பாக்கெட் போட ‘ஆவின்’ நிறு வனத்தால் பயன்படுத்த இயலும் என்பதற்குத் தான் அவர்கள் கேட்கிறார்கள். ஆகவே அவர் களுக்குக் கொடுத்ததுபோக எஞ்சிய இயந்திரங் களை ஏனையவர்களுக்கும், மற்றவர்களுக்கும் விற் கலாம். எப்படி விற்பது, என்ன விலைக்கு விற்பது என்பதற்கு, அதிகாரிகளைக் கொண்டு ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சாராவி கலவை ஆலைகளின் மொத்த மதிப்பு சுமார் ரூ.22 கோடி ஆகும்.

இதே பொருள் குறித்து, மாண்புமிகு உறுப் பினர் திரு பி.வி. ராஜேந்திரன் ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருந்தார். அவருக்கும் இதில் விளக்கம் கிடைத்திருக்கும் என்று நம்புகிறேன்.

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் அயல் நாட்டு மது, பீர் போன்றவற்றைப் பொருத்த வரையில், முந்தைய காலங்களில் நடந்து வந்ததைப் போல, 5 தனியார் நிறுவனங்கள் மூலமாக அவை தயாரிக்கப்பட்டு, அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் (TASMAC) மூலம் மொத்தமாக வாங்கப்பட்டு, மூவாயிரத்திற்கும் மேற்பட்ட சில்லரை விற்பனைக் கடைகளின் மூலம், விற்பனை செய்யப்படுகிறது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

முந்தைய (தி.மு.க.) அரசின் காலத்தில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மது வகைகளுக்கும் பீர்களுக்கும், விலை நிர்ணயித்துப் பரிந்துரைக்க ஒரு குழு அமைக்கப்பட்டிருந்தது. இம்முறையினால் பல குறைபாடுகளும், அரசிற்கு இழப்புகளும் ஏற்பட்டன. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக் காலத்தில் மொத்த வியாபாரதாரராகிய தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், மார்க்கெட் நிலவரத்தை அறிந்து உற்பத்தியாளர்களுடன் கலந்துரையாடி, விலை நிர்ணயிக்கும் முறை இருந்தது. எங்கள் அரசும் அந்த முறையையே பின்பற்றலாம் என்று முடிவு செய்துள்ளது. சில்லரைக் கடையாளர்களுக்கும் மொத்த வியாபாரிகளுக்கும், ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்திற்குமேல் இலாபம் வைத்து விற்கக் கூடாது என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது. சில்லறைக் கடைகள் எல்லாம் உரிய காலத்தில் ஏலத்திற்கு விடப்படும் என்பதையும், இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

**பூவுக்குள்ளே நாகம் போல...**

மலிவு விலை சாராயத்தை ஒழித்ததில் மெத்த மகிழ்ச்சி அடையும் அதேநேரத்தில், ‘கள்ளச் சாராயம் தாராளமாகவும், ஏராளமாகவும் கிடைக் கிறது’ என்ற ஒரு சில மாண்புமிகு உறுப்பினர்கள் பழித்தும்; இல்லை, இல்லை அவை கட்டுப்படுத்தப் பட்டுள்ளது, ஏன்; பல பகுதிகளில் அறவே ஒழிக்கப்பட்டுள்ளது’ என்று பலர் பாராட்டியும் குறிப்பிட்ட கருத்துக்கள், என் கவனத்தை ஈர்த் துள்ளன.

என்னைப் பொறுத்த வரையில், ஏழை, எளிய மக்களின் வாழ்க்கையை உறிஞ்சி, அவர்களது உயிரைக் குடிக்கும் மலிவு விலை சாராயத்தை, இந்த மாநிலத்தை விட்டே விரட்ட வேண்டும்; முழுமையாக ஒழிக்க வேண்டும் என்பதில் நான் தீவிரமாக இருக்கின்றேன் என்பதை, ஆணித் தரமாக மீண்டும் கூற விரும்புகிறேன். எக்கார ணத்தை முன்னிட்டும் இந்த முடிவினைத் தளர்த்த நாங்கள் தயாராக இல்லை என்பதை, இந்த மாமன்றத்திற்குத் தெளிவாக எடுத்துரைக்கக் கடமைப் பட்டுள்ளேன்.

இதற்காக வெளியிடப்பட்டுள்ள ஆணைகளும், எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் முடிவில்லாத் தொடர்கதையாகத் தொடருமே தவிர, முடிந்து விட்ட சிறுகதையாக இருக்காது என்பதையும், இங்கே உறுதியாகத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த நோக்கத்தை அடைவதற்காக உருவாக்கப் பட்ட சிறப்புப் பிரிவைச் சார்ந்த காவல்துறை அலுவலர்களும், வருவாய்த்துறை அலுவலர்களும், சமீப காலத்தில் எடுத்துள்ள அதிரடி நடவடிக் கைகள், அதன்மூலம் கைப்பற்றிய பொருட்கள், கையாண்ட கெடுபிடி யுக்திகள், மற்றும் அவர்கள் பணியாற்றிய பாங்கு, செயல்படுத்திய வேகம், அனைத்தும் நமது பாராட்டுக்கு உரியவை ஆகும். அண்டை மாநிலத்திலிருந்து கடத்தி வரப்படும் சாராயங்களைக் கைப்பற்றுவது, கள்ளச்சாராயம் காய்ச்சும் இடங்களைக் கண்டறிந்து சோதனை யிட்டு அவற்றை அழிப்பது, மேலும் இந்த வியா பாரத்தில் ஈடுபட்ட வியாபாரிகளையும், பெரும் புள்ளிகளையும், கடத்தல்காரர்களையும் உடன் கைது செய்வது, போன்ற தீவிர நடவடிக்கை களால், இவர்களின் கொட்டம் பெருமளவு அடக்கப்பட்டு இருக்கிறது; இருந்தாலும் பூவுக் குள்ளே நாகம் இருப்பதுபோல, சில புல்லுரு விகள், கொடியவர்கள், நமது கண்காணிப்பையும், கவனத்தையும் தாண்டி, ஏதுமறியாத ஏழை மக் களின் இன்னுயிரைப் போக்கிடும் ஈனச் செயல் களைத் திட்டமிட்டுச் சில இடங்களில் செய்து விடுகிறார்கள்.

அவர்கள் சில காலம் தப்பி வாழலாம். ஆனால் மக்களின் ஒத்துழைப்பு இருந்தால், மறு நாளே அவர்கள் கைது செய்யப்படுகிற நிலைமை உருவாகிவிடும்.

ஒருபுறம் கள்ளச்சாராயத்தைத் தடுப்பது, மறுபுறம் மதுவைக் குடிப்பதால் மன வளத்திற்கும்,

உடல் நலத்திற்கும் கேடு என்ற கருத்தை நாடெங்கிலும், குறிப்பாக ஏழை எளியவர்கள் மத்தியில் வேகமாகப் பரப்பவேண்டும் என்பதில், இந்த அரசு மிகுந்த தீவிரத்தைக் கடைப்பிடித்து வருகிறது என்பதை, இந்த மாமன்றம் நன்றாக அறியும். எந்தக் கோணத்தில் நின்று பார்த்தாலும், மதுவை விலக்க வேண்டும் என்பதில், மாறுபட்ட, வேறுபட்ட கருத்துக்கள் எவரிடமும் இருப்பதற்கு நியாயம் இல்லை.

**ஓரணியில் திரளுவோம்**

மதுவை விலக்குவதை, கள்ளச் சாராயத்தை ஒழிப்பதை, ஒரு மாபெரும் சமுதாய இயக்கமாக மாற்றுவதற்கு மக்கள் முன்வர வேண்டும். மக்களிடம் அதற்குரிய பொதுக் கருத்து உருவாக்கப்பட வேண்டும்; அந்த நோக்கத்தில்தான் மாநில மட்டத்தில், பிரச்சாரக் குழு ஒன்று ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளது. மேலும் மாவட்ட, வட்டார, கிராம அளவிலும் இதுபோன்ற குழுக்களை அமைத்து, மதுவிலக்குக் கொள்கைகளின் அவசியத்தை மக்களிடம் வலியுறுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதுமட்டுமின்றி, நாடகம், சினிமா, போன்ற மக்கள் தொடர்புச் சாதனங்களை முழுமையாகப் பயன்படுத்தி, மக்கள் மத்தியில் ஒரு எழுச்சியை உருவாக்க நாம் அனைவரும் ஒரே அணியில் திரண்டிட வேண்டும்.

தீயால் ஏற்பட்ட சேதத்தைத் தடுப்பதும், அதில் சிக்குண்டோரின் உயிரையும், உடைமைகளையும் காப்பதும், அரசின் தலையாய கடமை என்ற எண்ணத்தின் செயல்பாடாகத்தான், தீயணைப்புத் துறை நிறுவப்பட்டுள்ளது. தீ விபத்தோடு நில்லாது, ஏனைய விபத்துக் காலங்களிலும், மீட்புப் பணிக்குத் தீயணைப்புத் துறையினர் பயன்பட்டு வருகிறார்கள். இதுபோன்ற பயனுள்ள மற்ற பல சேவைகளிலும் இவர்களுக்குப் பங்குண்டு.

நமது தீயணைப்புத் துறையைப் பொறுத்தவரையில், கடந்த 25 ஆண்டுக் காலமாக, நற்பணியை ஆற்றி நல்ல பெயர் எடுத்துள்ளது. நடப்பு நிதியாண்டில், ஜனவரி 1992 முடிய, தமிழகம் முழுமையும் உள்ள தீயணைப்பு நிலையங்களில், 11,982 'தீ' அழைப்புகள் வரப்பெற்று, அவற்றிற்குத் தகுந்த மேல் நடவடிக்கையும் எடுத்துள்ளது. மாநிலம் முழுவதும் தீ விபத்துக்களினால் ஏற்பட்ட பொருட்சேதத்தின் மதிப்பு, ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 10.50 கோடி ரூபாய் ஆகும். இந்தத் துறையினரால் காப்பாற்றப்பட்ட உடைமைகளின் மதிப்பு, சுமார் 53.50 கோடி ரூபாய் என்ற உண்மையும் குறிப்பிடத்தக்கது. 2,763 மீட்பு அழைப்புகளையும், 3,500-க்கு மேற்பட்ட நோயாளி ஊர்தி அழைப்புகளையும், இத்துறை சந்தித்து, நன்முறையில் கையாண்டுள்ளது.

பெரும் தீ விபத்துக்களில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், கடந்த 12.7.91 அன்று காமராசர் மாவட்டம், மீனப்பட்டி கிராமத்திலுள்ள Dawn Fireworks Industries என்ற பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். இந்தத் தீ விபத்தில் 39 பேர் உயிர் இழந்தனர். உரிய நேரத்தில் சென்று தீயணைப்புப் படை அலுவலர்களும், பணியாளர்களும் தங்கள் உயிரைத் துச்சமென மதித்துப் போராடி, 72 நபர்களைத் தீ விபத்து நடந்த இடத்திலிருந்து உயிருடன் மீட்ட சாதனை, இந்தத் துறையின் பணிகளுக்கு வைத்த மகுடம் ஆகும். இந்தத் தீ விபத்தில் சுமார் 3 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்களுக்குச் சேதம் எற்பட்டிருந்தாலும், 7 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் காப்பாற்றப்பட்டுள்ளது என்பதையும், இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

**எந்த மாநிலத்தையும்விட...**

அடுத்து, சமீபத்தில் கும்பகோணத்தில் நடந்த மகாமகம் திருவிழாவில் எடுத்த முன் எச்சரிக்கை நடவடிக்கைகளின் பயனாக, 18.2.92 அன்று எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில், இறந்தவர்களையும், காயமடைந்த நூற்றுக்கும் மேற்பட்டவர்களையும் திறமையாக மீட்டு, மிகக் குறுகிய கால கட்டத்திற்குள் அவர்களை அரசு மருத்துவமனையில் அனுமதித்து, தீயணைப்புத் துறையினர் காத்தனர் என்பதை அனைவரும் அறிவர். தமிழ்நாடு தீயணைப்புத் துறை, அகில இந்திய அளவில் தனக்கெனத் தனியொரு பெயரையும், புகழையும் பெற்றுள்ளது என்றால், அது மிகையாகாது.

மேலும் தீயணைப்பு நிலையங்களின் தேவை பற்றிப் பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் பல சந்தர்ப்பங்களில் வினவியபோதிலும், எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்குத் தமிழகத்தில்தான் தீயணைப்பு நிலையங்கள் அதிகமாக நிறுவப்பட்டுள்ளன என்பதைப் பெருமையோடு இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஆடு

ஆடுதானே என்று அலட்சியம் வேண்டாம். பால், உரோமம், உரம் இவற்றோடு அதன் இறைச்சியும், தோலும் கூட நமக்கு உபயோகப்படுகின்றன. ஆண்டொன்றுக்கு நம்நாட்டில் 41 இலட்சம் டன் இறைச்சியும், 18 இலட்சம் டன் பாலும் ஆட்டினால் கிடைக்கின்றன என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

உலகில் 557 மில்லியன் ஆடுகள் உள்ளன; ஆசியாவில் மட்டும் 322 மில்லியன். உலக உற்பத்தியோடு ஒப்பிடுகையில், ஆசிய ஆடுகள் மூலம் பெறப்படும் பால், இறைச்சி அளவு முறையே 47 சதவிகிதம், 64 சதவிகிதம் ஆகும்.

எனவே, கிராம ஏழைகளின் வருமானம்-வேலை வாய்ப்பு பெருகவும், சத்தான பால்-இறைச்சி கிடைக்கவும் ஆடுகள் அவசியம்தானே! இதற்காகத்தான், அண்மையில் புது தில்லியில் 'ஆடுகள்' பற்றி ஐந்தாவது சர்வதேச மாநாடு நடைபெற்றது.

தற்போது 205 தீயணைப்பு நிலையங்கள் உள்ள இத்துறையில், சுமார் 5,763 பேர் பணி புரிகின்றனர். இத்துறையில் 237 நீர்தாங்கி வண்டி களும், 75 நோயாளர் ஊர்திகளும், 193 இதர ஊர்திகளும், 59 சிறப்புச் சாதனங்களும் பயன் படுத்தப்பட்டு வருகின்றன. ஊர்திகளைப் பழுது பார்க்கத் தனிப் பணிமனையும், புட்டறையும் இருக் கின்றன. பணியில் செம்மை சேர்த்திட, பணி யாளர்களுக்குப் பயிற்சி அளித்திட ஒரு பயிற்சிப் பள்ளியும் இயங்குகின்றது. பழைய பழுதடைந்த ஊர்திகள் படிப்படியாக மாற்றப்பட்டு வருகின்றன.

### நவீன தீயணைப்பு இயந்திரங்கள்

குறிப்பிட்ட உழைப்புக் காலத்தை முடித்து, பயன்படுத்த இயலா நிலையை அடைந்த ஊர்தி களை ஒதுக்கிவிட்டு, அவற்றிற்குப் பதிலாகப் புதிய ஊர்திகளை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இவைகளைத் தவிர, நமது தீயணைப்புத் துறையின் இன்னொரு முக்கிய அம்சம், அடுக்கு மாடிக் கட்டடங்களிலும், பாதையே இல்லாத குடிசைப் பகுதிகளிலும், தீ விபத்தைத் தடுப்பதற் கும், அதில் சிக்குண்டவர்களை மீட்பதற்கெனவும் மிக நவீன தீயணைப்பு இயந்திரங்களை ரூ.3.32 கோடிக்கு ஜப்பான் நாட்டிலிருந்து வாங்கி, அதை இப்பொழுது பயன்படுத்திக் கொண்டு வரு கிறோம்.

இந்த இஸுசு (ISUZU) சுழல் மேஜை ஏணி, அடுக்கு மாடிக் கட்டடங்களில் விபத்துக்களில் சிக்கியவர்களை, வேகமாக வெளியேற்றி மீட்க உதவும் கருவியாகும். இந்தியாவிலேயே, நாக்பூர் தேசிய தீயணைப்புக் கல்லூரியைத் தவிர, தமிழகத் தில்தான் இதுபோன்ற நவீன சுழல் மேஜை ஏணி பயன்படுத்தப்படுகிறது.

தமிழகத்தின் எல்லா இடங்களிலும் 25 கி.மீ. தொலைவுக்கும், ஒரு தீயணைப்பு நிலையம் இருந் தாக வேண்டும்; உடனடி சேவைக்கு அது தன்னை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் என்பதில், இந்த அரசு தீவிரமாக இருக்கிறது. குறிப்பாகத் தொழிற்சாலைகள் நிறைந்த பகுதிகள், குடிசைகள், மண்டிக் கிடக்கும் பகுதிகள் போன்ற இடங் களுக்குத் தனி முக்கியத்துவம் அளித்து, தீயணைப்பு நிலையங்கள் நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. கோடைக் காலங்களில், குறிப்பாக அதிக அளவு தீ விபத்து ஏற்படா வண்ணம் தடுப்பதற்காகப் பற்கோல், (Fire Rake) கூரை கொக்கி (Ceiling Hook) போன்ற எளிய தீய ணைப்புச் சாதனங்களை, குடிசைப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள புறநகர் தீயணைப்பு நிலையங் களில் தயாராக வைத்திருந்து, அப்பகுதிகளில் இத் துறை அலுவலர்கள் இரவு பகல் எந்நேரமும் பணியாற்றுவதுடன், தீ விபத்து பற்றித் தொடர்பு கொள்வதற்கு 'வாக்கி டாக்கி' கருவிகளும் வழங் கப்படுகின்றன. இதன் காரணமாகக் குடிசைப் பகுதிகளில் ஏற்படும் தீ விபத்துக்கள் பெருமளவு கட்டுப்படுத்துவதோடு, உயிர்ச் சேதமும், பொருட் சேதமும் குறைக்கப்பட்டுள்ளன.

### மனம் உண்டு பணம் இல்லை!

இந்த அரசு ஆட்சிக்கு வந்த உடனேயே, 9 தீயணைப்பு நிலையங்களைத் திறக்க ஆணை பிறப்பித்தது. இந்த ஆண்டில் மட்டும் குளச்சல், தென்கனிக்கோட்டை, சேத்தியாத்தோப்பு, வேதா ரண்யம், மண்டபம், வில்லிவாக்கம் ஆகிய இடங் களில், புதிதாகத் தீயணைப்பு நிலையங்கள் திறக்க விருக்கிறோம் என்ற செய்தியை, மகிழ்ச்சியுடன் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கை களையெல்லாம் நிறைவேற்ற வேண்டுமென்ற மனம் எனக்கு இருக்கிறது; ஆனால் அரசு கஜானா வில் போதிய பணம்தான் இல்லை. தற்போது வரையறுத்த வருவாயும், நிதிப்பற்றாக்குறையும் இருந்தபோதிலும், தீயணைப்புப் பணியில் ஈடு படுவோரின் நலன் பேணப்பட வேண்டும் என் பதில் இந்த அரசு முனைப்பாக உள்ளது.

### நல நிதி உயர்வு

இதனை மனதில் கொண்டுதான், சென்ற வரவு-செலவுத் திட்டத்தில், இத்துறையில் பணி புரிவோருக்கு வழங்கும் உணவுப்படியை, இந்த அரசு உயர்த்தி வழங்கியது. பஞ்சால் ஆன சீருடை டெரிகாட்டன் சீருடையாக மாற்றப்பட்டது; தீயணைப்புப் படையினருக்கான நல நிதி (Benevolent Fund) அறுபது ஆயிரம் ரூபாயி லிருந்து, ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தி இந்த அரசு வழங்கியது.

தீயணைப்புப் பணியாளர்களின் நலன், இந்த ஆண்டு இந்தத் துறையில் பணிபுரிவோருக்குச் சீருடை சலவைப் படி மாதந்தோறும் பின்வருமாறு உயர்த்தி வழங்கப்படும்.

1. கோட்ட தீயணைப்பு அலுவலரின் படி ரூ.30 என்பது ரூ.40 ஆக உயர்த்தப்படுகிறது.

2. துணைக் கோட்ட தீயணைப்பு அலுவலர் மற்றும் தீயணைப்பு நிலைய அலுவலர் (நிலையப் போக்குவரத்து அலுவலர் உட்பட) ஆகியோரின் படி ரூ.20 என்பது ரூ.30 ஆக உயர்த்தப்படுகிறது.

3. லீடிங் பயர்மென் மற்றும் அவருக்குக் கீழ் (Leading Fireman & below) உள்ளோரின் படி ரூ.15 என்பது ரூ.25 ஆக உயர்த்தப்படுகிறது.

இதனால் அரசுக்கு ஏற்படும் மொத்த செலவு, ஆண்டொன்றுக்குச் சுமார் ரூபாய் 6.50 இலட்சம் ஆகும். இதனால் 5,427 பேர்கள் பயனடை வார்கள்.

வளரும் தேவைகளை விரைந்து சந்திக்க இருக்கும் அமைப்பையும், வாய்ப்பு வசதிகளையும் நவீனப்படுத்தி, புதுப்புது அணுகுமுறைகளைக் கையாண்டு, இந்தத் துறையை மென்மேலும் பய னுள்ள ஒரு சிறந்த துறையாக ஆக்கி, இதில் பணிபுரிவோர்களின் குறைகளைக் கனிவோடு பரிசீலித்து, அவர்களைப் பேணிக் காத்து, நாட்டு

மக்களின் நலம் காக்க அவர்களை முழுமையாகப் பயன்படுத்த, இந்த அரசு தீவிரமான முயற்சிகளை மேற்கொள்ளும்.

### பொது அமைதிகாக்கும் காவல் துறை

நாட்டில் அமைதியான ஒரு சூழ்நிலையை ஆக்கித் தருவது ஆட்சியின் தலையாய பொறுப்பு. குறிப்பாக மக்களின் மன அமைதிக்குச் சுற்றுச் சூழ்நிலை மிக மிக இன்றியமையாதது. இதற்குத் தான், கற்காலத்தில் இருந்து தற்காலம் வரை ஆட்சியாளர்கள் முன்னுரிமையும் முக்கியத்துவமும் கொடுத்துக் கொண்டு இருந்திருக்கிறார்கள். பப்ளிக் ஆர்டர் (Public Order) என்று சொல்லப் படுகின்ற பொது அமைதியை நேரடியாகச் செயல் படுத்தும் அரசு இயந்திரம்தான் காவல் துறை. குற்றம், கொடுமைகளைக் களைந்து, அமைதி காத்து மக்களின் உயிரையும், உடமையையும் பேணிப்பாதுகாத்துச் செயல்படும் பொறுப்பு காவல் துறையினரைச் சார்ந்ததாகும்.

சுருக்கமாகச் சொன்னால் கடமை ஆற்றும் போது தன் உயிரைப் பணயம் வைத்து மற்றவர் உயிரையும், உடமையையும் காக்க வேண்டிய கட்டாயமும் காவல்துறையினருக்கு உண்டு. எனக்குக் கிடைத்த தகவலின்படி இந்த நாட்டில், இராணுவ வீரர்கள் சண்டையிட்டு ஆண்டுதோறும் மடியும் எண்ணிக்கையைவிட, கடமையில் இறக் கின்ற காவல்துறையினர் அதிகம் எனக் கணக்கிடப் பட்டுள்ளது.

இருந்தும் இவர்களின் பணியை, பணியாற்றும் விதத்தை இங்கே பேசிய உறுப்பினர்களில் சிலர் விமர்சித்து இருக்கிறார்கள். நல்ல விமர்சனங்கள் நன்மைகளையும் வழங்கும் ஆற்றல் பெற்றவை என்பது எனக்குத் தெரியும். உறுப்பினர்களில் சிலர் காவல் நிலையங்களில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது பற்றிக் கடுமையாக இங்கே சாடி இருக்கிறார்கள். காவல்துறையினர், பரிகாரம் தேடி வருவோரிடம் பக்குவம் காட் டாது, கடுமையைக் காட்டியிருக்கிறார்கள் என் பதையும் சில இடங்களில் காவல் துறையினரே குற்றவாளிகள் உருவாகக் காரணமாக இருக் கிறார்கள் என்ற பெரும் குறைபாட்டையும் கோபத் தோடு இங்கே கோடிட்டுக் காட்டி இருக்கிறார்கள். நாட்டில் குற்றங்கள் மலிந்துவிட்டன, நடவடிக்கை எடுக்கும் தரம் போதாது என்பது போன்ற பல் வேறு கோணங்களிலிருந்து காவல் துறையினரின் செயல்பாட்டினை நமது கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தப் பின்னணியில் நீங்கள் கூறியவை அனைத்தும் உண்மையற்றவை என்று ஒதுக்கவும் முடியாது; அத்தனையும் முழுக்க முழுக்கச் சரியானது எனவும் எடுத்துக் கொள்ள வும் முடியாது.

அதே நேரத்தில், உண்மையான குறைபாடுகள் உடனடியாகக் களையப்படவேண்டும்; அவை களுக்குக் காரணமானவர்கள் இனம் கண்டு கண்டிக்கப்படவும், தண்டிக்கப்படவும் வேண்டும் என்பதில் இந்த அரசுக்கு மாற்றுக் கருத்து கிடை யாது. காவல் துறை தக்கன செய்தால் தட்டிக் கொடுப்பதும், தகாதன செய்தால் தட்டிக் கேட் பதும் இவ்வரசின் அணுகுமுறை என்பதை இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன். காவல்துறையின் இயக்கத்தில் தயக்கம் ஏற்படாதவாறு, என்னென்ன நடவடிக்கைகள் செய்யப்பட வேண்டுமோ அதைச் செய்ய இந்த அரசு தயங்காது என்பதையும் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைய சூழ்நிலையில், அரசாக இருந்தாலும் சரி; அதைச் சார்ந்த எந்த அமைப்பாக இருந் தாலும் சரி - விரைந்து செயல்படுவதில், சட்ட வழியில் தொடர்ந்து இயங்குவதில் எத்தனையோ சங்கடங்கள் இருக்கின்றன என்பதை நீங்களும் அறிவீர்கள்; நானும் அறிவேன். அளவுக்கு மீறிய மக்கள் பெருக்கம், அதனால் விளைந்த சமூக பொருளாதார சிக்கல்கள், கேடுகள் மனித நேயத் தின் வீழ்ச்சிக்கு வழி வகுத்துள்ளன. அதே நேரம் மக்கள் தமது கடமையை மறந்து உரிமையைப் பாதுகாத்துக் கொள்ளத் துடிக்கும் ஆர்வம் அதிக மாக வளர்ந்துள்ளது. இன்னொரு பக்கம், சட்டம் மற்றும்அதிகாரத்தைப்போற்றாத தன்மை, அரசியல் குறுக்கீடு, ஆகியவை சமூகத்தின் பூதாகார பிரச் சினையாக இருக்கின்றன.

இன்றைய சூழ்நிலையில், காவல் பணி ஆற்று வது மிக மிகக் கடினமான வேலைதான் என்பது நம் அனைவருக்கும் தெரியும். காவல்துறையைப் பொருத்த வரையில், இவை எல்லாவற்றிற்கும் மேலாக, அதில் போதுமான ஆட்கள் இல்லாத தோடு, துரிதமாகப் பணி புரிய உதவும் ஆயு

### காலை உணவு வாழைப்பழம்!

நம் நாட்டில் காலை உணவாக அரிசி அல்லது கோதுமைப் பண்டங் களை உண்ணுகின்றனர். ஆனால், ஜப்பானில் காலை உணவாகப் பெரும்பாலும் பாலையும், வாழைப் பழத்தையும் பயன்படுத்துகிறார்கள்.

வாழைப்பழத்தை ஜப்பான் இறக்குமதி செய்கிறது. விளை யாட்டு வீரர்கள்கூடப் போட்டிக்குப் போகும் முன்பு அதிக வைட்டமின் அடங்கிய, எளிதில் செரிக்கக்கூடிய உணவாக வாழைப்பழத்தைச் சாப் பிடுகிறார்கள். வாழைப்பழத்தை யும், பாலையும் கலந்து சுவைக்குப் பானமாகச் செய்து பருகுகிறார்கள். இதில் வைட்டமின்கள், தாதுக்கள் உள்ளன. மேலும், இந்த வாழைப் பழத்தில் பூரி கூடச் செய்து சாப்பிடு கின்றனர் என்றால் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?

தங்கள், சாதனங்கள் வண்டிகள் போதாத நிலை யும் உள்ளது.

**காவல்துறை சாதனைகள்**

இத்தனை இடர்ப்பாடுகளுக்கு மத்தியில், நமது காவல்துறை சந்தித்த சவால்கள், நிகழ்த்திய சாதனைகள், குவித்த வெற்றிகள், கடமையின் போது காட்டிய வீரம், மற்றும் வினைத் திட்பம், இவற்றையெல்லாம் ஒரு கணம் சிந்தித்துப் பார்க் கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன். அவர்களின் செயல்பாடு களைச் சில சமயங்களில் நேரடியாகவும் நான் கண்ட அனுபவத்தையும் நினைவு கூர்கிறேன். விடுதலைப் புலிகள், அவர்களுக்கு உதவிய தீவிர வாதிகள் மற்றும் பயங்கரவாதிகள், ஆகியோரின் கொட்டத்தை அடக்கி, அமளிக்காடாகி இருந்த தமிழகத்தின் ஆயுத கலாச்சாரத்தை விரட்டி அடித்து, எங்கள் ஆட்சியின் மூலம் தமிழகத்தில் அமைதியை நிலவ வைத்த பெருமை, தமிழகக் காவல்துறையினரை வெகுவாகச் சாரும் என்கிற என் கருத்தை, நீங்கள் அனைவரும் ஏற்று இருக் கிறீர்கள் என எண்ணுகிறேன்.

இந்த அரசு பொறுப்பு ஏற்கும் முன், முந்தைய அரசு காலத்தில், விடுதலைப் புலியினருக்கு அளித்த ஆதரவு, அனுசரணை, பரிவு, பச்சா தாபம், அதனால் இந்த மாநிலத்திற்கும், இந்திய நாட்டிற்கும் விளைந்த கேடு, அவர்கள் அடித்த கொள்ளை, செய்த கொலை, அச்சுறுத்தல், அடா வடித்தனம், நடத்திய கடத்தல் மற்றும் சுரண்டல் ஆகியன பற்றியும், அதன்பின் எங்கள் ஆட்சி வந்த உடன், எடுத்த அதிரடி நடவடிக்கையால், அடுக் கடுக்கான திட்டங்களால், செயல்பாடுகளால், அவர்கள் எப்படி அடக்கப்பட்டனர் என்பதையும், நான் சொல்லித் தெரிந்துகொள்ள வேண்டிய நிலையில் நீங்கள் இல்லை.

இன்றைய தினம் விடுதலைப் புலியினர் நட மாட்டம் வெகுவாகக் குறைந்து விட்டது என்ற நிலையை, இந்த அரசு உருவாக்கி இருக்கிறது. இதற்குப் பெரும் பின்னணியாக நின்றவர்கள் காவல் துறையினர் என்றால், அது மிகையாகாது. அதே நேரத்தில் இந்தப் பிரச்சினையைத் தீர்ந்து விட்ட ஒன்றாகவும் கொள்ள முடியவில்லை. எனவே இவர்களைக் கண்காணிக்கும் பொறுப்பு தொடர்கிறது.

காவல்துறையினரைக் கொண்டு கடற்படைப் பகுதிகளில் விடுதலைப்புலிகளின் நடமாட்டம் கண்காணிக்கப்படுகிறது; தமிழ்நாட்டைச் சேர்ந்த கடத்தல்காரர்களுக்கும், விடுதலைப் புலியினருக் கும் இடையே உள்ள தீய தொடர்புகளையும் அதன் விளைவாக எழக்கூடிய சட்ட விரோத நடவடிக்கைகளையும் தகர்த்தெறிய உன்னிப்பாகக் கவனிக்கப்படுகிறது. தமிழ்நாட்டிற்குள்ளே விடுதலைப் புலிகளின்பால் பரிவு காட்டி அவர் களுக்கு அடைக்கலம் கொடுத்து அவர்களின் சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு ஆதரவு தருவோர் களைச் செயலிழக்கச் செய்யப்படுகிறது; விடுதலைப் புலிகளின் பல்வேறு மறைவிடங்களைக் கண்டு பிடித்து அவர்களை வெளியேற்றும் முயற்சி தொடர்கிறது; விடுதலைப் புலிகளின் தகவல் தொடர்புச் சாதனங்கள் இன்னும் இருப்பின் அவற்றைக் கண்டுபிடித்து அழிக்கும் வேலை நடந்து வருகிறது.

விடுதலைப் புலிகள் மற்றும் அவர்களுடைய அனுதாபிகள் யாரேனும் சட்டவிரோத நடவடிக் கைகளில் ஈடுபட்டால் அவர்களை ஒடுக்குவது போன்ற பணிகள் இன்னும் தொடர்ந்து கொண்டு இருக்கின்றன. மேற்கூறிய நோக்கங்களுக்காகக் கடற்கரையை ஒட்டிய முக்கியப் பகுதிகளில் 34 சோதனைச் சாவடிகள் இயங்கிக் கொண்டிருக் கின்றன. இந்தச் சோதனைச் சாவடிகளில் லைட் மெஷின் துப்பாக்கி, ஸ்டேன் கன் (Sten Gun) துப்பாக்கி, ஏ.கே. 47 துப்பாக்கி ஆகியவற்றைக் கொண்டு காவல் துறையினர் பணியாற்றி வரு கின்றனர். கடற்கரைப் பகுதி முழுவதையும் கண் காணிக்கின்ற வகையில் வாகன ரோந்தும் நடை ரோந்தும் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. வான் வசதித் தகவல் தொடர்புச் சாதனங்களும் அதிரடிப் படையினரும், அதிவேகமாக ஓடும் வாகனங்களும், முக்கியப் பகுதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இந்தப் பணியில் 10 கம்பெனி மத்திய ரிசர்வ் படையினரும், 10 கம்பெனி தமிழ்நாடு சிறப்புக் காவல் படை யினரும் தீவிரமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அகதிகள் முகாம்கள் முறைப்படுத்தப்பட்டு உள்ளன. அகதி முகாம்களில் இல்லாத இலங்கைத் தமிழர்களும் இனம் காணப்பட்டுள்ளனர். சுருங்கக் கூறின் விடுதலைப் புலிகளுக்காக வெடிகுண்டு, வெடிமருந்து, எரிபொருள்கள், மருந்து வகைகள், சீருடை துணிகள் மற்றும் இதர பொருட்கள் வழங்கும் நபர்கள் முழு அளவில் ஒடுக்கப்பட்டுள் ளனர். கள்ளத்தனமாக வெடிகுண்டுகள் தயாரிக்கப் பட்ட இடமும் கண்டுபிடிக்கப்பட்டது. விடுதலைப் புலிகள் கள்ளத்தனமாகப் பயன்படுத்திய திறம் வாய்ந்த தகவல் தொடர்புச் சாதனங்களும், பெரும் அளவில் கண்டுபிடிக்கப்பட்டு விட்டன. இயந்திரங்களையும் ஆயுதங்களையும் வாங்குவதற் காக உலகம் முழுவதும் உள்ள இலங்கைத் தமிழர்கள் அந்நியச் செலாவணியில் செலுத்தி யுள்ள பணத்தில் இதற்கான செலவினங்கள் கண்டுபிடிக்கப்பட்டுத் தடுக்கப்பட்டுவிட்டன. விடுதலைப் புலிகளின் கொள்கை பரப்புப் பிரிவின் சார்பாகத் தமிழகத்தில் கள்ளத்தனமாக இயங்கி வந்த அச்சகம் ஒன்று காவல்துறை யினரால் கண்டுபிடித்து நிறுத்தப்பட்டுள்ளது.

**காவல்துறையினரின் மகத்தான பணி**

நமது காவல்துறையைக் கொண்டு நாகப் பட்டினம், இராமேஸ்வரம் எல்லையில் ஏற் கெனவே இயங்கி வரும் கடற்படைப் பிரிவு தவிர, புதிதாக 5 கடற்படைப் பிரிவுகள் விடுதலைப் புலிகளின் கடல் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டு உள்ளனர் இந்தியக் கடற்படை,

## சுற்றுலா

நமது நாட்டின் இயற்கை அழகினைக் கண்டு களிக்க வெளிநாட்டினர் வந்தவண்ணம் உள்ளனர். கடந்த ஆண்டு 16,77,461 வெளி நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இந்தியாவைச் சுற்றிப் பார்த்து உள்ளனர். அந்நியச் சுற்றுலாப் பயணிகளின் வரவால் ரூ.2,918 கோடி அந்நியச் செலாவணி நமக்குக் கிடைத்தது.

வெளிநாட்டுப் பயணிகளின் வரவை அதிகரிப்பதற்காக, சிறப்பு சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துதல், சுற்றுலாப் பயணிகளுக்கான வசதியைப் பெருக்குதல், வெளி நாடுகளில் விளம்பரங்களைச் செய்தல் முதலிய பணிகளில் அரசு ஈடுபட்டுள்ளது. காலத்தால் அழியாத ஓவியங்களையும், இயற்கை எழில் கொஞ்சும் இடங்களையும் காண வரும் 'வெளிநாட்டினர் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகி வருவது கண்கூடு!

—நன்றி: 'தூவானம்'

கடலோரப் பாதுகாப்புப் படை, தமிழ்நாடு காவல் துறையினர் ஆகியோர் இணைந்து எல்லா வகையிலும் செயல்படுவதால் விடுதலைப் புலிகள் தமிழ்நாட்டில் அடங்கி விட்டார்கள், ஒடுங்கி இருக்கிறார்கள் என்று என்னால் சொல்ல முடிகிறது.

நூற்றுக்கணக்கான விடுதலைப் புலிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த விஷயத்தில் காவல் துறையினரின் பணி மகத்தானது.

தி.மு.க. அரசு காலத்தில் விநியோகிக்கப்பட்ட மலிவு சாராயத்தை இந்த அரசு ஆட்சிக்கு வந்த சில நாட்களிலேயே (16.7.91-லிருந்து) ஒழித்து விட்டது என்பதை இந்த மாமன்றம் நன்கு அறியும். மலிவு சாராயத்தை ஒழித்த அதே நேரத்தில் கள்ளச் சாராயம் தனது கை வரிசையைக் காட்டி விடும் என்பதை இந்த அரசு உணர்ந்த காரணத்தால் இதற்கென ஒரு சிறப்புக் காவல் துறைப் பிரிவினை உருவாக்கியதை நீங்கள் அறிவீர்கள். அதன்பின் இந்தச் சிறப்புக் காவல் துறை பிரிவினர் தமிழகம் முழுவதும் பம்பரமாகச் சுழன்று பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டனர். கள்ளச் சாராயம் காய்ச்சும் இடங்களையெல்லாம் கண்டுபிடித்துச் சோதனையிட்டு, கள்ளச் சாராயத்தைக் கைப்பற்றி அழித்தனர்.

காவல் துறையினரும் கிராம அலுவலர்களும் இணைந்து எடுத்த நடவடிக்கைகளின் பயனால் இன்று கள்ளச்சாராயம் வெகுவாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

முதலமைச்சருக்கும், முக்கியப் பிரமுகர்களுக்கும் சிறப்புப் பாதுகாப்பு அளிப்பதற்கென ஒரு தனிப் பாதுகாப்புக் குழு காவல் துறையிரைக் கொண்டு அண்மையில் தொடங்கப்பட்டது என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். இவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பயிற்சி; வழங்கப்பட்டுள்ள ஆயுதங்கள் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளினால், இவர்கள் எல்லாம் மத்திய அரசின் கருப்புப் பூனைப் படையினருக்குச் சமமாக அமையும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளனர் என்ற நல்ல செய்தியை உங்களுக்குத் தெரிவிக்க விழைகிறேன். தமிழகக் காவல்துறையினரின் சில சிறப்புகளை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

### அகில இந்திய அந்தஸ்து

சமீபத்தில் நடந்தேறிய அகில இந்திய பணி சார்ந்த போட்டியில், நமது மாநிலக் காவல் துறையினர், பிற மாநிலக் காவல்துறையினரை வென்று பல பதக்கங்களைப் பெற்றுத் தமது அகில இந்திய அந்தஸ்த்தை நிலை நாட்டியுள்ளனர் என்ற செய்தியும் நமக்கு மகிழ்ச்சி அளிக்கிறது.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற தத்துவத்தை உலகிற்கு வழங்கிய தமிழ் மண்ணில் சாதி, சமய, இனக் கலவரங்கள் எழுவது எந்த வகையிலும் நியாயம் இல்லைதான். ஆனால் பல்வேறு மாநிலங்களில் வீசுகின்ற இந்த விஷக்காற்று, சிற்சில சமயங்களில் தமிழகத்தை நோக்கியும் தனது வீச்சை விரிவுபடுத்தி வருகிறது. இந்த வகையில் நிகழ்ந்த ஒருசில நிகழ்ச்சிகள் மிகச் சிறு சிறு காரணங்களாலும் விரும்பத்தகாதவர்களின் தலையீட்டினாலும், ஒரு சில அரசியல்வாதிகளின் தூண்டுதலாலும் உருவானவை, என்பதை இந்த மாமன்றம் நன்கு அறியும். அதே நேரத்தில் சாதி மத அடிப்படையில் வெறுப்பு உணர்ச்சியைத் தூண்டும் வகுப்புவாத சக்திகளை இந்த அரசு இனம் கண்டு, இரும்புக்கரம் கொண்டு அடக்கி உள்ளது.

1991-ஆம் ஆண்டில் 33 வகுப்புவாத மோதல்கள் நிகழ்ந்தன. அதில் 5 பேர் உயிர் இழந்தனர்; 88 பேர் காயம் அடைந்தனர். சட்டம் ஒழுங்கைக் காக்க காவல் துறையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு 11 முறை துப்பாக்கிப் பிரயோகம் நிகழ்ந்து 13 பேர் உயிர் இழந்தனர் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் அந்தச் சம்பவங்களின்பொழுது 207 காவல் துறையினரும், அதிகாரிகளும் பலத்த காயமடைந்தனர் என்ற உண்மையும் நாம் அறிந்து கொள்ள வேண்டிய ஒன்றாகும். அவ்வாறு காயம் பட்டபோதும் காவல் துறையினர் கோபத்தைக் கட்டவிழ்த்துவிடாது, நிதானத்தைக் கடைப்பிடித்தனர் என்பது பாராட்டுதலுக்குரியது; பலராலும் வரவேற்கக் கூடியது. எந்தப் பிரச்சினையையும் தீர்த்துவைக்கிற முயற்சியில், தேவையான விமர்சனங்கள் செய்யப்படுவதில் தவறில்லை. ஆனால்

(தொடர்ச்சி. 33.—ஆம் பக்கம் பார்க்க)

திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்

# கதர் கிராமத் தொழில் பணிகள்

கிராமப்புற ஏழை, எளிய மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும், அவர்களின் பொருளாதார நிலையை உயர்த்திடவும், கதர் கிராமத் தொழில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**கதர் அலகுகள்**

இம்மாவட்டத்தில் 28 கிராமிய நூற்பு நிலையங்கள், 5 கதர்த் துணைக் கிளைகள், 8 கதர் அங்காடிகள், ஒரு நேபாளித் தறி அலகு, ஒரு ஜக்காடு அலகு, ஒரு பஞ்சடைக்கும் அலகு, ஒரு பிடைம் கிடங்கு ஆகியவை செயல்பட்டு வருகின்றன.

கிராமிய நூற்பு நிலையங்கள் மூலம் 585 நூற்பாளர்களுக்கு ரூ.5.90 இலட்சம் கூலியாகவும், கதர்த் துணைக் கிளைகள் மூலம் 172 நெசவாளர்களுக்கு ரூ.1.16 இலட்சம் கூலியாகவும் வழங்கப்பட்டுள்ளது.

**கதர் மற்றும் பாலிஸ்டர் நூல் உற்பத்தி மற்றும் துணி உற்பத்தி**

கதர்நூல் உற்பத்தி 16.30 இலட்சம் சிட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் ஜனவரித் திங்கள் முடிய 6.64 இலட்சம் சிட்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. பாலிஸ்டர் நூல் 7 இலட்சம் சிட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், ஜனவரித் திங்கள் முடிய 5.07 இலட்சம் சிட்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

**கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்கள் விற்பனை**

கதர் விற்பனை இந்த ஆண்டுக்கு ரூ.65 இலட்சம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், ஜனவரித் திங்கள் முடிய ரூ.67.20 இலட்சம் விற்பனை செய்யப்பட்டதன் மூலம் இலக்கை விஞ்சியுள்ளது. கிராமத் தொழில் பொருட்கள் விற்பனை இலக்கு ரூ.20 இலட்சம் நிர்ணயிக்கப்பட்டதில் ஜனவரித் திங்கள் முடிய ரூ.16.73 இலட்சம் அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.


காலணி உற்பத்தி நிலையம் ஒன்றும், காலணி விற்பனை நிலையம் ஒன்றும், சோப்பு அலகு ஒன்றும், கிராம சில்பா ஒன்றும், தேன் பக்குவப்படுத்தும் அலகு ஒன்றும், தேனீப்பண்ணை இரண்டும், தேன் வளர்ப்பு நிலையம் நான்கும் கிராமத் தொழில் திட்டங்களைச் செயல்படுத்த இயங்கி வருகின்றன.

காலணி உற்பத்தி நிலையத்திற்கு இவ்வாண்டு ரூ.25 இலட்சம் உற்பத்திக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு ஜனவரித் திங்கள் முடிய ரூ.3.40 இலட்சம் கூலியாக வழங்கப்பட்டுள்ளது.

காலணி விற்பனை நிலையத்திற்கு இந்த ஆண்டிற்கு விற்பனைக் குறியீடு ரூ.7 இலட்சம் நிர்ணயிக்கப்பட்டதில் ஜனவரித் திங்கள் முடிய ரூ.4.63 இலட்சம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

கிராம சில்பாவிற்கு நடப்பாண்டிற்கு ரூ.7 இலட்சம் விற்பனைக் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டு





ஜனவரித் திங்கள் முடிய ரூ.4.63 இலட்சம் குறியீட்டளவு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர்களுக்குக் கிளஸ்டர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 100 சதவிகிதம் மானியத்துடன் 91 நபர்களுக்கு ரூ.6.37 இலட்சம் ஜனவரித் திங்கள் முடிய வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் பின்தங்கிய மக்களுக்காக 13 பலவகைக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துச் செயல்பட்டு வருகின்றன.

தேனீ வளர்ப்புத் தொழில் இம் மாவட்டத்தில் நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. காமனூர், வெள்ளி நீர் வீழ்ச்சி ஆகிய இடங்களில் தேனீ பண்ணை வைத்து, தேனீக் குடும்பங்கள் பெருகவும், தேன் உற்பத்தி பெருக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் 4 தேனீ வளர்ப்பு நிலையங்கள் அமைத்துத் தேன் உற்பத்தி அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கிளை நிலையங்களில் உற்பத்தியாகும் தேன்களைத் திண்டுக்கல் தேன் பக்குவப்படுத்தும் அலகில் பக்குவப்படுத்தி, அவை கதர் அங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சுயதொழில் செய்திட 130 நபர்களுக்குத் தேனீ வளர்ப்புப் பயிற்சியும், 25 நபர்களுக்குக் காகிதப் பொம்மைத் தயாரிக்கும் பயிற்சியும், 10 நபர்களுக்குச் சோப்பு செய்யும் பயிற்சியும், 10 நபர்களுக்குக் காலணி செய்யும் பயிற்சியும், 10 நபர்களுக்குத் தச்சுத் தொழில் பயிற்சியும், 40 நபர்களுக்கு நூற்பு, நெசவுப் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

மு. பிச்சையா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்.

## திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் பேரூராட்சிகளின் வளர்ச்சித் திட்டங்கள்

திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் உள்ள 24 பேரூராட்சிகளின் வளர்ச்சித் திட்டத்திற்கு, தமிழக அரசு ரூ.38 இலட்சத்து 22 ஆயிரத்து 391 அனுமதித்துள்ளது.

**ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம்**

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், 22 பேரூராட்சிகளில் 276 வீடுகள் கட்டவும், 12 பேரூராட்சிகளில் 23 சாலைகள் அமைக்கவும், 24 பேரூராட்சிகளில் 33 தார்ச் சாலைகள் அமைக்கவும், 8 பேரூராட்சிகளில் 12 கழிவுநீர்ச் சாக்கடை அமைக்கவும், 10 பேரூராட்சிகளில் 11 சமுதாயக் கூடம் கட்டவும், மேலும் பிற பணிகளுக்காக 16 பேரூராட்சிகளில் 30 பணிகள் செய்திடவும் தமிழக அரசு ரூ.38,22,391 அனுமதியளித்துள்ளது. இப்பணி தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டம்**

சித்தையன்கோட்டை, வத்தலகுண்டு, நத்தம், பண்ணைக்காடு, நிலக்கோட்டை ஆகிய பேரூராட்சிகளில் ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ், கடைகள், கிட்டங்கிகள், தங்கும் விடுதிகள், ஆடு அடிக்கும் இடங்கள், பேருந்து நிலையங்கள் கட்டுதல் போன்ற பணிகளுக்காக ரூ.97.55 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது. இப்பணிகள் வைப்பு நிதி திட்டத்தின்கீழ் பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

**குறைந்த அளவு சுகாதாரப் பணிகள்**

ஒட்டன்சத்திரம் பேரூராட்சியில் தனிநபர் கழிப்பறை கட்டுதல் திட்டத்தின்கீழ், 295 கழிப்பறைகள் கட்டுவதற்கு ரூபாய் ஒரு இலட்சத்து, 45 ஆயிரத்து 66 தமிழக அரசு அனுமதித்துள்ளது.

வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் குடிநீர் வசதி மற்றும் குடிநீர்க் குழாய் விரிவாக்கப் பணிகளுக்காக நிலக்கோட்டை மற்றும் அம்மையநாயக்கனூர் பேரூராட்சிகளுக்குத் தமிழக அரசு ரூபாய் ஒரு இலட்சம் அனுமதித்துள்ளது.

கே.பி. நல்லதம்பி
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
திண்டுக்கல் அண்ணா மாவட்டம்

# நெஞ்சையள்ளும் செஞ்சி




தென்னார்க்காடு மாவட்டத்தில், திண்டிவனத்திலிருந்து திருவண்ணாமலை மார்க்கத்தில், 25 கி.மீ. தூரம் சென்றோமானால், எழுந்து நிற்கும் மலைமீது, விண்தொட நிமிர்ந்து நிற்கின்ற செஞ்சிக்கோட்டையைக் காணலாம். ராஜாதேசிங்கால் புகழ்பெற்ற இந்தக் கோட்டையின் வயது 700- க்கு மேலாகிறது. நாயக்க வம்சத்தாரும், மராட்டியர்களும், மொகலாயர்களும், கர்நாடக நவாபுகளும், ஃபிரெஞ்சுக்காரர்களும், ஆங்கிலேயர்களும் கொலுவிருந்து அரசோச்சிய சிறப்பு மிக்கதான நெஞ்சையள்ளும் செஞ்சிக்கோட்டை வரலாறு தெரிவிக்கும் கட்டுரை இது:

தென்னாட்டில் பல்வேறு மன்னர்கள் எழுப்பிய எழில்மிகு கோட்டைகள் பல உண்டு; எனினும், இன்றைக்கும் பழைய மெருகோடு கவர்ச்சிகரமாகக் காணப்படுவது, தென்னார்க்காடு மாவட்டத்தின் வடமேற்கே, 15 மைல் பரப்பளவில் அமைந்திருக்கின்ற செஞ்சிக்கோட்டை மட்டுமேயாகும்.

ஏறத்தாழ 13-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகுதான், இந்தக் கோட்டைகள் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும் என்கிறார்கள் வரலாற்றாசிரியர்கள்.

நெஞ்சையள்ளும் செஞ்சிக் கோட்டைப் பற்றி எண்ணுகிற போது, நமக்குத் தேசிங்குராஜனைத்தான் நினைவு வரும்; ஆனால், தொடக்க காலத்தில் மலையுச்சிக் கோட்டையை உருவாக்கியவன் ஆனந்தக்கோன் என்ற சிற்றரசனே என்கிறது வரலாறு.

இளமையில் அப்பகுதியில் ஆடு மாடு மேய்த்து வந்த ஆனந்த கோனுக்கு, ஆங்கோர் பெரும் புதையல் கிடைத்ததாகவும், அதன் மூலம் தனது செல்வாக்கைப் பெருக்கிக் கொண்ட அவனே அப்பகுதிக்குத் தன்னை அரசனாக்கிக் கொண்டான் என்றும், அப்போதுதான் அந்த மூன்று மலைகளில் ஒன்றின் மீது முதன்முதல் அவனால் கோட்டை கட்டப்பட்டது என்றும் கூறப்படுகிறது. அவனது ஆட்சிக் காலத்தில்

இம்மலைக்கு 'ஆனந்த கிரி' என்ற பெயர் இருந்திருக்கிறது. பிறகு அதுவே 'இராசகிரி' என்று மாற்றம் பெற்றிருக்கிறது.

ஆனந்தக்கோனுக்குப் பிறகு 'கிருஷ்ணக்கோன்' என்பாரின் ஆட்சி அங்கே நிலவியிருக்கிறது. அப்போது, இராசகிரிக் கோட்டைக்குப் பக்கத்துக் குன்றில் இன்னொரு பாதுகாப்பு அரண் உருவாக்கப்பட்டிருக்கிறது; அப்போது முதலே இப்பகுதி 'கிருஷ்ணகிரி' என்று குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

கோனார் வமிச ஆட்சிக்குப் பின், இங்கே குறும்ப வம்சத்தார் ஆட்சிக்கு வந்தார்கள்; 'கோபிலிங்கன்' என்பான் அவர்கள் தலைவனாக இருந்தான்.

அதன்பின், விஜயநகர மன்னர்களின் ஆட்சி தொடங்கியது; கிருஷ்ண தேவராயர், கி.பி.1490-இல் இங்கே துப்பாக்கி கிருஷ்ணப்ப நாயக்கர் என்பவரை ஆட்சியில் அமர்த்தினார். கி.பி. 1521 வரை இந்த ஆட்சி நீடித்தது.

செஞ்சியை ஆண்ட முதலாவது மன்னர் இவர்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

நாயக்க மன்னர்கள் ஆட்சிக் காலத்திலேதான் செஞ்சிக்கோட்டை பலப்படுத்தப்பட்டது; செஞ்சி நகரும் விரிவாக்கப்பட்டது.

கி.பி.1649-இல் இப்பகுதியில் பீஜப்பூர் சுல்தான் ஆட்சிக் கொடி உயர்ந்தது. மாவீரன் சிவாஜி, தெற்கு நோக்கிப் பெரும்படையுடன் வந்தபோது, செஞ்சியை ஆண்ட பீஜப்பூர் சுல்தானின் ஆளுநர் நாசர் முகமது - சிவாஜியின் படைத் தளபதி சந்திப்பு நடைபெற்றது. அப்போது ரூ.50 ஆயிரம் வருவாய் உள்ள ஜாகீரைக் கொடுத்து, செஞ்சியின் ஆட்சி உரிமையைப் பெற்றுக் கொண்டான் அவன்.

மராட்டிய மன்னராட்சிக் காலத்திலும் செஞ்சிக்கோட்டை பலப்படுத்தப்பட்டதுண்டு. சிவாஜியும், சம்பாஜியும், இராமராஜா ஆகியோரும் அரசாண்ட பின் - செஞ்சிக்கோட்டையின் ஆட்சிபீடத்தில் மொகலாயர்கள் அமர்ந்தனர். ஔரங்கசீப் அரசில் பெரும் திறமையாளராக இருந்து புகழ்பெற்ற சுல்பீர் என்பவராலேயே மொகலாயர்கள் இங்கே ஆட்சிக்கு வர முடிந்தது.

பண்டில்கண்டின் தலைவர் சொரூபசிங்கிடம், செஞ்சியை அரசாளும் பொறுப்பை ஒப்படைத்தார் ஔரங்கசீப்.

மன்னர் சொரூபசிங்கிற்குச் சிங்கக்குட்டிபோல் பிறந்தவனே தேசிங்குராஜன்.

இளமை முதலே இணையற்ற வீரனாகத் திகழ்ந்தவன் தேசிங்கு. முகமதுகான் என்னும் முஸ்லீம் சிறுவனே சிறுவயது முதல் தேசிங்குடன் குறைவற்ற நட்புக் கொண்டிருந்தான்.

டில்லி பாதுஷாவிடம் - 'பஞ்ச கல்யாணி' அல்லது 'பாராசாரி' என்று குறிப்பிடப்படும் முரட்டுக் குதிரையொன்று அப்போது இருந்தது; அதை அடக்குகிற வீரனுக்கே அக்குதிரை சொந்தம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. தம்முடைய வீரத்தை வெளிப்படுத்த தக்க தருணம் வாய்த்ததாக எண்ணிச் சென்ற சொரூபசிங், அப்பந்தயத்தில் தோற்றுப்போய் டில்லிச் சிறையில் அடைக்கப்பட்டார்.

இது பற்றிய விவரங்களைத் தாய் மூலம் அறிந்தான் தேசிங்கு; குதிரையேற்றத்தில் சிறு வயதிலிருந்தே சிறந்த பயிற்சி பெற்றவனான தேசிங்கு 'அந்த முரட்டுக் குதிரையை அடக்கி எப்படியும் தந்தையை மீட்பேன்' என்று சூளுரைத்தான்.

நெஞ்சுறுதியோடும், நண்பன் முகமது கானோடும் டில்லிக்குச் சென்றான்.



செஞ்சிக்கோட்டைக்கு அருகிலுள்ள வெங்கட்ரமணா கோயிலையொட்டிக் காணப்படும் மண்டபத் தூண்கள் சிறந்த கலை நுணுக்கமும் சிற்பச் சிறப்பும் மிக்கவை. ஆயிரங்கால் மண்டபம் அமைப்பதற்காகத் தொடங்கப்பட்ட இப்பணி பாதியில் நின்றுபோனதாகத் தெரிகிறது.

குறிப்பிட்ட நாளில் - டில்லி பாதுஷாவின் அந்த முரட்டுக் குதிரையை - திரண்டு நின்று வேடிக்கை பார்த்த மக்களெல்லாம் திகைத்துப் போகும் வண்ணம் அடக்கிக் காட்டி, அதன் மீதேறி அமைதியாகச் சவாரி செய்தும் காட்டினான் வீர இளைஞன் தேசிங்கு.

அப்போது அவனுக்கு வயது என்ன தெரியுமா? வெறும் பதினைந்து மட்டுமே!

டில்லி பாதுஷா, தேசிங்கின் விருப்பப்படி அவன் தந்தையை விடுவித்தது மட்டுமல்ல; அந்தப் பஞ்சகல்யாணி குதிரையோடு, விலை மதிப்பற்ற வேறு பல பரிசுப் பொருட்களையும் சிறுவன் தேசிங்கிற்குச் சிந்தை மகிழ்ந்து தந்தனுப்பினார்.

டில்லியிலிருந்து வெற்றி வீரனாகச் செஞ்சிக்குத் திரும்பினான் தேசிங்கு. வயது முதிர்ந்த அவன் தந்தை சொரூபசிங், கி.பி.1716-இல் இயற்கை எய்தினார். அதற்கு அடுத்த ஆண்டே தேசிங்கு ஆட்சி பீடமேறினான். அது முதலே அவன் ராஜா தேசிங்கு எனப்பட்டான்.

கப்பத்தொகை தொடர்பாக - ஆர்க்காடு நவாப் சதாத் உல்லா கானுக்கும் ராஜாதேசிங்கிற்கும் பெரும்பூசல் ஏற்பட்டது.

ராஜாதேசிங்கின் படைத்தலைவனான அவன் தோழன் முகமது கான், தன் திருமணத்தின் பொருட்டு தனது சொந்த ஊரான வழுதாவூருக்குப் போயிருந்தான்.

இதுதான் சமயம் என்று ஆர்க்காட்டு நவாப் செஞ்சியின் மீது முன்னறிவிப்பு ஏதுமின்றிப் போர் தொடுத்தான். ஆர்க்காட்டுப் படையானது அணிவகுத்து வருவது பற்றி, ஒற்றர் மூலம் அறிந்த ராஜா தேசிங்கு, உடனே தன் உயிர் நண்பனும் படைத்தலைவனுமான முகமது கானுக்குச் செய்தியனுப்பினான். மணமேடையில் இருந்த முகமதுகான் இதையறிந்து இதயம் குமுறினான்.

'முதலில் தேசிங்குராஜனுக்கு வெற்றி தேடித்தருவேன்; பிறகுதான் திருமணம்' என்று கூறிக் கொதித்தவனாய்க் குதிரை மீதேறி செஞ்சிக்குப் பறந்தான்.

ராஜாதேசிங்கைச் சந்தித்து 'நானிருக்க பயமேன்' என்று சொல்லாமல் சொல்லி, புயல் வேகத்தில் போர்க்களம் புகுந்தான். அவன் வாள் வேகத்திற்கு ஈடுகொடுக்க அங்கே யாராலும் முடியவில்லை. எதிர்ப்பட்டோர் தலைகளெல்லாம் பந்தாடப்பட்டன.



★ மாவட்டங்கள் நம்மைப் பிரிப்பதில்லை; இதுபோன்றே மாநிலங்களும் நம்மைப் பிரிக்க முடியாது; மொழி வேறுபாடுகளும் நம்மைப் பிரிக்க முடியாது!

'களத்தில் இனி எவருமில்லை வெற்றி நமதே' என்ற களிப்போடு வெற்றிச் செய்தியை ராஜாதேசிங்கிற்கு அறிவிக்க வீரன் முகம்மது கான் அரண்மனைக்குத் திரும்பினான்.

அப்போது, போர் மரபை எண்ணாமல்-எதிர்பாராமல் மறைந்திருந்து தாக்கிய கொடியவன் ஒருவனால் முகமதுகான் கொல்லப்பட்டான்.

தோழன் முகமதுகான் சூழ்ச்சியால் வீழ்த்தப்பட்டதறிந்து, பெரும் படையோடு களம் நோக்கிக் கனல் போல் எழுந்தான் ராஜாதேசிங்கு. நீலவேணி எனப்பட்ட பஞ்சகல்யாணிக் குதிரை, வாயு வேகம் மனோ வேகம் என்பார்களே? அப்படிப் பறந்தது அமர்க்களம் நோக்கி.

இதைக் கேள்விப்பட்டுக் குலை நடுங்கிப் போனான் ஆர்க்காட்டு நவாப். செஞ்சியை அடுத்த சங்கரா பரணியாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்படுத்திவிட்டால் தேசிங்கின் போர்க்களப் பயணத்திற்குப் புள்ளி வைக்கப்பட்டுவிடும் என்று எண்ணினான்; முடிவில் - மேல்மலையனூர் ஏரி, தேவனூர் ஏரி, மேலச்சேரி ஏரி ஆகியவைகளின் கரைகளை உடைத்து, ஆற்றில் நீர் பெருகச் செய்தான்.

'பெருநெருப்புக்கு ஈரமில்லை' என்பார்களே? அதேபோல ஆர்க்காட்டு நவாபு இந்த வகையில் போட்ட கணக்கு தப்புக் கணக்காகி விட்டது; அந்த வெள்ளப் பெருக்கையெல்லாம் துச்சமெனக் கடந்து பறந்தது தேசிங்கின் குதிரை.

ஆர்க்காட்டு நவாப் முகாமிட்டிருந்த இடத்தை நோக்கி - அவனது படைவியூகங்களைத் தகர்த்து ராஜா தேசிங்கு பறந்து சென்றபோது, பகைவனொருவனால் - பஞ்சகல்யாணியாம் குதிரை நீலவேணியின் ஒரு கால் வெட்டப்பட்டது. துள்ளித் துடித்துக் குதிரை கீழே விழ- பாய்ந்தெழுந்த தேசிங்கு ராஜன் எதிர்பாராமல் எதிரி முகாமிலிருந்து வெடித்த பீரங்கிக் குண்டுக்குப் பலியானான். இந்தக் கொடுமை நடந்தது கி.பி. 1714 அக்டோபர் 14-ஆம் நாளில் ஆகும்.

நடுங்கிப் போயிருந்த நவாப், பெருமூச்சு விட்டுக் கொண்டான். 22 வயதே உடைய இளைஞனான தேசிங்குராஜனின் உடலை செஞ்சிக்கு உரிய மரியாதையுடன் எடுத்து வரச் செய்தான்; இந்து சமய முறைப்படி தன் முன்னிலையிலேயே இறுதிச் சடங்குகள் நடைபெறச் செய்தான்.

கணவன் தேசிங்குராஜனின் பிரிவுத்துயரால் அவனது இளம் மனைவியும் உடன் உயிர்நீத்தாள்.

செஞ்சியைக் கைப்பற்றிய நவாப் சாதத் உல்லாகான் இந்த வெற்றிக்காக மகிழ முடியாத அளவுக்கு மனம் கலங்கிப் போனான்; இத்தனை இளமையில் இவ்வளவு வீரமா? என்று ராஜாதேசிங்கைப் போற்றி வியந்தான். ஆர்க்காட்டுக்கு அருகிலேயே ஓர் சிற்றூர் உருவாக்கி, அதற்கு 'இராணிப்பேட்டை' என்று பெயரிட்டான்.

நெஞ்சையள்ளும் நினைவுச் சின்னமான செஞ்சிக்கோட்டை மட்டுமல்ல; இராணிப்பேட்டையும் கூட தேசிங்குராஜனின் தேயாப் புகழை நினைவூட்டிக் கொண்டிருப்பதை நாம் இன்றும் காணலாம்; அவனாண்ட அந்தக் கால வீர வாழ்வை எண்ணிக் களிக்கலாம்.

- புலவர் பழனி. சாமியப்பன்.

பெரியார் மாவட்டத்தில்

# சமுதாய நலப் பணிகள்

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்கு 1991-92-ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடாக 7,870 நபர்களுக்கு ரூ.245.945 இலட்சம் பெறப்பட்டுள்ளது. பயன்தாரார்கள் தேர்வு 20 ஊராட்சி ஒன்றியங்களிலும் நடத்தப்பட்டு தகுதியுள்ள பயன்தாரார்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். வங்கிகளில் கடன் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. இதுவரை 7,500 பயனாளிகளுக்கு ரூ.162 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. இதில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் 3,025 நபர்களுக்கும் மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

**ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம்**

1991-92-ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் செயல்திறன் மற்றும் நிதி ஒதுக்கீடு நிர்ணயிக்கப்பட்டு அரசு ஆணை வரப்பெற்றுள்ளது. 1,950 தொகுப்பு வீடுகள், 110 தார்ச் சாலைகள், 125 கப்பிச் சாலைகள், 79 ஊராட்சி மன்றக் கட்டடங்கள், 22 பள்ளிக் கட்டடங்கள், 22 சத்துணவு மையக் கட்டடங்கள், 18 பாலங்கள், 761 ஊராட்சிப் பணிகள் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைப் பணிகளுக்காகவும், 450 சமூகக் காடுகள் அமைக்கவும் 20 கசிவுநீர்க் குட்டைகள் மற்றும் 17 சிறு பாசனக் குளங்கள் அமைக்கவும் ரூ.846.69 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் ரூ.146.550 இலட்சம் மதிப்பில் 106 பள்ளிக் கட்டடங்களும், ரூ.64.653 இலட்சம் மதிப்பீட்டில் 92 புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்களும், ரூ.7.200 இலட்சம் மதிப்பீட்டில் 48 தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கவும், ரூ.135.670 இலட்சம் மதிப்பீட்டில் 404 ஊரகக் குடிநீர்களுக்காகவும், ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் 3,500 தெரு விளக்குகள் அமைக்கவும், ரூ.381.71 இலட்சம் மதிப்பீட்டில் 196 கி.மீ. சாலைப் பராமரிப்பு மற்றும் ரூ.27.640 இலட்சம் மதிப்பீட்டில் 22 கசிவு நீர்க் குட்டைகள் அமைக்கவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆக மொத்தம் ரூ.833.423 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண ஊக்குவிப்புத் திட்டம்:**

விதவை மறுமண ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ் 1991-92-ஆம் ஆண்டிற்கு ரூ.35,000 கூடுதல் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டது. தற்போது ரூ.5,000 மட்டும் உள்ளது. உரிய பயன்தாரர் பெரியார் மாவட்ட சமூக நல அலுவலருக்கு விண்ணப்பித்து பயன்பெறக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**கருப்புக் கண்ணாடி மற்றும் மடக்கு ஊன்றுகோல் வழங்குதல்**

கண் பார்வையற்ற நபர்களுக்குச் சமூக நலத்துறை மூலம் கருப்புக் கண்ணாடி மற்றும் மடக்கு ஊன்று கோல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வுதவியை இதுகாறும் பெறாத, இரண்டு கண்களிலும் பார்வையற்ற நபர்கள், மாவட்டச் சமூகநல அலுவலருடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு மேற்படி உதவியைப் பெற்றுக் கொள்ளலாம்.

**ஆதிதிராவிட விவசாயிகளுக்குப் பாதி விலையில் வேளாண் இடுபொருட்கள்**

பெரியார் மாவட்டத்திலுள்ள ஆதிதிராவிட விவசாயிகளின் நலனுக்காக ஆதிதிராவிட சிறப்பு நலத் திட்டத்தின் கீழ், ரூ.3.3 இலட்சம் மானிய உதவியுடன் வேளாண் இடுபொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அமோக விளைச்சல் தரும் புதிய ரக நெல் மற்றும் சிறுதானிய விதைகள், பருத்தி மற்றும் பயறுவகை விதைகள், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள், நுண்ணூட்டச் சத்து உரங்கள் ஆகியவற்றை வாங்கிடும் ஆதிதிராவிட விவசாயிகளுக்கு இத்திட்டத்தின் கீழ் 50





சத மானிய உதவிகள் வழங்கப்படுகின்றன.

விவசாயி ஒருவருக்கு அதிகபட்சம் ரூ.750 வரை மானிய உதவிகள் கிடைக்கும். சிறப்பு உணவு தானிய உற்பத்தித் திட்டத்தின் கீழ் ஏற்கெனவே மானிய உதவிகள் பெற்றிருந்தால் அதையும் சேர்த்து மொத்தம் ரூ.750 வரை மானிய உதவியைப் பெறலாம். ஆண்டுதோறும் ஒரே விவசாயியே தொடர்ந்து மேற்கண்ட பயன்களைப் பெறுவதைக் கட்டுப்படுத்தும் பொருட்டு புதிய விவசாயிகள் இத்திட்டத்தின்கீழ் பயனடைய ஆவன செய்யப்பட்டுள்ளது. இவை தவிர, எண்ணெய் வித்து விதைகள், தென்னங்கன்றுகள் ஆகியன ரூ.1.7 இலட்சம் மானிய உதவியுடன் விவசாயிகளுக்குப் பாதி விலையில் வழங்கப்படுகின்றன.

சிறப்பு அரிசி உற்பத்தி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இதுவரை ரூ.19 இலட்சம் மதிப்புள்ள மானிய உதவிகள் இம்மாவட்டத்திலுள்ள நெல் சாகுபடியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 32,480 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

வேளாண்மைக்குத் தேவைப்படும் குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன் வசதிகளைப் பெரியார் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியும் அதனுடன் இணைக்கப்பட்ட 230 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளும் வழங்கிவருகின்றன.

1992 ஜனவரி திங்கள் முடிய குறுகிய காலக் கடன் ரூ.1327.54 இலட்சமும், மத்திய காலக் கடன் ரூ.203.32 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளன. இதில் குறுகிய காலக் கடன் நலிவுற்ற பிரிவினருக்கு ரூ.753.21 இலட்சமும், மத்தியக் காலக் கடன் நலிவுற்ற பிரிவினருக்கு 193.72 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளன.

வேளாண்மை முன்னேற்றத்திற்குத் தேவையான நீண்ட காலக் கடன் வசதிகளை அளிக்கப் பெரியார் மாவட்டத்தில் 12 கூட்டுறவு நிலவள வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. 1991-92-ஆம் ஆண்டுக்கு ஜனவரி 1992 திங்கள் முடிய ரூ.174.71 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

**பட்டு வளர்ச்சித் துறை - தாளவாடி**

தாளவாடி உதவி இயக்குநர் அலுவலகம் பெரியார் மாவட்டம் சத்தியமங்கலம் வட்டத்தில் தாளவாடி மற்றும் கடம்பூர் மலைப்பகுதிகளை உள்ளடக்கியது. இங்கு சுமார் 4,000 மல்பரி பரப்புச் சாகுபடியில் உள்ளது.

1991-92-ஆம் ஆண்டு குறியீடு 400 ஏக்கருக்கு 1992 ஜனவரித் திங்கள் முடிய 436 மல்பரி புதிய நடவு மேற்கொண்டு சாதனை அடைந்துள்ளது.

**மாவட்டத் தொழில் மையம்**

படித்து வேலையற்ற இளைஞர்களுக்கு இந்தியப் பிரதமரின் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 1990-91-ஆம் ஆண்டிற்கான 400 நபர்களுக்கு எதிராக 1992 ஜனவரி மாதம் முடிய மொத்தம் 365 நபர்களுக்கு ரூ.72.80 இலட்சம் வழங்கப்பட்டது. இதில் 3 ஆதிதிராவிடர்களுக்காக ரூ.0.65 இலட்சம் அடங்கும். இத்திட்டத்தின்கீழ் 1991-92-ஆம் ஆண்டிற்குக் குறியீடு 400 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஜனவரி 1992 வரை 721 நபர்களுக்கு ரூ.160.35 இலட்சம் கடன் வழங்க வங்கிக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதில் 200 நபர்களுக்கு ரூ.43.43 இலட்சம் கடன் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மற்றும் 100 நபர்களுக்கு ரூ.25.13 இலட்சம் பட்டுவாடா செய்யப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்ற 18 வயது முதல் 35 வயதுக்குட்பட்டுள்ள ஆண்/பெண்களுக்குக் குடும்ப வருமானம் ஓராண்டுக்கு வருடம் ரூ.10,000-க்கு மிகாமல் இருந்தால் சொந்தமாகத் தொழில் அமைத்து வாழ்க்கையில் முன்னேற வாய்ப்புள்ளது.

**பட்டு வளர்ப்புத் துறை - ஈரோடு**

கடந்த ஆண்டில் 3.50 மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டன. நடப்பாண்டில் 4 மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளன. ஜனவரி 1992 வரை 3,12,945.650 கிலோ பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இதன் மதிப்பு ரூ.469.41750 இலட்சம் ஆகும்.

நடப்பாண்டில் 600 ஏக்கர்கள் அளவில் மல்பரி பயிர் இறைவை சாகுபடியின் கீழ் கொண்டுவர இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஜனவரி 1992 வரை 601.00 ஏக்கர்களில் மல்பரி இறைவையின் கீழ் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

பட்டு வளர்ச்சி பயிற்சிக்கென நடப்பாண்டிற்கு 200 பட்டு விவசாயிகளக்குப் பயிற்சியளிக்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ரூ.60 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஜனவரி 1992 வரை 200 பட்டு விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பயிற்சி பெற்ற விவசாயிகளுக்கு 1992 ஜனவரி மாதம் வரை ரூ.34,358 உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

1991-92-ஆம் ஆண்டிற்கு 15 பட்டு நூற்பகங்கள் அமைக்கக் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஜனவரி 1992 வரை 24 நூற்பு இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

**மாவட்டப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை**

பிற்பட்ட வகுப்பினர்களுக்குப் பிரிமெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டத்தின்கீழ் ரூ.1,52,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.76,211 செலவு செய்யப்பட்டு இதனால் 3,299 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளனர். போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் ரூ.15,08,000 ஒதுக்கீட்டில் ரூ.14,62,456 செலவு செய்யப்பட்டு 5,615 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளார்கள். இலவசக் கல்வித் திட்டத்தின்கீழ் ரூ.8,62,000 ஒதுக்கீட்டில் ரூ.8,61,136 செலவு செய்யப்பட்டு 1,112 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளார்கள்.

இலக்கிய விருந்து:




# காவியமும் கற்பனையும்

**வித்துவான் எம்.சி.கண்ணபிரான்**

காவியம் கற்போருக்கு ஒரு பெரும் நந்தவனம், மலர் வனத்தில் பல நிறமுள்ள மலர்கள் ஒளிர்கின்றன. மணமிகுந்த மலர்கள் கமழ்கின்றன. நிறமும் மணமும் இனிமையும் அழகும் அமைந்த அரும்புகள் மலர்ந்து மகிழ்ச்சி தருகின்றன. அது போல் கவிஞரின் உள்ளத்தில் தோன்றும் எண்ணங்கள் அழகும் இனிமையும் சுவையும் உணர்வும் தரும் கவிகளாக மலர்ந்து மகிழ்ச்சி தருகின்றன. பாக்களாகிய மலர்களுக்குக் கவிஞர் உணர்வும் கவர்ச்சியும் ஊட்டி உணர்த்துகின்றனர். அங்ஙனம் செய்வதே கற்பனை அல்லது புனைந்துரை எனப்படும். கற்போர் உள்ளத்தில் உவகை தோற்றுவிப்பதே கற்பனை செய்வதன் முக்கிய நோக்கமாகும். கவிஞர், மக்கள் மனப்பாங்குக்கு ஏற்றவாறே கற்பனை செய்து தம் கவிகளை இயற்றுகின்றனர். ஆதலால் காவிய வனங்களில் கற்பனை நிறைந்த கவிமலர் பலவற்றைக் காண்கிறோம். மக்கள் வழக்கத்தில் பயன்படுத்தும் முறைகளைக் கவிஞர் மேற்கொண்டு காவியங்களை இயற்றுகின்றனர்.

மணி அடிக்கிறது. அப்போது, 'பள்ளிக்குச் செல்லும் நேரமாயிற்று; பாடசாலைக்குப் போ' என்கிறாள் பாட்டி. 'பாடசாலைக்குப் பிள்ளைகள் வரும் நேரமாயிற்று என்று விரைந்து செல்லுகிறார் ஆசிரியர்' 'வண்டி புறப்படும் காலம் நெருங்கிற்று' எனப் பிரயாணம் செய்யும் ஒருவன் வேகமாகச் செல்லுகிறான். வியாபார சம்பந்தமாய் வெளியூர் சென்ற மகன் 'வரவில்லையே' என்று ஏங்கி எதிர்பார்க்கும் ஒரு தாய்க்கு 'இன்று வருவான்' என்றும் கூறும் பாட்டி 'அதோ மணி கூட அடிக்கிறது. கட்டாயம் இன்று வருவான்' என்கிறாள். மணி அடிப்பது எதற்கு என்பதை அப்பாட்டியும் அறிவாள். ஆனாலும், அப்போது பாட்டி கூறும் கருத்தோடு அம்மணியோசையாகிய நிகழ்ச்சியைச் சம்பந்தப்படுத்திக் காட்டுகிறாள். தான் கூறுவதை அம்மணியோசை ஆமோதிப்பதாக உறுதி செய்வதாக எடுத்துக் காட்டுகிறாள். மக்கள் இது போலவே, ஏதேனும் ஒன்றைக் குறித்துப் பேசும்போது அப்போது நிகழும் பல்லி சொல்லுக்கோ மக்கள் தும்மலுக்கோ மதிப்புத் தந்து தங்கள் பேச்சோடு அவற்றையும் சம்பந்தப்படுத்திக் கூறுகின்றனர்.

வெளியே சென்ற தலைவன் வருவதாகக் கூறிய மாலைக் காலம் வந்ததும் ஒரு காதலி தன் நாயகன் வருவான் என்று எதிர்பார்த்து வராதபடியால் வருத்தப்படுகிறாள்.

மன்னன் வரக் காணேன்
மாலை வந்தது ஈதோ;
மாலை கட்டி நானே,
மகிழ்வாய் சூடுவேனே.

என்று தலைவியின் வருத்தத்தை நாம் எளிய பாடலில் எழுதி மகிழ்கின்றோம். இவ்வாறே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே எழுதிய 'முல்லைப் பாட்டு' என்னும் ஒரு நூலில் தலைவி தன் தலைவன் வருகையை எதிர்பார்த்து வராமையால் வருந்தியிருக்கிறாள். அதை அறிந்த தோழி ஆற்றுவிக்கிறாள். அதற்கு, அவள் நான் வெளியே போய் நின்று, 'தலைவர் இப்போது வருவாரா?' என்று எண்ணி நின்றேன். அங்கே ஒரு நற்சொற் கேட்டது. அதாவது, வீட்டிலிருந்து காலையில் மந்தைக்குச் சென்ற தாய்ப் பசு, அந்திப் பொழுதாகியும் வராமையால் தூணில் கட்டப்பட்டிருந்த கன்று 'அம்மா' எனக் கதறியது. ஆங்கிருந்த ஆயர் மங்கை 'இப்பொழுது வருகுவார் தாயார்' என்று கூறினாள். அந்தச் சொல்லைக் கேட்டு வந்தேன் 'ஆனால் தலைவர் வருவார்' என்று கூறித் தோழி தலைவியை ஆற்றுவிக்கிறாள். இந்நிலையினை இலக்கணத்தில் விரிச்சிக் கேட்டல் என இலக்கணமும் வகுத்துள்ளனர். பிற்காலத்தார் இவ்வாறு கேட்டு வந்ததைத்தான் அசரீரி என்று கூறினர். போலும், சரீரம்-உடல், அ-சரீரம்-உடலற்றது. நேரில் உருவத்தைக் காணாமல் குரல் ஓசை ஒன்றை மட்டுமே கேட்பதனால் பிற்காலத்தார் அங்ஙனம் கூறினர் என்று கொள்வதற்கும் இடமுண்டு.

இன்றும் ஒரு வேலையின் பொருட்டு நாம் வெளியே செல்லும் போது வாயிற்படி தடுத்தாலும், காலில் கல் பட்டாலும், 'போகும், வேலை முடியாது; புறப்படும்போது தடுக்கிறது' என்று கூறுகின்றோம். காலிலோ தலையிலோ படுவதற்கும், கருதிச் செல்லும் வேலைக்கும் யாதொரு தொடர்பும் இல்லாதிருந்தும் வழக்கில் தொடர்புபடுத்திக் கூறுகின்றதை நம்மிற் பலரும் அறிகின்றோம். அவ்வகையான உலக இயற்கையை உணர்ந்த புலவர்கள் உலகிற்கு இயற்றித் தரும் காவியங்களில் அதை அமைத்து அழகு செய்கின்றனர்.

வில்லிபாரதத்தில் கூறும் ஒரு நிகழ்ச்சியைக் காணுவோம்; துரியோதனன் கண்ணபிரானைத் தன் படையில் சேர்த்துக் கொள்ளுவதற்கு அழைப்பதற்காக அஸ்தினாபுரத்திலிருந்து துவாரகைக்குச் செல்லுகின்றான். அப்போது துவாரகையின் மதில் மேல் அமைக்கப் பட்டுள்ள துணி கட்டிய கொடிகள், காற்றால் அசைகின்றன. அந்நிகழ்ச்சி இயற்கையில் நிகழ்கிறது. ஆனால், அதை ஆசிரியர் கதை நிகழ்ச்சியோடு சம்பந்தப்படுத்துகிறார். கதைப் போக்குடன் தொடர்புபடுத்துவதிலும் கதாபாத்திரமாகிய துரியோதனன் மனநிலை உணர்ந்து செய்வதாகக் கூறுகிறார். 'கொடிகள் தன் துணிகளாகிய கைகளால், 'பாண்டவர்க்கு அல்லாமல் கண்ணன் படைத்துணை ஆக மாட்டான்; மீண்டு நீ போ' என்று தடுப்பன போன்றன' என்கிறார்.

'ஈண்டுநீ வரினும் எங்கள்
எழிலுடை எழிலி வண்ணன்
பாண்டவர் தங்கட்கு அல்லால்
படைத்துணை ஆகமாட்டான்
மீண்டுபோ கென்றென்று
அந்தவியன் மதில் குடுமிதோறும்
காண்தகு பதாகை ஆடைகைகளால்
தடுப்ப போன்ற.'

என்பது வில்லியின் வாக்கு.

இதே கொடி அசைவைக் கம்பர் இராமாயணத்துள் இராமனை வரவேற்பதற்காகப் புனைந்துரைக்கின்றார். விசுவாமித்திரர் இராம இலக்குமணரை அழைத்துக் கொண்டு மிதிலை நகர்நோக்கிச் செல்லுகின்றார். முன்னே இராமரும் விசுவா



மித்திரர்க்குப் பின்னே இலக்குமணருமாக மிதிலை நகரின் மதிலுக்கு அருகே நடந்து செல்லுகின்றனர். மதில்மேலுள்ள கொடிகள் அசைக்கப்படுகின்றன. 'தாமரை! போன்ற கண்களுடைய இராமபிரானே, நாங்கள் செய்த தவத்தால் செந்தாமரையில் இருந்து நீங்கி இலக்குமி இங்கு வந்திருக்கிறாள். விரைந்து வாருங்கள்' என்று அழைப்பது போலக் கொடிகள் அசைந்தன என்று கம்பர் கற்பனை செய்கிறார்.

'மையறு மலரினீங்கி யான்
செய்மாதவத்தின் வந்து
செய்யவள் இருந்தாள்' என்று
செழுமணிக்கொடிகள் என்னும்
கைகளை நீட்டி அந்தக் கடிநகர்
கமலச் செங்கண்
ஐயனை ஒல்லைவா என்றழைப்பது
போன்ற தம்மா.'

என்பது கம்பர் கூறும் கற்பனைச் செய்யுள்.

இவ்வாறு இயற்கை நிகழ்ச்சியைத் தடுப்பது வரவேற்பது எனக் கற்பனை செய்து கூறும் நிலை பெரிய புராணத்திலிருந்து எடுத்தாளப்பட்டதாகக் கருத இடமுண்டு. சேக்கிழார் பெரிய புராணத்தில் இரு வேறுவகைக் கொடிகள் மாளிகை மேல் ஆடின என்று கூறுகிறார். திருக்கோவலூரில் தங்கிச் சேதி நாட்டை ஆண்டு வந்த மலை நாட்டு மன்னனாகிய மெய்ப்பொருள் நாயனாரை வெல்லக் கருதிய பகை மன்னன் சிவனடியார் வேடந் தாங்கி முத்திநாதன் என்னும் பெயருடன் செல்லுகிறான். அவன் செல்லும் வீதியில் மாளிகை மீது இரு கொடிகள் ஆடுகின்றன. 'ஒன்று பெண்களின் கூந்தலாகிய கருநிறமுள்ள கொடிகள், மற்றொன்று ஒளியுள்ள வெண்ணிறக் கொடிகள், பகை மன்னன் மெய்ப்பொருள் நாயனாரின் பக்தியை அறிந்து வஞ்சகமாக வெல்ல எண்ணி,

'மெய்யெலாம் நீறுபூசி
வேணிகள் முடித்துக் கட்டிக்
கையினில் படைகரந்த புத்தகக்
கவளி ஏந்தி
மைபொதி விளக்கே என்ன
மனத்தினுள் கறுப்புவைத்துப்
பொய்தவ வேடங்கொண்டு
புகுந்தனன் முத்தநாதன்'.

என்கிறார். அதற்கேற்றவாறு வெளிக்கோலத்தை வெண்ணிறக் கொடிகள் வரவேற்கின்றன. உட்கோலத்தைக் கூந்தலாகிய கருநிறக் கொடிகள் வரவேற்கின்றன. வஞ்சகமாய் மன்னனை வெல்ல எண்ணிய தீய எண்ணத்தைக் கொண்ட மனத்திற்கேற்றவாறு கருநிறக்கொடி மாதவ வேடத்திற்குத் தக்கவாறு வெண்ணிறக் கொடி என இரு கொடி ஆடுவதை ஆசிரியர் கூறுகிறார். இவை முறையே, மாறித் தடுப்பன போன்றன என்பதும் கொள்ளலாம்.

'மாதவ வேடங்கொண்ட
வன்கணான் மாடந்தோறும்
கோதைசூழ் அளகபாரக்
குழைக்கொடி ஆட, மீது
சோதிவெண் கொடிகள் ஆடும்
சுடர்நெடு மறுகிற் போகிச்
சேதியர் பெருமான் கோயில்
திருமணி வாயில் சேர்ந்தான்.'

என்பது சேக்கிழார் செம்மொழியாகும். இப் பாடலில் வரவேற்றன கொடிகள் என்று கூறாவிட்டாலும், உட்கோலத்தைக் கண்டு கூந்தலாகிய கொடிகள் ஆட அதற்கு மேலே இருக்கும் கொடிகள் மறுப்பதுபோல ஆடுகின்றன என்னும் குறிப்பையே எடுத்துக் கொண்டு இரு ஆசிரியர்களும் மேலும் புனைந்துரை செய்துள்ளனர் போலும்,

இனி, 'சூரியன், சந்திரன் மறைவதையும் தோன்றுவதையும் இவை போன்ற பிற இயற்கை நிகழ்ச்சிகளையும் கதைக்கேற்றவாறு கதாபாத்திரங்களோடு சம்பந்தப்படுத்திக் கூறுகின்றனர். காவியங்களில் பல இடங்களில் இவைகளைக் காணலாம். ஓர் உதாரணங் காட்டுவேன். சூரியன் மறைவதைக் கம்பர் தசரதன் இறந்ததால் குலத்திற்குத் தலைவனாகிய சூரியன் கடலில் மூழ்கினான் எனக் கற்பிக்கிறார். உறவினர் ஒருவர் இறந்ததால் உடனே தலை முழுகுவர். அதனால், சூரியன் கடலில் மூழ்கினான் என்கிறார். சூரியனுக்கும் தசரதனுக்கும் உள்ள தொடர்பை விளக்க ஆசிரியர். ஆழ்ந்து யோசிக்கிறார். இராமர் பிறப்பதற்கு இடமாக இருந்து பழங்குலத்திற்குச் சூரியன் தலைவன் ஆதலால் கடமையைச் செய்வது போலக் கடலில் மூழ்கினான் என்கிறார்.

'படஞ்செய் நாகனைப் பள்ளி
நீங்கினான்
இடஞ்செய் தொல்குலத்
திறைவன் ஆதலால்
தடஞ்செய் தேரினான்
தானும் நீரினால்
கடஞ்செய் வானெனக் கடலில்
மூழ்கினான்.


இவ்வாறு கவிஞர் உலகில் உணரும் இயற்கைகளை, காவியங்களில் அழகு செய்து அமைத்துச் செல்லுகின்றனர்.

- நன்றி: 'ஆவண அமுதம்'.

## உலக செஸ் வீரர்கள் வரிசையில் சென்னையைச் சேர்ந்த ஆனந்த்

**உலக செஸ் வீரர்கள் வரிசையில் சென்னையைச் சேர்ந்த விஸ்வநாதன் ஆனந்த் 5-வது இடத்தைப் பெற்றிருக்கிறார். உலக செஸ் சங்கம், ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச செஸ் வீரர்களைத் தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுத்து அறிவிப்பு செய்து வருகிறது. இந்த ஆண்டு முடிவடைவதையொட்டி, 1992-ஆம் ஆண்டின் முன்னணி செஸ் வீரர்கள் 10 பேரைத் தேர்ந்தெடுத்து இந்தச் சங்கம் அண்மையில் அறிவித்தது. இந்த 10 முன்னணி வீரர்களில் இந்தியாவின் ''கிராண்ட் மாஸ்டர்'' விஸ்வநாதன் ஆனந்த் 5-வது இடத்தைப் பிடித்திருக்கிறார். உலக செஸ் அரங்கின் பத்தாவது நிலையில் இருந்து ஐந்தாவது நிலைக்கு உயர்ந்துள்ளார் இந்தியாவின் செஸ் மேதை ஆனந்த்.**

**1992-ஆம் ஆண்டின் முன்னணி செஸ் வீரர்கள் 10 பேரில் ஆசியா கண்டத்திலிருந்து ஆனந்த் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதும், மகிழ்ச்சிக்குரியதுமாகும். இந்த வரிசையில் ரஷியாவைச் சேர்ந்த காரி காஸ்பரோவ் முதலிடத்தில் இருக்கிறார்.**



# தண்டமிழ் வளர்க்கும்

# தமிழ்ப் பல்கலைக்கழகம்

முனைவர்

**சி. பாலசுப்பிரமணியன்**

துணைவேந்தர்

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர்

தமிழ்மொழி இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழாய் அதன் இலக்கிய இலக்கணங்களுடன் செம்மையாக அமைந்துள்ளது. இலக்கணத்தில் எழுத்து, சொல், யாப்பு, அணி என்ற நான்கினோடு பொருளுக்கு அகம், புறம் என இருவகை இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது. இப்பொருள்இலக்கணம் இடைக்காலச் சோழர் ஆட்சியில் முறையே அமைக்கப்பட்டுள்ளது. சோழ வளநாட்டின் காவிரித் தாயின் நற்கருணையால் வளங்கொழிக்கும் சோறுடைத்த வளநாடாம் தஞ்சைத் தரணியில் மாமன்னன் இராசராசன் புகழ் பாடும் பொதுவுடையார் வீற்றிருக்கும் பெருநகரில் தமிழ் மணம் பரப்ப வந்துதித்த சிகரமே 'தமிழ்ப் பல்கலைக்கழகம்'.

தமிழுக்குத் தமிழ்ச் சங்கம் ஏற்படுத்திய 'தமிழவேள் உமாமகேசுவரனார்' அவர்கள் அறுபது ஆண்டுகளுக்கு முன்பே 'நம் தமிழ்நாட்டில், நம் மொழிக்கெனப் பல்கலைக்கழகம் காணமுயன்றோமா?' என ஏக்கம் தெரிவித்தார்கள். அத்தமிழ்ச் சான்றோரின் ஏக்கம் 1981 செப்டம்பர் 15-ஆம் நாள் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளன்று அன்றைய தமிழக முதல்வராக இருந்த மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.இராமச்சந்திரனார் அவர்களின் பெருமுயற்சியால் அப்போதைய மேதகு தமிழக ஆளுநராக இருந்த திரு. சாதிக் அலி அவர்கள் கொண்டு வந்த ஒரு விரைவுச் சட்டத்தின்கீழ், நிறைவேறியது. முழுமையாக அகவை பத்து நிறைவெய்துள்ள இப் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தராக முதுமுனைவர் வ.அய்.சுப்பிரமணியனார் அவர்கள் பொறுப்பேற்றார். இவரது முயற்சியால், பல்கலைக்கழக நல்கைக் குழுவின் (U.G.C.) சட்டவிதி 2(அ) பிரிவின் கீழ்த் தமிழ்ப் பல்கலைக்கழகத்தை, நடுவண் நிறுவனங்களின் நல்கை பெறத்தக்கது என ஏற்றுக்கொண்டது.

தண்டமிழின் வளர்ச்சிக்கென்றே மாண்புமிகு முன்னால் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களால் இதனுடன் இணைப்புப் பெற்ற கல்லூரி (Affiliated College) எதுவும் இல்லாத ஓர் உயர் ஆய்வு மையமாகத் தோற்றுவிக்கப் பெற்ற இப் பல்கலைக்கழகம், இலங்கை, மலேசியா, மொரீசியசு, தென் ஆப்பிரிக்கா, பிஜி போன்ற பிற நாடுகளில் வாழுகின்ற தமிழர் நலன் காத்து, பண்டையச் சுவடிகள், கல்வெட்டுகள் ஆகியவற்றை ஆய்ந்து உண்மையை வரலாற்றுச் சான்றுகளை வெளிக்கொணர்தல், தமிழ்க் கல்வியை மேம்பாடடையச் செய்து, தமிழ் ஆராய்ச்சியினை வளப்படுத்தி, தமிழ் மொழியைப் பயிற்றுமொழியாக்கி தமிழ்மொழியை உலக அரங்கில் தனக்குரிய இடத்தைப் பெறவதைத் தலையாயக் குறிக்கோளாகக் கெண்டு விளங்குகிறது.

தொடங்கப்பெற்ற காலத்தில் தஞ்சை 'அரண்மனை வளாகத்தில்' பணியினைத் தொடங்கிய இப் பல்கலைக்கழகத்தினை, விரிவான

அளவில் உலக அளவில் பலரும் போற்றவேண்டுமென்ற உயர்ந்த நோக்கங்கொண்ட அந்நாளைய தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர், புலக் கட்டடங்களின் உருவ அமைப்பினை 'தமிழ்நாடு' என்ற சொல்லில் வருகிற 'த, மி, ழ், நா, டு' ஆகிய எழுத்து வடிவங்களைப் போல இருக்கவேண்டும் எனவும், தமிழ் நாட்டின் வரைபடத்திலுள்ள மாவட்டத் தலைநகர் மற்றும் ஆறுகளின் வழித் தடங்களையொத்த அலுவலக வளாகம் இருக்கவேண்டுமெனவும் கண்ணும் கருத்துமாக இருந்தார்கள்.

தற்போது 'ழ்' வடிவக் கட்டடம் செயல்பாட்டில் இருந்து வருகிறது. மையத்தில் அமைந்துள்ள நூலகக் கட்டடம் வட்ட வடிவில் அமைத்து, பார்வைக்கு நம் நாடாளுமன்றக் கட்டடத்தினை ஒத்த அமைப்பில் அமைந்துள்ளது. இந் நூலகக் கட்டடத்தினைச் சுற்றி அரைவட்ட வடிவில் 'தமிழ்நாடு' என்ற எழுத்தமைப்பில் தனித்தனிக் கட்டடங்கள் விரைவில் உருவாக இருக்கின்றன.

ஐம்பெரும் காப்பியங்களால் அணிசெய்யப்பட்ட தமிழ் மொழியைப் போல ஐம்புலத்துறையால் தமிழ்ப் பல்கலைக்கழகம் அணிசெய்யப்பட்டுள்ளது எனலாம்.

இலக்கியம், மொழியியல், நாட்டுப்புறவியல், இந்திய மொழிகள் பள்ளி, தத்துவமையம், மலையின மக்கள் ஆய்வுமையம் (உதகை) இவற்றைக் கொண்டது மொழிப் புலம்.

ஓலைச்சுவடித் துறை, அரிய கையெழுத்துச் சுவடித்துறை, கல்வெட்டியல் துறை, நீரகழாய்வு மையம் ஆகியற்றைக் கொண்டது சுவடிப்புலம்.

இசை, நாடகம், சிற்பம் என்ற மூன்று துறைகளைக் கொண்டது கலைப்புலம். அயல்நாட்டுத் தமிழ்க் கல்வி, மொழிபெயர்ப்பு, தொகுப்பியல் சமூகவியல், அறிவியல் தமிழ்-வளர்ச்சி முதலான துறைகளைக் கொண்டமைந்தது வளர்தமிழ்ப் புலம். மற்றும் அறிவியல் புலத்தில் சித்த மருத்துவம், தொல் அறிவியல், தொழில், கட்டடக் கலை, கணிப்பொறி ஆகியன அடங்கியுள்ளன.


இவை தவிர, நீண்ட கால-குறுகிய கால ஆய்வுத் திட்டங்களை உள்ளடக்கிய சில துறைகளும் உள்ளன.


தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் பல்துறைகளிலும் பல்துறை அறிஞர்களைக் கொண்டு அவர்களின் ஆய்வுப் பணிகளை மக்கள் பெறுகின்ற வகையில் அதனை அச்சுருவாக்கி வருவதில் முதலிடம் வகித்து வருகின்றது.

இந் நூற்றாண்டின் இறுதிக்குள் அனைவருக்கும் கல்வி என்ற அரசின் இலக்கினைக் கருத்தில்கொண்டு, தஞ்சைத் தரணியை அடுத்துள்ள பகுதிகளில் முதியோர்க்குக் கல்வி புகட்டும் உயர்நோக்கில் 'எழுத்தறிவுத் திட்டம்' ஒன்றினையும் நடத்தி வருகின்றது. இப் பல்கலைக்கழகத்தின் நூலகம் 'செய்திச் சேகரிப்பும் நூலகக் கண்காணிப்பும்' என்னும் துறையின்கீழ் தமிழில் உள்ள அனைத்துத் தரவுகளையும் (Data) சேகரித்துத் தொகுத்து ஆய்வுக்கு உதவும் சீரிய நோக்கத்துடன் செயல்பட்டுவருகின்றது. தமிழ்ப் புலவர் பெருமக்கள் தம் சொந்தப் பயன்பாட்டிற்காகத் தங்கள் இல்லங்களில் சேகரித்து வைத்திருந்த பல அரிய நூல்களையெல்லாம் வாங்கிப் பாதுகாப்பாக இந் நூலகத்தில் வைத்துள்ளோம். ஓர் இலட்சத்திற்கும் மேற்பட்ட நூல்களைக் கொண்ட இந்நூலகத்தில், தமிழில் வெளிவருகின்ற அனைத்துப் பருவ இதழ்களும் (Journals) ஆங்கிலத்தில் நூறு பருவ இதழ்களும் வரவழைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மொழிப் பயிற்சிக்கென ஒலித்தட்டுகள், பன்னாட்டு நில வரைபடங்கள், ஒளி வில்லைகள், நுண்படச் சுருள்கள் (Micro film) முதுபெரும் தமிழ் அறிஞர் பெருமக்களின் உருவப் படங்கள் ஆகியனவற்றை இங்குக் காணலாம். கணிப்பொறித் தகவல் மையம் (Computerized Information System) மூலம் இங்குள்ள நூற்பட்டியலைப் பெற்று எளிதில் நூல்களை எடுக்கக்கூடிய அளவிற்கு உயர்ந்துள்ள இந் நூலகம், இந்தியாவிலேயே தலைசிறந்ததொரு நூலகம் என்று சொல்லுமளவிற்கு மேலோங்கி வருகின்றது எனலாம்.

பண்டைய தமிழர் நாகரிகம், அவர்களின் சமுதாய வரலாறு, பண்பாடு ஆகியனவற்றை நமக்குப் புலப்படுத்தவல்ல ஓர் அருங்காட்சியகத்தை உள்ளடக்கியது இப் பல்கலைக்கழகம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

துறைதோறும் துறைதோறும் தமிழ்மொழியை வளர்க்கவேண்டும்; வளப்படுத்தவேண்டும்; உயர்த்தவேண்டும், அதனோடு தமிழராகிய நாமும் உயர்ந்து தலைநிமிர்ந்து நிற்கவேண்டுமென்கிற வகையில் தமிழில் பல்துறை ஆராய்ச்சி நூல்களை நாளும் அழகுற வெளியிட இப் பல்கலைக்கழகத்தில் அண்மைப் புதுமையுடன்கூடிய அச்சுக்கூடம் ஒன்றும் செயல்பட்டுவருகின்றது. இதன் வாயிலாக இலக்கணம், இலக்கியம், கல்வெட்டு, நாட்டுப்புறக் கலைகள், இசை, நாட்டியம், சமயம், அறிவியல் ஆகிய பல்வேறு துறை சார்ந்த இருநூறுக்கும் மேற்பட்ட அரிய ஆராய்ச்சி நூல்களை





வெளியிட்டுள்ளது. அவற்றில் சில நூல்கள் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் பரிசினைப் பெற்றுள்ளன. தமிழில் அறிவியல், மருத்துவம், பொறியியல் ஆகிய துறைகளில் பல விளக்க நூல்களையும் இப் பல்கலைக்கழகம் வெளியிட்டுக் கொண்டு வருகின்றது.

இப் பல்கலைக்கழகத்தின் முதல் பட்டமளிப்பு விழா 24.3.1984-இல் நடைபெற்றது. இவ் விழாவில் தமிழ் மொழி, கலை, பண்பாடு இவற்றிற்காகப் பாடுபட்ட ஐவருக்கு முனைவர் (டாக்டர்) பட்டங்கள் வழங்கப்பட்டன. மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர், சு.மு. கௌரி சங்கர தபதி, திருவெண்காடு ப. சுப்பிரமணிய பிள்ளை, தவத்திரு. தனிநாயக அடிகள் ஆகியோர்க்கு 'இலக்கிய முதுமுனைவர்' பட்டமும், தி.சு. அவினாசிலிங்கம் செட்டியாருக்கு 'அறிவியல் முதுமுனைவர்'ப் பட்டமும், வழங்கப்பட்டன. தற்பொழுது 11.12.1991-இல் நடந்த சிறப்புப் பட்டமளிப்பு விழாவின்போது 'அருள்மொழி அரசு' என அனைவராலும் புகழ்ந்து போற்றப்படும் திருமுருக. கிருபானந்த வாரியார் சுவாமிகள் அவர்கள், தமிழ் இலக்கிய வரலாற்றுத் துறை ஆராய்ச்சியில் சிறப்புப் பெற்று விளங்கும் பேராசிரியர் மு. அருணாசலம் அவர்கள்; சைவசித்தாந்தத்தில் வித்தகச் செல்வராக விளங்கும் சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள்; பத்தூர் நடராசத் திருமேனியை மீட்டுத் தமிழகத்திற்குக் கொண்டுவந்து சேர்த்த செம்மல் டாக்டர் எல்.எம். சிங்கி அவர்கள் ஆகிய இந் நால்வர்க்கும் 'மதிப்புறு முதுமுனைவர்'ப் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

இப் பல்கலைக்கழகப் புது வளாகத்தில் மரக்கன்றுகள் வளர்க்கும் திட்டம் ஒன்றை ஏற்படுத்தி நடுவண் அரசிடமிருந்து இதற்காகச் சுமார் பதினைந்து இலட்ச ரூபாயினைப் பெறுவதற்கான இசைவோடு இதுகாறும் சுமார் 50,000-க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. இதன்படி சுற்றுச் சூழலைக் காக்கவும், சக்தி வளங்களைப் பெருக்கவும் 'சக்தி மரக்காடுகள்' எனும் திட்டத்தின்கீழ் 3,75,000 மரக்கன்றுகள் நான்கு ஆண்டுகளுக்குள் நடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

கல்லூரி அளவிலான மொழியியல் ஆசிரியர்களுக்கு மைய அரசின் நிதி உதவியுடன் 'கணிப் பொறிப் பயிற்சி வகுப்பு' நடத்தி 'இயற்கை மொழியாய்வு-ஆசிரியப் பயிற்சித் திட்டம்' (Natural Language Processing-Teacher Training Programme) என்ற சான்றிதழ் வகுப்பும் (Certificate Course) இங்கே நடத்தப்பட்டுவருகின்றது.

வடமொழியில் உள்ள ஆகமங்கள், இயந்திரங்கள் இவற்றை எளிதில் புரிந்துகொள்ள ஏதுவாக, தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுவதற்காகத் தமிழக அரசு ஐந்தேகால் இலட்ச ரூபாய் நல்கை அளிக்கப் பெருமனத்துடன் இசைந்துள்ளது. பல்கலைக்கழக நூலக முகப்பில் 'மகரத் தோரண வாயில்' ஒன்று, ரூபாய் ஒன்பது இலட்சம் மதிப்பில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனைத் தமிழக அரசு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

ஆய்வாளர்களின் நீண்ட நாள் கனவினை நனவாக்குகின்ற வகையில், இவ்வாண்டு முதல் பல துறைகளில் எம்.ஃபில்., பிஎச்.டி., முழு நேரப் பட்டப்படிப்பு வகுப்பாகத் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், பரதக் கலைக்கென்றே பயிற்சி வகுப்பு ஒன்றும் இவ்வாண்டு முதல் தொடங்கப்பட்டுள்ளது.

மருத்துவத் துறையினை எடுத்துக் கொண்டால், இங்குள்ள சித்த மருத்துவத் துறையில் மேற்கொள்ளப்பட்ட பல ஆய்வுகள்மூலம் நீரிழிவினைத் தடுக்கவும், கொழுப்புச் சத்தினைக் குறைக்கவும், கொடிய பாம்புக் கடிக்கு மருந்தும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும், சென்னை, தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கழகத்தின் நல்கையுடன் (TNSCS & T) 'சேராங்கொட்டை திசு வளர்ப்புத் (Tissue Culture of Emdamgered Medicinal Plant Semecarpus, Anacardium) திட்டம் தற்பொழுது செயல்பட்டுக் கொண்டு வருகிறது.

இப் பெருமைமிகு தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் நாளும் ஆற்றிவருகின்ற தமிழ்த்தொண்டு எண்ணில. இப் பல்கலைக்கழக வளர்ச்சி மென்மேலும் பெருகித் தமிழின் பெருமைகளை உலகறியச் செய்து, எங்கும் தமிழ், எதிலும் தமிழ் எனச் செய்வோம்.

# கீரைகளின் மருத்துவக் குணங்கள்

**நாம்** எப்போதாவது, ஏதா வது ஒரு கீரையை உணவோடு சேர்த்துக்கொள்கிறோம்; ஆனால், அந்தக் கீரை எந்தவிதத்தில் நம் உடலுக்குப் பயன்படுகிறது என்பது பற்றியெல்லாம் நமக்குத் தெரியாது.

'இந்தக் கீரையைச் சாப்பிடு - அதற்கு நல்லது' ..... 'அந்தக் கீரையைச் சேர்த்துக் கொள் - இதற்கு நல்லது' என்று நம் வீட்டில் உள்ள பெரியவர்கள் சொல்லு வதுண்டு.

எந்தெந்தக் கீரைகள் உட்கொள் ளுவது எதற்கெல்லாம் நல்லது என் பதை முறைப்படி தெரிந்துகொள்ளு வது - சைவ உணவை உட்கொள்ளு கிறவர்களுக்கு மட்டுமல்ல; அசைவர் களுக்கும் நல்லதுதானே?

முக்கியமாகச் சில கீரைகளுக்கு உள்ள மருத்துவக் குணங்கள் என் னென்ன? அவைகளால் எந்தெந்த நோய்கள் நீங்கும்?... என்று பிரபல சித்தவைத்திய நிபுணர் டாக்டர் ஏ.ஆர்.என். துரைராஜ், R.I.M.P., அவர்களைப் பேட்டி கண்டோம்.

நாம் அவரிடம் கேட்ட வினாக் களும், அவர் நமக்களித்த விடை களும் இங்கே தொகுத்தளிக்கப் படுகின்றன:

- சந்திப்பு பி.எல்.ஆர்.



கொடிப் பசலை

**வீட்டுத் தோட்டத்தில் பயிரிடும் அரைக்கீரை, நமது உடல்நலத்திற்கு எந்த விதத்திலாவது உதவுகிறதா?**

ஆமாம்; நிறையவே உதவுகிறது. அரைக்கீரையை ஓர் உன்னத சஞ்வீசி என்றேகூட சொல்லலாம். அந்த அளவிற்கு நம் உடல்நலிவை நீக்குவதாக இருக்கிறது இந்தக் கீரை.

ஜுரம், நடுக்கம், வளி நோய், மலச்சிக்கல், குளிர் ஜுரம், ஜல தோஷம், ஜன்னி, சீதளம், நரம்புத் தளர்ச்சி, பலவீனம், கபரோகம், வாய்வு சம்பந்தமான வியாதிகள் - உடல்வலி, நீரக்கோவை, வாத நோய், சளி, இருமல், வாத ஜுரம், பிடரி நரம்பு வேதனை, நரம்பு வலி, மண்டைப் பீநீசம் - போன்ற பல துன்பங்களைப் போக்க வல்லது அரைக்கீரை.

இதில் உள்ள நார்ச்சத்தானது செரிமானத்திற்கும் நல்லது; ஆகவே இதைத் தினசரி சாப்பாட்டில் சேர்த் துக் கொள்ளலாம். இழந்த தாது வைத் திரும்பப் பெறவைக்கிற

இந்தக் கீரையானது, சிறுவர் சிறு மியர் நல்ல நினைவாற்றல் கொள்ள வும்கூட உதவி செய்யும். தலைமுடி கருகருவென்று வளரவும் உதவு கின்றது இக்கீரை. இதைப் பத்தியத் தில் இருப்பவர்களும் சேர்த்துக் கொள்ளலாம்.

**அருகம் புல்லுக்கு மருத்துவக் குணம் ஏதாவது உண்டா?**

உண்டு. அதிகாலையில், அருகம் புல் சாறு ஒரு மண்டலம் - அதாவது 48 நாட்கள் அருந்தி வந்தால் உஷ்ணம், பித்தம் சம்பந்தமான வியாதிகள் அடியோடு நீங்கிவிடும். முக்கியமாக இதயநோய்க்கும் இது நல்லது.

இரத்தக் கொதிப்பு, பலவீனம், மூலநோய், வெட்டை, ஆஸ்த்துமா, தலைபாரம், வயிற்றுநோய், உதிரப் பெருக்கு, மார்பு வலி, மூளை பாதிப்பு, கைகால் வலி, குடைச்சல், சொறி, சிரங்கு, ரண காயங்கள் ஆகியவற்றைக்கூட அருகம் புல் உதவியால் குணப்படுத்திவிட முடியும்.


**அகத்திக் கீரையில் என்னென்ன சத்துக்கள் இருக்கின்றன; அவை மனித உடலுக்கு எந்த வகைகளி லெல்லாம் பயன்படுகின்றன?**

இந்தக் கீரையில் இரும்புச் சத்து, சுண்ணாம்புச் சத்து, உயிர்ச்சத்து, விட்டமின் 'ஏ' ஆகியவை உள்ளன. நம் உடலில் உள்ள எலும்புகள் வலிவடையவும், பற்கள் உறுதிபெற வும் இவை உதவும். மலச்சிக்கல் இதனால் நீங்கும்.

பச்சையாக இந்தக் கீரையை



டாக்டர் ஏ.ஆர்.என். துரைராஜ்



**வெந்தயக் கீரை**

மென்றுதின்றாலே - வாய்ப்புண், தொண்டை ரணம், தொண்டை வலி ஆகியவை நீங்கிவிடும். மூளைக் கோளாறு உள்ளவர்கள், உணவோடு அகத்திக் கீரையை அதிகம் சேர்த்துவந்தால், விரைவில் அவர்கள் நலம்பெறும் வாய்ப்பு உண்டு. தோல் வியாதிகள், கண் கோளாறு, தலைவலி, சிறுநீர் நோய், இரத்தக் கொதிப்பு ஆகியவற்றையும் இந்தக் கீரையானது நீக்கிவிடும். இதன் இலை, காய், பூ, பட்டை, வேர் ஆகிய எல்லாமே மருத்துவத்தில் பலவகையில் கையாளப்படுகிறது.

வாயுக் கோளாறு உள்ளவர்கள் இதைச் சாப்பிடாதிருப்பது நல்லது; இன்னொன்று-அகத்திக் கீரைக்குப் பத்தியத்தை முறித்துவிடும் குணமும் உண்டு; ஆகையால் பத்தியம் இருப்பவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

**ஆடோ, மாடோ தொடாத அளவிற்குக் கசப்புடைய 'ஆடா தொடை'க்கு மருத்துவக் குணம் உண்டா?**

**உண்டு. உண்டு. நம் நாட்டுக் கிராமப்புற வேலிகளிலெல்லலாம் ஆடாதொடைச் செடி காணப்படுவதால், இதைச் சாதாரணமாக நினைத்துவிட்டீர்கள் போலிருக்கிறது; நம் முன்னோர்கள் கண்டுபிடித்த மிகச் சிறந்த மூலிகைகளில் ஆடாதொடையும் ஒன்றாகும்.**

**இதன்மூலம் குணமாகும் நோய்கள் பற்றி ஒரு பட்டியலையே சொல்லுகிறேன் கேளுங்கள் - ஜுரம், சளி, ஜலதோஷம், இருமல், தும்மல், அடிக்கடி மூச்சுத் திணறல், இரைப்பு, ஈஸனோபீலியா, மூக்கடைப்பு, மூக்கில் நீர் ஒழுகுதல், கபம், மூச்சு வாங்குதல், ஆஸ்த்துமா, பிரசவச் சிக்கல், கப ஜுரம், விஷம், கக்குவான் இருமல், காமாலை, சிலந்திக் கடி, வயிற்றுநோய், மலடு, இரத்த விக்கல், ஜன்னி, பித்த ஜுரம், கோழைக் கட்டு முதலான பல துன்பங்களை நீக்கக் கூடிய அருமருந்து ஆகும் இந்த ஆடாதொடை.**

**இதனுடைய இலைமட்டுமல்ல; பூ, பட்டை, வேர் ஆகியவைகளும்கூட மருத்துவத்தில் நன்றாகப் பயன்படுபவைகளாகும்.**

**ஈஸனோபீலியா நோய்க்கு ஆடாதொடையை எப்படிப் பயன்படுத்துவது?**

ஆடாதொடை இலை, வேப்ப இலை, அத்தி இலை, துளசி, முருங்கைக் கீரை ஆகியவற்றைச் சம அளவில் எடுத்துக் கொண்டு சாதம் வடித்த நீரை(கஞ்சி) ஊற்றி நன்றாக அரைத்துச் சுண்டைக் காயளவு மாத்திரை களாக உருட்டி மூன்று நாட்கள் வெயிலில் நன்றாகக் காய வைத்துக் கொள்ளவேண்டும். சாப்பாட்டுக்குப் பிறகு வேளைக்கு இரண்டு மாத்திரை வீதம் உட்கொண்டு தண்ணீர் குடிக்க வேண்டும். இப்படி முப்பது நாட்கள் சாப்பிட்டு வந்தாலே ஈஸனோபீலியா நோய் நீங்கிச் சுகம் பெறலாம்.

**ஆடு தீண்டாப்பாளை என்கிறார்களே அது என்ன?**

அதுவும்கூட கீரை வகையைச் சேர்ந்ததுதான். ஆங்கிலத்தில் இதை Worm-Killer என்பார்கள். தமிழில் போலவே மலையாளத்திலும் இதன் பெயர் ஆடுதீண்டாப் பாளைதான்!

குடற்புழு நீங்கவும், விஷப் பூச்சிக்கடி, மேகவாய்வு, கபால வலி, கருங்குஷ்டம், கரும்படை கரப்பான், அரையாப்புக் கட்டி, ரணம் ஆகியவற்றை நீக்கவும், தாது விருத்திக்கும் இது மிகவும் நல்ல மருந்தாக உதவக்கூடியது ஆகும். இதை உபயோகிக்கிறபோது உப்பு, புளி, மாமிசம், புகை ஆகியவை கூடவே கூடாது.

**மஞ்சட்காமாலைக்கு உதவுவதாகச் சொல்லப்படும் கீழாநெல்லி வேறு எதற்கெல்லாம் உதவும்?**

சோகை நோய், கல்லீரல் - மண்ணீரல் - சிறுநீரக நோய்கள், மாலைக்கண், நீரிழிவு, பெரும்பாடு, வெள்ளை வெட்டை, மேகவெட்டை, தாபம், அரிப்பு, இரத்தக் கழிச்சல் போன்ற பல பிணிகளுக்கும் இந்தக் கீழாநெல்லிக் கீரை மிக அருமையான மருந்துப் பொருளாகப் பயன்படுவதாகும்.

**நாம் அன்றாடம் உணவில் சேர்த்துக் கொள்ளுகிற கொத்துமல்லிக் கீரையால் என்னென்ன நோய்கள் விலகக்கூடும்?**

இரத்தச் சூடு, வயிறு சம்பந்தமான நோய்கள், கண் நோய், அக்னி மாந்தம், மயக்கம், பித்த வாந்தி, மனநோய், நாவறட்சி, வாய்வு, சிறுநீர்க் கடுப்பு, பலவீனம், உறக்கமின்மை, சளி, மூச்சடைப்பு, மலச்சிக்கல், ஆண்குறியில் ஏற்படும் ரணம், பேதி, பல் நோய்கள், தாது நஷ்டம், வீக்கம் ஆகியவற்றை நீக்க கொத்துமல்லிக் கீரை மிகவும் நல்லது. அதிக அளவு இரும்புச் சத்து உடையது இக்கீரை; விட்டமின் 'சி' உயிர்ச்சத்தும் இதில் உண்டு.

**நரைமுடியைக் கறுப்பாக்கும் வகையில் உதவுகிற கீரைகள் ஏதாவது இருக்கின்றனவா?**

கரிசலாங்கண்ணி கீரை மூலம் இதைச் சாதிக்க முடியுமே! எப்படி

**புளிச்சக் கீரை**



யென்றால், கரிசலாங்கண்ணி இலை 50 கிராம், கொட்டைக் கரந்தை இலை 50 கிராம் எடுத்து நன்றாகக் காய வைத்துச் சருகாக்கிக் கொள்ள வேண்டும்; பிறகு அம்மியில் வைத்துத் தட்டி சூரணம் செய்து, மெல்லியதுணியில் சலித்து வைத்துக்கொள்ள வேண்டும். தினசரி இரண்டு கிராம் சூரணத்துடன் தேன்கலந்து 40 நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் போதும்; நரைமுடி படிப்படியாகக் கருநிறம் அடையும். கரிசலாங்கண்ணி இலையைத் தேங்காயெண்ணெயில் போட்டுத் தேய்த்து வந்தால் தலைப்பொடுகும்கூட நீங்கிவிடும்.

உடலுக்கு உரம் ஊட்டவல்ல இந்தக் கீரை இரத்தத்தைச் சுத்திகரிக்கும்; மங்கலான கண்ணொளியைக் கூர்மையாக்கும்.

கரிசலாங்கண்ணி இலைச் சாறை 5 கிராம் எடுத்து, அதனுடன் மோர் கலந்து கொடுத்தால் பாம்புக் கடியால் உண்டான நஞ்சுகூட நீங்கும்; இலையைக் கசக்கி வைத்துக் கட்டினாலே தேள்கடி நஞ்சும் விலகும். இப்படி இன்னும் ஏராளமான நல்லகுணம் இந்தக் கீரைக்கு இருக்கிறது.

**உணவில் மணம் ஊட்டப் பயன்படுத்தும் கறிவேப்பிலையின் மருத்துவக் குணம் என்ன?**

பழஞ்சுரம், மந்தம், மந்தபேதி, மலக்கட்டு, வாந்தி, அம்மைத் தழும்பு, வயிற்றுவலி, அஜீரண பேதி, பித்தம், உடல் சூடு, கிரகணி, பைத்தியம் ஆகியவற்றை நிறுத்தும் மருத்துவக் குணம் கறிவேப்பிலைக்கு உண்டு. இது ஜீரணத்தைச் செம்மையாக்கிப் பசி உண்டாக்கக் கூடியதும் ஆகும்.

**அம்மைத் தழும்பு மாற அதை எப்படிப் பயன்படுத்துவது?**

ஒரு கைப்பிடி கறிவேப்பிலை இலையோடு, கசகசா 9 கிராம், கஸ்தூரி மஞ்சள் 4 கிராம் ஆகியவைகளும் சேர்த்து அம்மியில் வைத்து அரைத்துக் கொள்ள வேண்டும்; அம்மைத் தழும்புள்ள இடத்தில் அதைத் தடவி, அரை மணி நேரம் வைத்திருக்க வேண்டும்; பிறகு கடலை மாவோ, பச்சைப் பயிறு மாவோ போட்டுக் குளித்து விடலாம்.

இப்படி இரண்டு வாரம் குளித்து வந்தாலே அம்மைத் தழும்பு நிரந்தரமாக மாறிவிடும்.

**மனத்தக்காளி கீரையினுடைய சிறப்புக் குணத்தைச் சொல்லுங்களேன்?**

மணத்தக்காளி கீரையால் நமக்கு நிறையப் பலனிருக்கிறது. காய்ச்சல், உடல்வலி, களைப்பு, வலிப்பு நோய், தலைவலி, கட்டி, கல்லீரல், மலச்சிக்கல், மர்மநோய், காமாலை, வீக்கம், வைசூரி நோய், தேமல், கோழை, இருமல், வாய்ப்புண், குடல்புண், பித்த நீர், கரப்பான் நோய், க்ஷயம் போன்ற பிணிகளையெல்லாம் நீக்குகின்ற மருத்துவக் குணம் மணத்தக்காளிக்கு இருக்கிறது.

எலிக்கடி, தேள்கடி, பாம்புக்கடி ஆகியவற்றிற்கெல்லாம்கூட இது நல்லது. மணத்தக்காளிக் கீரை நம் வாய் நாற்றத்தை நீக்கும்; களைப்பைப் போக்கும்; நல்ல தூக்கம் உண்டாக்கும்; நீர்ப்பாண்டு, பெரு வயிறு ஆகியவற்றிற்கெல்லாமும் இது நல்லது.

இதனுடைய காய், பழம், வேர் எல்லாம்கூட சில மருந்துகளுக்கு உதவும்.

**முருங்கைக் கீரை எவ்வாறெல்லாம் நம்முடைய உடலுக்கு உதவுகிறது?**

பொதுவாக முருங்கைக் கீரை இரத்த விருத்திக்கு ஏற்றது. இதன் மூலம் நம் உடல் வலிமை பெறும்; மேலும், தாது புஷ்டி பெறுகிற வாய்ப்பும் கிட்டும்.

இதில் 'ஏ-பி-சி' விட்டமின்களும், தாது உப்புகளும், மாவு, புரதப் பொருட்களும், சுண்ணாம்புச் சத்து, இரும்புச் சத்து ஆகியவைகளும் அடங்கியுள்ளன. சர்க்கரை வியாதி, ஆஸ்த்துமா நோய், மாலைக்கண் போன்றவை இருப்பவர்களுக்கு இது மிகவும் நல்லது; அப்படிப்பட்டவர்கள் அடிக்கடி உணவோடு இதைச் சேர்த்துக்கொள்ளலாம்.

முருங்கைக் கீரை, பிஞ்சு, விதை, முருங்கைக் காய், மரப்பட்டை, வேர், பிசின் ஆகிய எல்லாமே பல விதத்திலும் மிக நல்ல மருந்துப் பொருளாக நமக்குப் பயன்பட்டு வருகின்றன.



சுக்காங் கீரை

**முளைக் கீரை, பொன்னாங் கண்ணிக் கீரை, வெந்தயக் கீரை, புதினா கீரை ஆகியவற்றில் ஏதாவது நோய் நீக்கும் தன்மைகள் இருந்தால் சுருக்கமாகச் சொல்லுங்களேன்?**

உட்சூடு, இரத்தக் கொதிப்பு, பித்த எரிச்சல், சொறி- சிரங்கு, உடல் உஷ்ணம், நரம்புத் தளர்ச்சி, வயிற்றுப் புண் ஆகியவற்றைப் போக்கும் சக்தி முளைக்கீரைக்கு உண்டு. இது கண்ணுக்குக் குளிர்ச்சியைக் கொடுத்து, உடலின் பலத்தைப் பெருக்கி, செரிமான சக்தியை அதிகரிக்கவும் செய்யும்.

இதயத்திற்கும் மூளைக்கும் வலிமை தரும் சக்தி பொன்னாங் கண்ணிக் கீரைக்கு இருக்கிறது. இக்கீரையில் ஏ-பி- சி போன்ற விட்டமின்களும், தாதுப்புகளும், மாவு, புரதப் பொருட்களும், சுண்ணாம்புச் சத்தும், மணிச் சத்தும், அயச் சத்தும் நிறைய அடங்கியிருக்கின்றன.

காச நோய், சொறி சிரங்கு, பார்வைக் கோளாறு ஆகியவை வெந்தயக் கீரையால் நீங்கும். இதன் இலைகள் மட்டும் உண்ணத் தகுந்தவை; தண்டும் காயும் உணவாகப் பயன்படாது. இந்தக் கீரை - பித்தக் கிறுகிறுப்பு, மாதவிடாய்க் கோளாறு, வாதநோய், மேக நோய், அக்கினி மாந்தம், வாயு, இடுப்பு வலி, மார்புவலி, மூச்சடைப்பு ஆகியவற்றுக்கெல்லாம்கூட நல்ல மருந்து ஆகும்.

மாதவிடாய்க் கோளாறுக்குப் புதினாக் கீரையும் நல்ல மருந்தாகும். வாதநோய், நரம்புத் தளர்ச்சி, பல்நோய், மலச்சிக்கல், சிறுநீர்ப் பெருக்கு ஆகியவற்றையும் இந்தக் கீரை போக்கும்.

மொத்தத்தில் - நாள்தோறும் ஏதாவது ஒரு கீரையை நாம் உணவோடு சேர்த்துக் கொண்டோமானால் எந்தவிதமான நோய்நொடியும் நம்மை அண்டாது; மிகப்பெரிய செலவு எதுவும் இல்லாமலே நோயற்ற நல் வாழ்வு நாம் வாழலாம்.

16ஆம் பக்கத் தொடர்ச்சி

விமர்சனங்களுக்காகப் பிரச்சினையைத் தேடி அலையும் நிலை உருவாகக்கூடாது.

**குடந்தை மகாமகம்**

கும்பகோணத்தில் நடந்த மகாமகம் திருவிழாவில் நடந்த சம்பவம் குறித்து தஞ்சாவூர் மாவட்டக் கூடுதல் ஆட்சியாளர், கூடுதல் மாவட்ட மாஜிஸ்திரேட் ஒரு விசாரணை நடத்தி வருகிறார். எனவே, இது பற்றி இந்த மன்றத்தில் இப்போது குறிப்பிடுவதைத் தவிர்க்க விரும்பினேன். விசாரணை அறிக்கை அரசுக்குக் கிடைத்தவுடன் இந்த மன்றத்திற்கு விவரங்களைத் தெரிவிக்கிறேன். இருந்தாலும்கூட, இதைப்பற்றி எதுவுமே தெரிவிக்கவில்லை என்றால் இதைப் பற்றிப் பேசுவதற்கே பின்வாங்குகிறேன், அஞ்சுகிறேன் என்கிற ஒரு தவறான எண்ணம் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக, இது குறித்து ஒரு சில கருத்துக்களை மட்டும் இந்த அவை முன் வைக்கலாம் என்று நினைக்கிறேன்.

கும்பகோணம் மகாமக விழாவில் மாண்டு போன பக்தர்களைப் பற்றி என்னையும் இந்த அரசையும் பலத்த விமர்சனத்திற்கு உள்ளாக்கி இருக்கிறார்கள். அந்த விழாவிற்கு வந்த பக்தர்கள் நெரிசலில் அகால மரணம் அடைந்தது துயரச் சம்பவம்தான்; துக்கச் சம்பவம்தான், சோகமானதுதான்; நான் அந்நிகழ்ச்சிக்குப் பெரிதும் மனம் வருந்தி இன்னும் அந்த சோகச் சுமையிலிருந்து விடுபட முடியாமல் தவித்துக் கொண்டு இருக்கிறேன். எனக்குக் கிடைத்த தகவலை வைத்து இந்நிகழ்ச்சியின் பின்னணியை இந்த மாமன்றத்திற்கு விளக்கிச் சொல்லி அதன் மூலம் மக்களுக்குப் புரிய வைப்பது எனது கடமை என்று கருதுகிறேன்.

12 ஆண்டுகளுக்கு ஒரு முறை கொண்டாடப்படும் இந்த மகாமகத் திருவிழாவை இம்முறை கொண்டாடுவதற்குச் சிறப்புக் கவனம் செலுத்தி ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அளவுக்கு மீறிய ஆன்மீகக் கூட்டம் இப்பெருவிழாவிற்கு வரக்கூடும் என்று கணிக்கப்பட்டு, பாதுகாப்புக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதோடு விழாவிற்கான சீரமைப்புப் பணிகள், கட்டுமான ஏற்பாடுகள், நிவாரண ஏற்பாடுகள் ஆகியவைகளெல்லாம் முன்னுரிமையோடு செய்யப்பட்டு, குறிப்பாக மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கவும், கூட்டத்தைக் கட்டுப்படுத்தி முறைப்படுத்தவும் காவல்துறையினர் சிறப்புக் கவனம் செலுத்தினர்.

இந்த விழா ஏற்பாடுகள் மற்றும் செயல்பாடுகள் குறித்து நானே உயர் அலுவலர்கள் கூட்டங்களைக் கூட்டி ஆய்வு செய்தேன். தேவையான ஆலோசனை கூறினேன்; வேண்டிய நிதியை வழங்கினேன்; அந்த வகையில் சாலைகளை மேம்படுத்த ஒரு வழிப்பாதை, இரு வழிப்பாதை ஆகியவற்றை அகலப்படுத்த - சுமார் 1.32 கோடி ரூபாயும், நகராட்சிப் பணிக்குச் சுமார் 1.75 கோடி ரூபாயும், கோவில் திருப்பணிக்காகச் சுமார் 50 இலட்சம் ரூபாயுமாகப் பல்வேறு பணிகளுக்குப் பல்வேறு கட்டங்களில் நிதி வழங்கப்பட்டது.

காவல்துறையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். 1980-ஆம் ஆண்டு நடைபெற்ற மகாமகத்தின்போது பணியில் அமர்த்தப்பட்ட காவல் துறையினரை விட இது சுமார் இருமடங்காகும்.

**இறக்க நேரிட்டதேன்?**

கும்பகோண மகாமகக் குளத்தில் ஒரு சமயத்தில் சுமார் 40 ஆயிரம் பக்தர்கள் நீராட இயலும். எனவே, பக்தர்கள் தொகுதி தொகுதியாகச் சென்ற குளத்தினுள் நீராடி வெளியேறும் வண்ணம் காவல்துறையினர் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தினர். பக்தர்கள் வடக்குப் பக்கத்திலிருந்தும் தெற்குப் பக்கத்திலிருந்தும் உள்ளே நுழையவும்; மேற்குப் பக்கம் வழியாகவும் கிழக்குப் பக்க வழியாகவும் வெளியே வரவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன.

இதேபோன்ற ஏற்பாடுகள்தான் கடந்த 1968, 1980 ஆண்டுகளில் நடந்த மகாமக விழாவின் போதும் செய்யப்பட்டிருந்தன. இம்முறை மகாமகத்திற்கு 50 இலட்சத்திற்கு மேற்பட்ட பக்தர்கள் வருகை தந்திருக்கிறார்கள் எனக் கணக்கிட்டு இருக்கின்றனர். மகாமக விழாவை ஒட்டிய மூன்று நாட்களில் மட்டும் 4,205 பேருந்துகள் இயக்கப்பட்டன; 62 தனி இரயில்கள் விடப்பட்டன. மகாமகக் குளத்திற்கு உள்ளும், குளத்திற்கு வெளியேயும், கரைகளிலும் மற்றும் அவற்றை ஒட்டியுள்ள பல வீடுகளிலும் நிரம்பி வழிந்த கூட்டத்தில், விஸ்வ இந்து பரிஷத் வைத்து நடத்திய தர்ம சாலைக்கு அருகே உள்ள பகுதியில் அச்சாலையை ஒட்டியிருந்த சுற்றுச் சுவர் மீதிருந்த இரும்புக் கம்பிகளும், தூண்களும் இடிந்து விழுந்து, அங்கு குழுமியிருந்த மக்களிடம் பீதியை ஏற்படுத்தவே, மக்கள் முண்டியடித்துக்கொண்டு தாறுமாறாக ஓட நேர்ந்தது. அப்போது ஏற்பட்ட பதட்டத்தில் நெரிசல் ஏற்பட்டு பக்தர்கள் இறக்க நேரிட்டது.

மக்கள் கூட்டம் குளத்தில் இறங்க நெருங்கியடித்துக் கொண்டதாலேயே இறந்துவிட்டனர் எனச் சொல்வது சரியல்ல. காவல்துறையினர் தடியடி நடத்தியதாலேயே மக்கள் சிதறி ஓட நேரிட்டது என்று கூறுவதும், அதனால் மரணம் நிகழ்ந்தது என்று கூறுவதும் உண்மைக்கு முற்றிலும் புறம்பானது. இந்த விபத்தில் பலியானவர்கள் அனைவருமே இடிந்துபோன சுற்றுச் சுவர்கம்பிகளுக்கு அண்மையிலே கிடந்திருக்கின்றார்கள்.

குளத்திற்குள்ளே நெரிசல் ஏற்பட்டு மரணங்கள் நிகழ்ந்திருந்தால் காவலர்களில் ஒரு சிலரும் இறந்திருக்கக்கூடும். இந்த விபத்தில் காவல்துறையினர் முறை கேடாகவோ, முரட்டுத்தனமாகவோ நடந்து கொள்ளவில்லை. அப்படி நடந்துகொண்டு இருந்தால் பொதுமக்கள் மத்தியில் அமளியும் கொந்தளிப்பும் ஏற்பட்டு இருக்கக்கூடும். காவல்துறையினர்கூட தாக்கப்பட்டிருக்கக்கூடும். இந்தத் துர்மரணங்களுக்கு முக்கியக் காரணமாக இருந்தது, உணவுப் பொட்டலங்களையும், ரட்சை மஞ்சளை

யும் மக்களை நோக்கி விஸ்வஹிந்து பரிஷத் இயக்கத்தினர் வீசியதுதான் என்று கருதவேண்டி இருக்கிறது. அதோடு காவல்துறையினரின் கட்டுப் பாட்டையும் வழிநடத்தலையும் விஸ்வஹிந்து பரிஷத் இயக்கத்தினர் அங்கங்கே எதிர்த்துச் சிறு குழப்பங்களை உண்டாக்கியிருக்கிறார்கள். போக்கு வரத்து ஏற்பாடுகள் சரியாகச் செய்யப்பட்டு இருந் ததால்தான், விபத்து நடந்த இடத்திற்கு மிக அருகில் அவசர சிகிச்சை வண்டிகளைக் கொண்டு வர முடிந்தது; காயமுற்றவர்களை மருத்துவ மனைக்கு விரைந்து எடுத்துச் செல்ல முடிந்தது; அதனால் பலரைக் காப்பாற்ற முடிந்தது.

**தவறான செய்திகள்**

இந்நிலையில் எனக்குப் பாதுகாப்புக்காகச் செல்லும் பல வண்டிகள் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டதால் பக்தர்கள் வெளியே செல்ல இயலாமல் போய்விட்டது என்ற கூற்று முற்றிலும் தவறானது. அதுபோலவே குளத்தின் பெரும்பகுதி என்னுடைய வருகைக்காக ஒதுக்கப்பட்டது என்ற செய்தியும் தவறானதாகும். மேற்குக் கரையில் ஒரு சிறு பகுதி நீங்கலாக, எஞ்சிய பகுதி முழுவதையும் பக்தர்கள் பயன்படுத்திக் கொண்டுதான் இருந்தார்கள். எனது பாதுகாப்பிற்காகச் சென்ற வண்டிகள் கூட, பக்தர்களின் பாதைகளைப் பாதிக்காதவாறு சாலையின் ஓரத்தில்தான் வரிசை யாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்ட கார்களால் பக்தர்களின் போக்குவரத்து எந்தவிதத்திலும் தடைப்படவில்லை இத்துயரச் சம்பவம் நடந்த வடகிழக்குப் பகுதி, நான் வழிபட்டுச் சென்ற இடத்திலிருந்து மிகத் தொலைவில் அமைந்துள்ளது.

> **தனக்கென்று வாழாது பிறர்க் கென்று வாழ்பவனே மனிதன். அவனது வாழ்க்கையே வாழ்க்கை.**
>
> **—தமிழ்த்தென்றல் திரு.வி.க.**

நடக்கக்கூடாத இந்தச் சோக நிகழ்ச்சி நடந்து விட்டது துரதிர்ஷ்டவசமானதுதான். அதற்காக நான் வருந்துகிறேன். இந்த அரசும் வருந்துகிறது. ஆனால் அந்நிகழ்ச்சியை வைத்துக்கொண்டு, என் னுடைய வருகையை அதனுடன் இணைத்து, என் மீது மாசு கற்பிக்கும் நோக்கத்தோடு விஸ்வஹிந்து பரிஷத் இயக்கத்தினரும், என்னை விரும்பாதவர் களும் திரித்துக் கூறுகிற உண்மைக்குப் புறம்பான தகவல்களும், பொய்களும் எனக்குப் பெரும் வேதனையை அளிக்கின்றன.

**ஆண்டவனே கூலி கொடுப்பான்**

கொஞ்சமும் சம்பந்தப்படாத என்னையும், எனது பெயரையும் இழிவு படுத்த எண்ணி, களங்கப்படுத்த முனையும், விஸ்வஹிந்து பரிஷத் இயக்கத்தினருக்கும், ஏனைய விமர்சகர்களுக்கும், ஆண்டவனே தக்க கூலி கொடுப்பான் என மட்டும் கூறிக் கொள்ள விழைகிறேன்.

இலங்கைப் போராளிகள்/தீவிரவாதிகள்/ விடுதலைப் புலிகள் தமிழகத்தில் நடமாடத் தொடங்கியதை நாம் அறிவோம். முந்தைய அரசின் காலத்தில் வெடிமருந்துவைத்துத் தகர்க்கும் நிகழ்ச்சிகள் அதிகமாகிவிட்டிருந்தன. 30-க்கும் மேற்பட்ட வெடிகுண்டு வெடிப்புகள் நிகழ்ந்தன. அதனால் பலர் இறந்தும், காயப்பட்டும் ஆக வேண்டிய நிலை ஏற்பட்டது. இப்படிப்பட்ட பின்னணியை மனதில் வைத்துத்தான், எங்களின் அரசு ஆட்சிக்கு வந்த பிறகு பயங்கரவாதிகளின் கொட்டத்தை ஒருபுறம் அடக்கவும் அதற்குத் துணையிருக்கின்ற ஏனைய சக்திகளை ஒடுக்கவும், ‘தடா’ சட்டத்தையும் தமிழகத்தில் செயல்படுத்த ஆரம்பித்தோம்.

தவறு செய்து பாதிக்கப்பட்ட சிலர், இந்தச் சட்டத்தைத் துஷ்பிரயோகம் பண்ணுகிறோம். அரசியல் நோக்கத்திற்காக அதை அனாவசிய மாகப் பயன்படுத்துகிறோம் என்று கூப்பாடு போட்டதெல்லாம் எங்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. நான் தொடக்கத்தில் சொன்ன தைப்போல, விடுதலைப் புலிகளை ஒடுக்கி இருக் கிறோம். ஆனால், அவர்களை ஒழித்துவிட்டோம் என்று சொல்லவில்லை. அவர்களுடைய நட மாட்டம் முழுவதும் கட்டுப்படுத்தப்படவில்லை. இலங்கைக்கும் அவர்களுக்கும் உள்ள தொடர்பு இன்னும் இருந்துகொண்டுதான் இருக்கிறது.

**தடா சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுகிறதா?**

இந்த மாமன்றத்தில் மீண்டும் ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். தடா சட்டத்தை இந்த அரசு வேண்டாதவர்கள் மீது நிச்சயமாகப் பாயவிடாது. எந்த நிலையிலும் தடா சட்டம் அனாவசியமாகப் பயன்படுத்தமாட்டாது என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப் படுபவர்களின் பட்டியலையும், அதன் தேவை களையும், மாநில மட்டத்தில் உள்துறைச் செயலாளர் ஆய்வு செய்வதோடு, மத்திய அரசும் இதைக் கவனிக்கிறது. இந்நிலையில் இச்சட்டம் துஷ்பிரயோகப் படுத்தப்படுவதற்கான வாய்ப்பு இல்லை என்பதை, இந்த மாமன்றத்திற்கு விளக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மானியக் கோரிக்கையின் மீது பேசிய சில மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்கள், திருட்டு, களவு போன்ற குற்றங்கள் (Property Crimes) தமிழகத்தில் மிகுந்து கொண்டு இருப்ப தாகவும், அவை இன்னும் அதிகமாகி வருவதாக வும் கூறினார்கள். கொடுக்கப்பட்ட கொள்கைக் குறிப்பில் 1990-ஆம் ஆண்டில் 36,731 குற் றங்கள் பதிவாகி இருக்கின்ற நிலையில், 1991-இல் 37,283 குற்றங்கள் பதிவாகி இருக்கின்றன. ஆனால் 1990-ஆம் ஆண்டில் களவு போன சொத்துக்களின் மதிப்பு 13.60 கோடி ரூபாய்.

1991-இல் அவ்வாறு களவாடப்பட்ட பொருள் களின் மதிப்பு 13.30 கோடி ரூபாய் ஆகும். முந்தைய ஆண்டுகளில் எல்லாம் சுமார் 5 கோடியிலிருந்து 8 கோடி வரை இருந்த களவுபோன சொத்துக்களின் மதிப்பு, 1989-90-ஆம் ஆண்டுகளில்தான், அதிக அளவுக்கு உயர்ந்து உள்ளது. இந்த ஆண்டுகளில் ஆட்சியில் இருந்தவர்கள் யார் என்பதை நான் குறிப்பிட வேண்டியதில்லை. அக்காலங்களில் தான் விடுதலைப் புலிகளும், பயங்கரவாதிகளும் தமது அடாவடித்தனத்தை அவிழ்த்து விட்டு, கடும் குற்றங்களைப் புரிந்தார்கள் என ஏற்கெனவே சொன்னேன். கொள்கைக் குறிப்பில் 1990-ஆம் ஆண்டு களவுக் குற்றக் கண்டுபிடிப்பு 65.1 சதவிகிதம் என்ற நிலையில் வைத்திருந்த தமிழகக் காவல்துறை, 1991-ஆம் ஆண்டில் 64 சதவிகிதம் என்ற நிலைக்குக் குறைந்துவிட்டது என்பதை நான் அறியாமல் இல்லை. அந்தந்த ஆண்டுகளில் நடக்கும் குற்றங்கள், அந்தந்த ஆண்டுகளிலேயே கண்டுபிடிக்கப்படுவதில்லை. நீதிமன்றத்தில் குற்றவாளிகள் தண்டனை அடைவதை வைத்துத்தான் இந்தச் சதவிகிதம் நிர்ணயிக்கப்படுகிறது. 1991- ஆம் ஆண்டிற்கான பல வழக்குகள் தற்பொழுது நீதிமன்றங்களில் விசாரணையில் உள்ளன. அவை முடியும்போது, குற்றவாளிகள் தண்டனை பெறும்பொழுது, 1991-ஆம் ஆண்டிற்கான குற்றக் கண்டுபிடிப்பு மேலும் அதிகமாக உயர்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. இருந்தாலும் கூட, நாட்டில் நடக்கும் களவு, கொள்ளை போன்ற குற்றங்கள் விரைவாகக் கண்டுபிடிக்கப்பட வேண்டும். அதற்கு உதவுகிற வகையில் நவீன சாதனங்களைக் காவல்துறை பயன்படுத்த வேண்டும். உங்களின் கருத்து எனக்கும் ஏற்புடையது என்பதால், இதைக் காவல்துறையினரும் கவனத்தில் ஏற்க வேண்டும் என்பதை அறிவுறுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

**காவல்துறை நவீனப்படுத்தப்படும்**

நமது காவல்துறையினருக்கு உதவுகிற வகையில், நவீன ஆயுதங்கள், பயிற்சிகள், அடிப்படை வசதிகள் ஆகியவற்றை வலுப்படுத்த, ஒரு மாபெரும் திட்டம் 80.45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தயாரித்து, மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மத்திய அரசும் ரூபாய் 10 கோடியை அதற்காக இதுவரை வழங்கியுள்ளது. தற்போது, ஆயுதங்கள், வெடி மருந்துகள், 200-க்கும் மேற்பட்ட ஜீப்புகள், காவல்துறைக்கான நவீன தகவல் தொடர்புச் சாதனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் காவல் துறையை நவீனப்படுத்தும் முயற்சியில் சுமார் 2.25 கோடி ரூபாய்க்கு மேல், வெவ்வேறு இனங்களில் செலவிடவும் இந்த ஆண்டில் திட்டங்கள் உள்ளன.

கடந்த வரவு செலவுக் கூட்டத் தொடரிலேயே காவல்துறையினர், தீயணைப்புத் துறையினர், சிறைத் துறையினர் ஆகியோரைத் தேர்வு செய்வதற்கென, ஒரு வாரியத்தை நியமிக்க இந்த அரசு அறிவித்து ஆணை பிறப்பித்துள்ளது. காவல் துறைத் தலைவர் பணித் தகுதியுள்ள ஒரு உயர் அலுவலரைத் தலைவராகக் கொண்டு அந்த வாரியம் இயங்கிக் கொண்டு இருக்கிறது. காவல் துறையில் தற்போது காலியாக உள்ள சுமார் 4,000 இடங்களுக்குப் பணியாளர்களை இந்த வாரியம் விரைந்து தேர்ந்தெடுத்துத் தரும். இன்னும் ஓரிரு மாதங்களில் இந்தத் தேர்வுப் பணி தொடங்கும் என்ற நல்ல செய்தியை உங்களுக்குச் சொல்வதில், மகிழ்ச்சி அடைகிறேன்.

கடந்த வரவு செலவுக் கூட்டத் தொடரில் மீண்டும் தொடங்குவதாக அறிவிக்கப்பட்டு, தற்போது இயங்கி வரும் காவல் வீட்டுவசதிக் கழகத்தின் மூலம், இந்த ஆண்டிலேயே வீடு கட்டுவதற்கென 8 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, 1,000 வீடுகளைக் கட்டி வழங்கும் செயலில், அரசு முயற்சி மேற்கொண்டு வருகிறது.

எத்தனையோ நிதி நெருக்கடிக்கு இடையிலும் கூட, சென்ற வரவு- செலவுக் கூட்டத் தொடரின் பொழுது, காவல் துறையினருக்கெனச் சில நல்ல திட்டங்களை அறிவித்தேன். அவர்களுக்கான உணவுப் படி உயர்த்தப்பட்டது. சீருடை பணியாளர் தேர்வாணை வாரியம் ஏற்படுத்தப்பட்டது. கடமை ஆற்றும்பொழுது வீர மரணம் எய்திய காவல்துறையினரின் குடும்பத்திற்கு உதவி வழங்கப் பட்டது. பயணப்படி, தினப்படிகளில் சலுகைகள் வழங்கப்பட்டன. தமிழ்நாடு காவல்துறை சேமநல நிதி உயர்த்தப்பட்டது. சீருடை மானியம் உயர்த்தப் பட்டது. அதுபோலவே இந்த ஆண்டிற்கென 21 புதிய திட்டங்களை வழங்க அரசு முடிவெடுத்திருக்கிறது. அவை இந்தத்துறை விரைந்து செயல் படுத்துவதற்கென அடிப்படை வசதிகளை வழங்குகின்ற பல்வேறு திட்டங்கள் ஆகும். ஏறத்தாழ 80 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள இத்திட்டங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

**காவல்துறை குடியிருப்புகளில் கழிப்பிடம்**

தற்போது 17 மாவட்டங்களில் உள்ள 135 காவல்நிலைய, காவல்துறை குடியிருப்புகளில் உலர் கழிப்பிடங்கள் (Dry Latrines) பல ஆண்டுகளாக உள்ளன. சுகாதாரக் கேடு விளைவிக்கும் இந்தக் கழிப்பிடங்களையெல்லாம் நீக்கி, அதற்குப் பதிலாக நீரடிக் கழிப்பிடங்களாக (Flush out latrines) அவற்றை அவர்களுக்கு வசதி செய்து கொடுக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது.

அனைத்துச் சுகாதார வசதிகளும் கூடிய நீரடிக் கழிப்பிடங்கள் ரூபாய் 70 இலட்சம் செலவில் உடனடியாக நிறுவப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**காவல்துறை ஓய்வு விடுதி**

பணி நிமித்தம் சென்னை நகருக்கு வரும் காவலர், தலைமைக் காவலர், உதவி ஆய்வாளர் போன்ற கீழ்நிலைப் பணியாளர்கள் குறைந்த

வாடகையில் தங்கிப்போகிற வகையில், நடப்பு ஆண்டில் ஓய்வு விடுதியொன்று ரூபாய் 10 இலட்சம் செலவில் கட்ட இந்த அரசு தீர்மானித்துள்ளது.

**காவல்துறை உணவுமானியத் திட்டம்**

1980-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு, தற்போது வரை நடைமுறையில் உள்ள, காவலர்களுக்கு இன்றியமையாப் பொருட்களை, உணவுப் பொருட்களை 50 சதவிகித மானியத்தில் வழங்கும் திட்டம் சீரமைக்கப்பட்டு, இன்றைய விலைவாசி நிலையில் 50 சதவிகித மானியம் என்று உயர்த்தி வழங்க ஆணையிடப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த முடிவு 1.4.92 முதல் செயல்படுத்தப்படும். இதனால் அரசுக்கு ரூபாய் 1.50 கோடி வரை ஆண்டொன்றுக்குக் கூடுதலாகச் செலவாகும். இத்திட்டத்தினால் 68,000-க்கு மேற்பட்ட பணியாளர்களின் குடும்பங்கள் பயன்பெறும்.

**கூடுதல் அமைச்சுப் பணியாளர்கள்**

காவல்துறையில் அமைச்சுப் பணியின் வேலைப் பளுவைக் கருத்தில் கொண்டு, அரசால் நியமிக்கப்பட்ட 1981-ஆம் ஆண்டு ஆய்வுக்குழு பரிந்துரைத்த 2,150 கூடுதல் அமைச்சுப் பணியிடங்களில் இதுவரை பல்வேறு காலகட்டங்களில் வழங்கப்படாமல் உள்ள, 80 கூடுதல் அமைச்சுப் பணியாளர்களையும் ஒட்டு மொத்தமாக இந்த அரசு இந்த ஆண்டு வழங்கும் என அறிவிக்கிறேன். இதனால் ஆண்டொன்றிற்கு ஏற்படும் மொத்தச் செலவு ரூபாய் 30 இலட்சம் ஆகும்.

**காவல்துறையில் சார் ஆய்வாளர் நேரடி நியமன விகிதம்**

காவல்துறையில் சார் ஆய்வாளர் பதவிக்கு நேரடித் தேர்வு மூலமும், பதவி உயர்வு மூலமும், நடைமுறையில் உள்ள சிறப்பு விதிகளின்படி, 70 சதவிகிதம் நேரடி நியமனமாகவும், 30 சதவிகிதம் பதவி உயர்வு மூலமாகவும் நிரப்பப்படுகிறது. பல ஆண்டுகளாகப் பணிபுரிந்து வருகின்ற காவலர்களுக்கு, காவலர் நிலையிலிருந்து பதவி உயர்வு வழங்கி ஊக்கப்படுத்தும் வாய்ப்பை விரிவுபடுத்தும் நோக்கத்தில், இப்போதுள்ள 30 சதவிகித பதவி உயர்வு 1.4.1992 முதல் 40 சதவிகிதமாக உயர்த்தப்படும்.

**சில ஆய்வாளர்களின் பதவிகளைத் துணைக் கண்காணிப்பாளர் பதவிகளாகத் தரம் உயர்த்தல்**

காவல்துறையில் பணிபுரியும் ஆய்வாளர்களில் பலர், 15 ஆண்டுகளுக்கு மேலாகப் பதவி உயர்வு பெற வாய்ப்பில்லாமல் உள்ள தேக்க நிலைக்குத் தீர்வு காணும் நோக்கத்திலும், காவல்துறையிலுள்ள சில பிரிவுகளின் செயல்பாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையிலும், மாவட்டங்களிலுள்ள தனிப் பிரிவு (Special Branch) ஆய்வாளர்கள் பதவிகளையும் மாவட்டங்களிலுள்ள புலனாய்வுப் பிரிவு (Intelligence Wing) ஆய்வாளர்கள் பதவிகளையும், துணைக் கண்காணிப்பாளர் நிலைக்குத் தரம் உயர்த்த, இந்த அரசு முன் வந்திருக்கிறது என்பதையும், இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இதனால் பயன்பெறும் ஆய்வாளர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 50 ஆகும். அரசுக்கு இதனால் ஆகும் செலவு ரூபாய் 40,000.

> ★ பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு, அளவுக்கு மீறிய நாணயமும், கட்டுப்பாடும், உறுதியும், தியாக உணர்வும் வேண்டும்.
>
> — தந்தை பெரியார்

**புறக்காவல் நிலையங்களை உயர்த்துதல்**

தமிழகக் காவல்துறையின்கீழ் இயங்கும் 175 புறக்காவல் நிலையங்கள் சிலவற்றை, அப்பகுதியிலுள்ள மக்களின் தேவைக்கும், சேவைக்கும் போதுமான அளவில் பயன்படுகிற வகையில், முழு அளவிலான காவல் நிலையங்களாகத் தரம் உயர்த்த அரசு முன் வந்துள்ளது. இந்த நிதி ஆண்டில், பதினோரு புறக்காவல் நிலையங்களை முழுமையான தகுதியுடைய காவல் நிலையங்களாக மாற்றி ஆணையிட, இந்த அரசு முன் வந்துள்ளது என்பதை உங்களுக்குச் சொல்லுவதில் பேருவகை கொள்கிறேன்.

**சரித்திரம் படைக்கும் செயல்பாடுகள்**

அதன்படி தற்போது, திருவாலங்காடு, ஓரத்தி, ஆசனூர், மல்லிக்கரை, ஆயில்பட்டி, கோட்டப்பட்டி, பாகலூர், பொன்னை, தேரூர், கொப்பம்பட்டி, வாசுதேவநல்லூர் ஆகிய இடங்களில் இயங்கிவரும் புறக்காவல் நிலையங்கள், முழுமையான காவல் நிலையங்களாக உயர்த்தப்படும்.

இந்த அரசைப் பொருத்தவரையில், காவல் துறையை ஒரு வலிவுள்ள, திறமையான, பயனுள்ள துறையாக மாற்ற வேண்டும் என்பதோடு, அதில் பணியாற்றுகிற காவலர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் சரியான நேரத்தில், மனிதாபிமான எண்ணத்தில் வழங்க வேண்டும் என்பது தான். இந்த அரசின் நோக்கம் சரியாக இருப்பதால், காவல்துறையின் செயல்பாடுகள் நிச்சயம் இனி சரித்திரம் படைக்கும் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசும்பொழுது, சேலத்திற்கு அருகே விடுதலைப் புலிகள் பயன்படுத்துகிற மிகவும் சக்தி வாய்ந்த ஒரு வயர்லெஸ் செட் கண்டுபிடிக்கப்பட்டதாகவும்; 'என்னைக் கொலை செய்வதற்குத் தற்கொலைப் படையினர் தமிழ் நாட்டுக்கு வந்திருக்கிறார்கள் என்பன போன்ற தவறான செய்திகளைச் சிலர் திட்டமிட்டுப் பரப்பி வருகின்றனர்' என்றும் குறிப்பிட்டார்.

இது குறித்த உண்மை நிலையினை இந்த அவைக்கு எடுத்துக்கூற நான் விரும்புகிறேன்.

சேலம் மாவட்டம் ஏர்க்காட்டில் அமைந்துள்ள காவல்துறையின் 'வயர்லெஸ் ரிபீட்டர்' நிலையத்தில், (Wireless Repeater Station) ஏதோ ஒரு சக்தி வாய்ந்த வயர்லெஸ் கருவி இயக்கப்படுவதால், தொலைத் தொடர்பில் குறுக்கீடுகள் ஏற்படுவது தெரிய வந்தது. அது எங்கே இருக்கிறது, எவ்வாறு இயக்கப்படுகிறது என்று காவல்துறையினர் சேலம் மாவட்டப் பகுதியில் தேடி வருகின்றனர். அதை இன்னும் கண்டுபிடிக்கவில்லை.

**கவலைப்படுகிற நபர் நானில்லை!**

விடுதலைப்புலியினரின் தற்கொலைப் படையினர் தமிழகத்திற்கு வந்துள்ளனர் என்ற செய்தியும் உண்மையானது. இந்தச் செய்தி நமது இராணுவத்தினராலும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தத் தற்கொலைப் படையில் எத்தனை விடுதலைப் புலிகள் வந்தனர் என்ற விவரம் தெரியவில்லை. ஆனால், அவர்கள் என்னைக் கொலை செய்வதற்காகவும், ராஜீவ் காந்தி கொலை வழக்கை விசாரித்து வரும் சிறப்புப் புலனாய்வுக் குழு (SIT) அமைந்துள்ள 'மல்லிகை' கட்டடத்தைத் தகர்ப்பதற்காகவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்பதும், அவர்கள் தமிழகத்திற்குள் நுழைந்து விட்டனர் என்பதும் தெரிய வந்துள்ளது.

மேலும், ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டுச் சிறைச் சாலையில் உள்ள கைதிகளை மீட்பதற்கு, அல்லது கொலை செய்வதற்கும், அவர்கள் திட்டம் தீட்டியுள்ளதாகவும் காவல் துறையினருக்குத் தகவல் தெரிய வந்துள்ளது. எது எப்படி இருந்தபோதிலும், இதற்கெல்லாம் கவலைப்படுகிற நபர் நானில்லை என்பது உங்களுக்கும் தெரியும்; எனது எதிரிகளுக்கும் தெரியும்.

தமிழக மக்களின் நல்லெண்ணமும், பாசமும் என்னுடன் என்றென்றும் இருப்பதால், அவர்களுக்காகப் பணியாற்றுகின்ற பெருமையைத்தான் நான் என் வாழ்வின் பேறாகக் கருதுவேனே தவிர, என் உயிரை அல்ல. எனவே என் உயிரென மதிக்கும் தமிழக மக்களின் நல் வாழ்விற்காக, நான் எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்கிறேன்.

எங்கே, எந்த இடத்தில் எந்த ஒரு அசம்பாவிதம் நடந்தாலும், பொதுமக்களும் அரசியல்வாதிகளும், காவல்துறையைத்தான் வழக்கமாகக் குறை கூறுகின்றனர். எடுத்துக்காட்டாகக் கூற வேண்டுமென்றால், கடந்த பிப்ரவரி, 18-ஆம் நாள், கும்பகோணம் மகாமகம் திருவிழாவில், 12,000 காவலர்கள் தொடர்ந்து பணியாற்றி, சுமார் 50 இலட்சம் பக்தர்களின் வழிபாட்டிற்கு உதவுகிற வகையில், சிறப்பாகக் காவல் பணி புரிந்தனர். ஆனால் அவர்களது பாராட்டத்தக்க பணி மறைக்கப்பட்டு, பத்திரிகைகளின் மூலம் சிலர் காவல்துறையினரைக் கடுமையாகச் சாடுகிற நிலைமை உருவாகிவிட்டது.

என்னையும் சிலர் விடவில்லை. சமயத் தலைவர்களும் அரசியல்வாதிகளும், நான் அங்கு சென்றதால்தான் காவல்துறையின் கவனம் போதுமான அளவு மக்கள் பக்கம் செலுத்த முடியாமல் போய்விட்டது, என்ற தவறான கருத்தை இன்று வரை பரப்ப முயற்சித்து வருகிறார்கள். மகாமகம் விபத்து பற்றி, நடந்த உண்மைகள் பற்றி, தேவையான அனைத்துக் கருத்துக்களும் மக்களுக்கு நிரம்பவே சொல்லப்பட்டு விட்டன. ஆனால் தனிப்பட்ட முறையிலும், அரசியல் ரீதியாகவும் என்னை விரும்பாத ஒரு சிலரே இதில் தவறான கருத்துக்களைக் காவல்துறையின் மீது தொடர்ந்து தெரிவித்து வருகிறார்கள். சொந்த விருப்பு, வெறுப்புகளுக்காகக் காவல்துறை மீது பழிபோடுகிறவர்களுக்கு எந்தப் பதிலும் நிறைவைத் தந்துவிட முடியாது.

**காவல்துறையினருக்கு உறுதுணையாய் இருப்பீர்!**

காவல்துறையின் பணி மேலும் சிறக்க வேண்டுமென்றால், பொதுமக்களும், அரசியல்வாதிகளும், அவர்களுக்கு ஊக்கமூட்ட வேண்டிய காலத்தில் ஊக்கமூட்டி, உறுதுணையாக இருக்கவேண்டும். குறிப்பாக அவர்கள் புரியும் பெருமைமிகு சாதனைகளையும், செயற்பாடுகளையும் மனமாரப் பாராட்ட வேண்டும். அவர்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்களது ஆற்றல் வெளிப்படும்; மக்களுக்காக அவர்கள் ஆற்றும் பணிகளில் ஆர்வம் ஏற்படும்.

'காவல் துறையினருக்கு மனத்தெம்பு ஊட்ட வேண்டும் அவர்கள் Demoralise ஆகி இருக்கிறார்கள்' என்று திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், இன்னும் சிலரும் கருத்துத் தெரிவித்தார்கள்.

காவல்துறையினரைச் சதா சர்வகாலமும் குறை கூறிக் கொண்டே இருந்தால் - அவர்கள் எதைச் செய்தாலும் தவறு என்று கடுமையாக விமர்சித்துக்கொண்டே இருந்தால் - அவர்களுக்கு மனச்சோர்வு ஏற்படாமல் வேறு என்ன நடக்கும்? கடமையாற்றுவதில் எப்படி ஆர்வம் இருக்கும்?

காவல்துறையினரை மனச்சோர்வு அடையச் செய்வதில் பத்திரிகைகளுக்கும் பெரும் பங்கு உண்டு. அரசியல்வாதிகளும் சரி, பத்திரிகைகளும் சரி, நாட்டு மக்களின் நன்மையைக் கருதி பொறுப்புடன் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசும்பொழுது, 'பழங்கி

மலை புறநகர் காவல் நிலையத்தில் மத்திய இரயில்வே காவலர் அடையாளம் தெரியாத ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார்' என்று கூறினார். மாண்புமிகு உறுப்பினர் பேசும் பொழுது, யாருடைய ஆட்சியில் அந்தச் சம்பவம் நடந்தது என்று தெரிவித்துப் பேசி இருந்தால், மகிழ்ச்சி அடைந்திருப்பேன். ஆனால் 3.5.1991 அன்று, அதாவது நாங்கள் ஆட்சிக் கட்டிலில் ஏறுவதற்கு முன்பு, குடியரசுத் தலைவர் ஆட்சியில் நடந்த நிகழ்ச்சி குறித்துக் குறை கூறி இருக்கிறார்.

3.5.1991 அன்று, காலை 9.45 மணிக்கு, மத்திய இரயில்வே காவலர் திரு ஹுமாயூன் கபீர், பரங்கிமலை புறநகர் காவல் நிலையத்தில், பயணச் சீட்டு இல்லாத ஆண் பயணி ஒருவரை விசார ணைக்கு, பயணச்சீட்டு சேகரிப்பவர் அறைக்குக் கொண்டு வரும்போது, அந்த இளைஞர் 9 எம்.எம். கைத்துப்பாக்கியால் மேற்படி காவலரைச் சுட்டுவிட்டு ஓடிவிட்டார். அந்தக் காவலர் அன்று மாலையே மரணம் அடைந்து விட்டார். தற்போது இவ்வழக்கினைக் கியூ பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்றம் செய்து, புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. பீட்டர் அல்போன்ஸ் இந்தச் சம்ப வத்தைப் பற்றி கூறுகிறபோது, ஏதோ இந்த அரசு ஆட்சிக் காலத்தில் இது நிகழ்ந்துவிட்டதைப்போல இருந்தது. எனக்கே தெரியாமல் இப்படியொரு சம்பவம் எப்போது நடந்தது என்று நானும் வியப்படைந்தேன். விசாரித்தபோதுதான் இது குடியரசுத் தலைவர் காலத்தில் நடந்தது என்று தெரிய வந்தது. இத்தகைய நிகழ்ச்சிகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுகிறபோது, யாருடைய ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்தது என்று தெரிவிப்பதுதான் முறையாகும்.

**கண்டுபிடிக்கப்பட்டவை**

மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், பெருங்குற்றங்களில் கண்டுபிடிக்கப்பட்டவை குறைவாகவும், சில குற்றங்களில் கண்டுபிடிக்கப்பட்டவை அதிகமாக வும் இருப்பதாகக் குறிப்பிட்டார்.

கொள்கைக் குறிப்பில் கொடுக்கப்பட்ட விவரங்கள் பற்றித் தெளிவுபடுத்த விரும்புகிறேன். கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்கள் என்று குறிப் பிட்டிருப்பது, வழக்குகள் முடிக்கப்பட்டு குற்ற வாளி என்று தண்டனை வழங்கப்பட்ட வழக்கு களின் எண்ணிக்கை மட்டுமே. இதில் நீதிமன்றத் தில் நிலுவையாக உள்ள வழக்குகள் சேர்க்கப் படவில்லை.

எனவே, காவல்துறையினர் குற்றவாளிகளைக் கண்டுபிடித்த வழக்குகளின் எண்ணிக்கை, மிக அதிகமாக இருந்தபோதிலும், நீதிமன்றங்களில் முடிவு செய்யப்பட்டு, தண்டனை வழங்கப்பட்ட விவரங்களை மட்டுமே 'கண்டுபிடிக்கப்பட்டவை' என்ற தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று தெரிவித்துக் கொள்கிறேன். சிறு வழக்குகளை நீதிமன்றங்களில் விரைவாக முடிவு செய்ய



**ஜனநாயகவாதி சிறிதளவுகூட சுயநலம் இல்லாதவனாக இருக்க வேண்டும். அவனுடைய கருத்தும், கனவும், ஜனநாயகத்தைப் பற்றியதாகவே இருக்க வேண்டும்.**
**—பேரறிஞர் அண்ணா**

இயலும்; ஆனால் பெருங்குற்றங்களுக்கான வழக்கு களை முடிவு செய்ய, நீண்டகாலம் ஆகும் என்பது நீங்கள் அறிந்த ஒன்றுதான்.

**பூரண மதுவிலக்கை அமலாக்கத் தயார்**

மதுவிலக்கை ஏன் தமிழகத்தில் முழுமையாக அமல்படுத்தக் கூடாது என்றும், இங்கே வினா எழுப்பப்பட்டது. ஏழை, எளிய தாய்மார்களின் கண்ணீரைத் துடைக்க மலிவு விலை மதுவைத் தமிழகத்தில் ஒழித்து, அதனால் ஏற்பட்ட ரூ.322 கோடி வருவாய் இழப்பு முழுமையும், இந்த அரசு தானே ஏற்று இருப்பதை அனைவரும் அறி வார்கள். இந்தச் சீரிய முடிவிற்கு ஏதேனும் உதவி மத்திய அரசிடமிருந்து கிடைத்ததா என்றால், ஒன்றும் இல்லை.

திரும்பத் திரும்ப நாங்கள் மத்திய அரசை, எங்களது இந்த வருவாய் இழப்பைச் சிறிதேனும் ஈடுகட்ட வேண்டும் என்று கேட்டு வந்தும், இதுவரை எந்த உதவியும் கிடைக்கவில்லை. இந் நிலையில் இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மதுபானங்களையும் (I.M.F.S.) ஒழித்துவிட்டு, பூரண மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும் என்ற எண்ணம் எங்கள் அரசிற்கு முழுமையாக இருந்த போதிலும், அதனைச் செயல்படுத்த நிதிநிலை இடம் தரவில்லை என்பதைத் தெளிவாகக் குறிப் பிட விரும்புகிறேன்.

பூரண மதுவிலக்கினால் ஏற்படும் இழப்பை மத்திய அரசு ஈடுசெய்ய முன்வந்தால், தமிழகத் தில் உடனடியாகப் பூரண மதுவிலக்கை அமல் படுத்த, எங்கள் அரசு எப்போதும் தயாராக இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன். இந்தக் கோரிக்கையை மீண்டும் மீண்டும் வலியுறுத்துவோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**காவல்துறையினர் சிறக்கவேண்டும்**

தமிழகக் காவல்துறையின் திறமை இந்தியா வெங்கும் புகழ்பரப்பும் வண்ணம், ஒரு சம்பவத் தைக் குறிப்பிட்டாக வேண்டும்.

டெல்லியிலுள்ள திகார் ஜெயிலில் பன் னாட்டுக் குற்றவாளிகளும், கடுங்குற்றவாளிகளும் அடைக்கப்பட்டு உள்ளது யாவருக்கும் தெரிந்த தாகும். இந்தச் சிறைச்சாலையின் வெளிப்புறச் சுவரிலிருந்து, காவல் காக்கும் தமிழகச் சிறப்புக் காவல் படையைச் சார்ந்த காவலர்கள்

ஆரோக்கியராஜ், ஏசுபி என்ற இருவர், அன்றாட ரோந்துப் பணியைச் செய்து வரும்போது, இந்த ஆண்டு ஜனவரி 28-ஆம் தேதி சிறைச்சாலைக்கு வெளியே, ஒரு தோண்டப்பட்ட பள்ளத்தைக் கண்டு, புலனாய்வு செய்தபோது ஒரு (Tunnel) சுரங்கப்பாதை அமைக்கப்பட்டு இருப்பது தெரிய வந்தது. இதன் வழியே சிறையில் அடைக்கப் பட்டிருந்த குற்றவாளிகள் தப்பிக்கச் செய்த முயற் சியும் தெரிந்து முறியடிக்கப்பட்டது.

அண்மையில் நான் டெல்லி சென்றிருந்த போது, அவர்களின் பணித்திறமையைக் கேட்டு மகிழ்ந்தேன்; பாராட்டினேன். இப்படி எங்கு பணிபுரிந்தாலும், தம் திறமையை வெளிப்படுத்தும் தமிழகக் காவல் துறையினர், மென்மேலும் சிறக்க வேண்டும் என்பதே என் அவா.

சென்ற வரவு செலவுக் கூட்டத்தொடரில், காவல்துறையினருக்குப் பல சலுகைகளையும் நலத் திட்டங்களையும் ஒருங்கிணைத்து, 14 அறிவிப்பு களை இந்த மாமன்றத்தில் அறிவித்திருந்தேன். அவை எல்லாம் ஆணையாகப் பிறப்பிக்கப்பட்டு, அவை உரியவர்களுக்குச் சேரவில்லை என்ற குறைபாட்டை திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொன்னார்கள். நான் அறிவித்த 14 இனங்களிலும், ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு விட்டன என்ற செய்தியை, உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து ஒரு குறையைச் சுட்டிக் காட்டினார்கள். காவலர் குடியிருப்புகளில் தனித்தனியாக மீட்டர் வைக்காது, மின் கட்டணம் ரூபாய் 4 ஆயிரம் வரை வசூலிக்கப்பட்டிருக்கிறது என்று சொன் னார்கள். தமிழகத்திலுள்ள 4,344 குடியிருப்பு களில், ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள் ஆகியோரின் குடியிருப்புகளுக்குத் தனித்தனி மின் அளவுகள் உள்ளன. தலைமைக் காவலர் மற்றும் காவலர்களுக்கான குடியிருப்புகளில் 3876-இல், 1,476 குடியிருப்புகளுக்கு மட்டும் தனி மின் அளவைகள் பொருத்தப்பட்டுள்ளன. அதை மாற்றி 2431 குடியிருப்புகளில் பயன்படுத்தப்படும் மின்சாரத்தை, புது மின் அளவைகள் மூலம் கணக்கிட்டு, ஒவ்வொருவருக்கும் அளிக்கப்படும் 20 யூனிட் சலுகைக்கு மேலும் பயன்படத்தப்படும் மின்சாரத்திற்கு, மொத்த உபயோகிப்போர்களில் சமமாகப் பங்கிடப்பட்டு, கட்டணம் வசூலிக்கப் படுகிறது.

1984 முதல் 1991-ஆம் ஆண்டு வரை, சென்னை நகரக் காவலர்களிடம் இருந்து, மின் கட்டணம் வசூலிக்காமல் விடப்பட்டதால், 7 ஆண்டுகளுக்கு நிலுவையில் உள்ள தொகையை, மாநிலக் கணக்காயர் தணிக்கையில் சுட்டிக்காட்டி யதன் பேரில், வசூலிக்க வேண்டிய நிலை ஏற் பட்டபோது, மாதம் ஒன்றுக்குச் சுமார் 200 ரூபாய் சுலபத் தவணையில் பிடித்தம் செய்யப் பட்டு வருகிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் கூறியதைப்போல, ஒரு ஆண்டுக்குக் காவலரிடம் ரூ.4,000 வசூலிக்கப் படுகிறது என்பது சரியல்ல. 7 ஆண்டு பழைய பாக்கியைத் தவணை முறையில் வசூலிக்க வேண்டிய நிலைதான் ஏற்பட்டுள்ளது.

**காவலரின் விடுமுறைகள்**

காவல் பணியாளர்களுக்கு சனி, ஞாயிறு விடுமுறை கிடைப்பது இல்லை. எனவே அவர் களுடைய தற்செயல் விடுப்பை உயர்த்தி, 20 நாட்கள் ஆக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்.

காவல்துறையில் போதுமான ஆட்கள் தற் சமயம் இல்லை. சுமார் 4,000 பணியிடங்கள் காலியாக உள்ளன. அவற்றை நிரப்புவதற்கு நியமனக் குழு ஏற்கெனவே நியமிக்கப்பட்டுள்ளது. காலியாக உள்ள இந்தக் காவல் பணியிடங்கள் எல்லாம் நிரப்பப்பட்டுவிட்டால், இந்தப் பிரச் சினை பெருமளவு தீரும் என்று கருதுகிறேன்.

தென்னார்க்காடு மாவட்டம், குள்ளஞ்சாவடி காவல் நிலையத்தில் 16.3.1992 அன்று நடை பெற்ற துப்பாக்கிச் சூடு பற்றி மாண்புமிகு உறுப் பினர் திரு. குமாரதாஸ் அவர்கள், நியாயம் கேட்கப்போன பொதுமக்கள் மீது காவல்துறை யினர் அநியாயமாகத் துப்பாக்கிச் சூடு நடத்திய தாக்க் குற்றம் சாட்டியுள்ளார்.

உண்மையில் நடந்தது என்னவென்றால் அன்று குள்ளஞ்சாவடி காவல்துறையினர் சமட்டிக்குப்பம் என்ற கிராமத்தில் இருந்து 9 நபர்களை கள்ளச் சாராயம் காய்ச்சிய குற்றத்திற்காகக் கைது செய்து கொண்டுவந்தனர். அதே கிராமத்தைச் சேர்ந்த திரு. விருப்பலிங்கம் என்பவர், 100 அடி ஆட் களுடன் பயங்கர ஆயுதங்களைக் கையில் ஏந்தி, குள்ளஞ்சாவடி காவல் நிலையத்திற்கு வந்து கைது செய்யப்பட்ட அவரது மைத்துனரை விடுவிக்க வேண்டும் என்றும், இல்லையேல் காவல் நிலை யத்தைத் தாக்கி விடுவதாகவும் மிரட்டினார். திரு. விருப்பலிங்கம் ஏற்கெனவே ஒரு கொலை வழக்கில் குற்றவாளி என்று ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு, தற்போது உயர்நீதிமன்றத்தின் ஆணையின்படி பெயிலில் இருப்பவர். காவல் நிலையத்தில் இருந்த அதிகாரிகள் எவ்வளவோ எடுத்துக் கூறியும், கூட்டத்தினர் வன்முறையில் ஈடுபட்டு துணை ஆய்வாளரையும், காவலர்களை யும் கடுமையாகத் தாக்கிக் காயப்படுத்தினார்கள். கூட்டத்தைக் கலைந்து செல்லுமாறு எச்சரித்தும் பயனற்றுப் போகவே, வானத்தை நோக்கித் துப்பாக்கியால் சுட்டு எச்சரித்தும், கூட்டம் கலை யாத சூழ்நிலையில், தற்பாதுகாப்பிற்காக இரண்டு ரவுண்டு சுடப்பட்டது. இதில் விருப்பலிங்கம் தொடையில் காயம் அடைந்து, கீழே விழுந்த போது தலையில் அடிபட்டது. அவரை மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லும் வழியில் மரண மடைந்தார். மற்றொருவரான செல்வராஜ், கடலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அவர் ஆபத்தான நிலையில் இல்லை. இறந்துபோன விருப்பலிங்கம், ஆயுள் தண்டனை பெற்றவர் மட்டுமல்ல, இரண்டு கொலை முயற்சி வழக்குகளும் அவர்மீது நிலுவை யில் இருக்கின்றன.

இதே வழக்கைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்களும் சுட்டிக்காட்டினார். ஆனால் அவர் - 'காவல் துறையினருக்குப் பாதுகாப்பு இல்லையே, இது போன்ற காவல் நிலையத்தைத் தாக்கும் பொது மக்களை எவ்வாறு கட்டுப்படுத்துவது?' என்று தான் குறிப்பிட்டார். நியாயமாகப் பேசினார்.

**ஒருதலைப் பட்சமான குறைகள்**

போலீஸ் துப்பாக்கிச் சூடு என்றவுடனே, காவல்துறையினர்தான் தவறு செய்துவிட்டார்கள் என்ற தவறான கருத்து பொதுவாகப் பரப்பப் பட்டு வருகின்றது. அந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதற்கான காரணமோ, அப்போது இருந்த சூழ்நிலையோ வெளிப்படுத்தப்படாமல், ஒருதலைப்பட்சமாகவே குறைகள் கூறப்படு கின்றன. இவ்வாறு நடைபெறும் துயரச் சம்ப வங்கள் ஒவ்வொன்றுக்கும், காவல்துறையினரைக் குறை கூறி, பத்திரிகையாளர்களும், அரசியல்வாதி களும், சமூக விரோத சக்திகளும், ஒரு பொய் யான மாயையை உருவாக்கி வருகின்றனர். நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

சுமார் 6 கோடி மக்கள்தொகை கொண்ட தமிழகத்தில், 68,987 காவல் துறையினர்தான் சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க வேண்டியுள்ளது; குற்றங்களைக் கட்டுப்படுத்திக் கண்டுபிடிக்க வேண்டியுள்ளது; மற்றும் பல்வேறு சட்ட பூர்வமான நடவடிக்கைகளைத் தொடர வேண்டி உள்ளது. சராசரியாகத் தமிழகத்தில் ஒவ்வொரு ஆயிரம் மக்களுக்கும் ஒரு காவலர் என்ற நிலை தான் தற்பொழுது உள்ளது. இந்தச் சக்தியை வைத்துக்கொண்டு, தமிழகத்தில் இன்றைய தினம் காவல்துறையினர் சட்டம்-ஒழுங்கை நிலைநிறுத்தி உள்ளனர் என்றால், நிச்சயமாக அவர்கள் பாராட்டுக்குரியவர்கள் மட்டுமன்றிப், போற்று தலுக்கும் உரியவர்கள் ஆவார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. போளூர் வரதன் காவல்துறையில் உள்ள காலியிடங்களை விரைவாக நிரப்பும்படி கேட்டுக்கொண்டுள்ளார். இது விரைவில் நிரப்பப்படும். அடுத்து, தம் தொகுதியில் கள்ளச்சாராயம் நிரம்பி உள்ளதாக வும், குறிப்பாக சினிமா கொட்டகைகளில் பாக்கெட் சாராயம் விற்கப்படுவதாகவும் கூறினார்.

திரு. போளூர் வரதன் சுட்டிக்காட்டிய குறை பாடுகளைப் பரிசீலித்ததில், இவரது தொகுதியில் காவல்துறையினர் நிறைய சாராய வழக்குகள் பதிவு செய்திருப்பதாகத் தெரிய வருகிறது. ஸ்ரீபெரும்புதூரிலுள்ள சுமதி சினிமா தியேட்டரை ஒட்டி உள்ள பகுதியில், சாராயம் விற்பனை இல்லையெனச் சொல்லப்படுகிறது. இருப்பினும், பாப்பாம்மாள் என்பவர், சுமதி தியேட்டரிலிருந்து சுமார் 1½ கிலோமீட்டர் தூரத்தில் சாராயம் விற்பனை செய்தார். அவரை இருமுறை கைது செய்துள்ளார்கள்.

அடுத்துப் பேசிய டாக்டர் குமாரதாஸ் அவர்கள், குற்றங்களின் கண்டுபிடிப்புச் சதவிகிதம் ஏன் குறைந்துள்ளது எனக் கேள்வி எழுப்பியுள்ளார், இதற்கு ஏற்கெனவே பதில் சொல்லிவிட்டேன். தமது விவாத உரையின்போது, காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் ஒருவர் தாமே பயங்கர ஆயுதங்களுடன் சென்று, கொள்ளை அடித்து இருக்கிறார் என்று சொன்ன பிறகும், நடவடிக்கை இல்லையென்று ஒரு புகார் இங்கே கூறினார்.

## தொழிலாளர்களுக்கு ஊட்டி, கொடைக்கானலில் தங்கும் விடுதிகள்

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் எண்ணூர் அனல் மின்நிலைய ஊழியர்கள் குடி யிருப்பில் தையல் பயிற்சி நிலையம் நடத்தி வரு கிறது. இந்தப் பயிற்சி நிலையத்தில் வெற்ற பெற்ற மாணவர்களுக்குப் பரிசு வழங்கும் விழாவில் தொழிலாளர் நல ஆணையாளர் திரு. நா. ஆதிமூலம் கலந்து கொண்டு பேசியதாவது:

தொழிலாளர் நல வாரியம் மூலமாக தமிழ் நாட்டில் 68 தொழிலாளர் நல மையங்கள் உள்ளன. இவற்றில் 58 மையங்களில் தையல் பயிற்சி நிலையமும், குழந்தைகள் காப்பகமும் உள்ளன. மற்ற 10 இடங்களில் தையல் பயிற்சி நிலையம் மட்டும் இயங்கி வருகிறது.

இந்த மையங்களில் தொழிலாளர்களின் மனைவி, மகள் அல்லது திருமணம் ஆகாத தங்கை ஆகியோருக்கு ஒரு வருடம் தையல் பயிற்சி அளிக் கப்படுகிறது. அத்துடன் உதவித் தொகையாக மாதம் ரூ.80 வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் தொழிலாளர் நலத்துறை மிகச் சிறப்பாக இயங்குகிறது. மற்ற மாநிலங்களைவிட இங்கு தொழில் உறவு சுமுகமாக உள்ளது. தொழிலாளர் துறையினர் தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் இடையே பேச்சு வார்த்தை நடத்தி இரு பிரிவினருக்கும் பாதகம் இல்லாமல் பல பிரச்சினைகளைத் தீர்த்து உள்ளனர்.

தொழிலாளர் நலத்துறைக்கு தொழிலாளர் மூலம் ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் வருமானம் வருகிறது. ஆனால் செலவோ ஆண்டுக்கு 2 கோடி ரூபாய் ஆகிறது. தமிழ்நாட்டில் தொழி லாளர்கள் செலுத்தும் கட்டணம் ரூ.2. இது மற்ற மாநிலங்களைவிட மிக குறைவாகும்.

தொழிலாளர்கள் குடும்பத்துடன் சென்றால் குறைந்த கட்டணத்தில் தங்குவதற்குக் குற்றலாம், மகாபலிபுரம், சென்னை போன்ற இடங்களில் தங்கும் விடுதிகள் கட்டப்பட உள்ளன. அத் துடன் ஊட்டி, கொடைக்கானல், இராமேசுவரம் போன்ற சுற்றுலா மையங்களில் விரைவில் தங்கும் விடுதிகள் கட்டப்படும்.

சட்டமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டியது - துணைக் கண்காணிப்பாளர் திரு. பெருமாள் என்பவர், தனிப்பட்ட முறையில் சம்பந்தப்பட்டி ருக்கிற வழக்கே தவிர, அவருக்கும், அவரது அலுவலகப் பணிக்கும் சம்பந்தம் இல்லை என்பது, பல உறுப்பினர்களாலேயே இங்கு சுட்டிக் காட்டப் பட்டுள்ளது. சம்பவம் நடந்த இடத்தில் துணைக் கண்காணிப்பாளர் இல்லவே இல்லை. இருப் பினும், புகார் கொடுக்கப்பட்ட காரணத்தால், வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினை தனிப்பட்ட முறையில் நிலம் விற்றது பற்றியதாகும்.

மேலும் டாக்டர் குமாரதாஸ் அவர்கள் பேசும் போது, காவல் நிலையங்களில் அடைத்து வைக்கப் பட்ட விசாரணைக் கைதிகள் நிறையப் பேர்கள் இறக்கிறார்கள் என்றும், குறிப்பாகத் தமது தொகுதி யில் ஜோசப் என்பவர் இறந்து விட்டதாகவும், அதன்மீது விசாரணை என்ன ஆனது என்றும் கேட்டார்.

*1989-90*-இல் *12* பேர் இதுபோன்ற இறப் புக்கு ஆளாகி உள்ளார்கள் என்றும், *1990-91*-இல் *9* பேர் என்றும், *1991-92*-இல் *7* பேர் என்றும் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. இதிலிருந்து அடைத்து வைக்கப்பட்ட விசாரணைக் கைதிகளின் இறப்பு எண்ணிக்கை குறைந்து கொண்டே வரு கிறது என்பது வெளிப்படை. எந்த ஒரு நபரும் அடைத்து வைக்கப்பட்டு, விசாரணையில் இருக்கும் போது இறந்தால், விதிமுறைகளின்படி கோட் டாட்சியர் விசாரணை நடத்தி, அதன்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை இங்கு தெரிவித்துக் கொள்கிறேன். ஜோசப் இறந்ததைப் பற்றிக் கோட்டாட்சியர் விசாரணை நடத்தியிருக்கிறார். அந்த அறிக்கையின் மீது அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. குமாரதாஸ் அவர்கள் கோவை மாவட் டத்தில் மாவட்டக் கருவூலக் கழிப்பறையில், இரண்டு அரசு ஊழியர்கள் கொலை செய்யப் பட்டது இன்னும் கண்டுபிடிக்கப்படாமலேயே உள்ளது என்று அங்கலாய்த்துக் கொண்டார். *23.9.91* அன்று மகாலஷ்மி, கோமதி ஆகிய இருவரும், கோவை மாவட்டக் கருவூலக் கழிப் பறையில் கொலையுண்டு கிடந்த சம்பவத்தின் வழக்குப் பதிவு செய்து, இதற்கான தனிப்படை அமைக்கப்பட்டு, வழக்கு தீவிர புலன் விசாரணை யில் உள்ளது.

**தாழ்த்தப்பட்டோர் மீது பரிவு - பச்சாதாபம்**

அடுத்துப் பேசிய திரு. செ.கு. தமிழரசன் அவர்கள், காவல்துறையில் உயர் பதவிகளை உருவாக்கியதில், கோஷ்டிப் பூசல் உருவாவதாகக் கூறினார். காவல்துறையில் தேவையான பதவிகள், தேவையான நேரங்களில் மட்டும் உருவாக்கப்படும் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, காக்கிச் சட்டையைக் காவல்துறை யினர் மட்டுமே அணிய வேண்டுமென்று கேட்டார். இது எவ்வளவு தூரம் சாத்தியம் என்று நாம் யோசிக்க வேண்டியதுதான். தொடர்ந்து பேசிய அவர், சார்பு ஆய்வாளர்களை நியமிக்கும்போது, ஆயுதப் படையிலிருந்து சட்டம் ஒழுங்குப் பிரி விற்கு மாறுதல் செய்யும் வசதி வேண்டுமென்று சொன்னார். இதனுடைய சாத்தியக்கூறுகள் பற்றிப் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவரது பேச்சில் அழுத்திச் சொன்னது, நடக்கும் துப்பாக்கிச் சூட்டில் எல்லாம், பாதிக்கப் படுபவர்கள் அதிகமாகத் தாழ்த்தப்பட்டவர்கள் என்று சொன்னார். இந்த அரசைப் பொறுத்த வரையில் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது பச்சா தாபமும், பரிவும் அதிக அளவில் கொண்டிருக் கிறது, என்று சொல்லிக்கொள்ள நான் விரும்பு கிறேன். காவல்துறையினரால் துப்பாக்கிப் பிர யோகம் எப்போதும் நடத்தப்படுவதில்லை. மாறாக, தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில், நிலைமை கட்டுக்கடங்காது போகும்போது, துப் பாக்கிப் பிரயோகம் தவிர்க்கமுடியாததாக ஆகிப் போகின்றது. அந்தச் சமயத்தில் பாதிக்கப்படுப வர்கள் தாழ்த்தப்பட்டவர்களா, மற்றவர்களா என்று பார்க்க முடிவது இல்லை. இருப்பினும் திரு. தமிழரசன் அவர்கள் சுட்டிக்காட்டிய கருத்து, என் மனதிலேயே பதிந்துள்ளது என்பதை மட்டும் இங்கே சொல்லிக் கொள்கிறேன்.

கள்ளச்சாராயம் வெகுவாக ஒழிக்கப்பட்டுள் ளது என்று சொல்லும் அவர், பதனீர் இறக்கும் பேரில் கள் இறக்குகிறார்கள் என்று சுட்டிக் காட்டினார். இதைக் காவல் துறையினருக்கு அறி வுறுத்தி, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என் பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

**நன்கு செயல்படும் அமைதிக் குழு**

குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் போடப்படுகின்ற வழக்குகள், திறமையாக நடத்தப் படுவது இல்லை. அதற்குரிய அழுத்தம் கொடுக் கப்படுவது இல்லை என்றும் சுட்டிக்காட்டினார். அது சம்பந்தமாகத் தீவிர நடவடிக்கை எடுக்கப் படும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். மேலும், இனக் கொடுமைகளைத் தடுக்க வேண்டும், அதற்கு மேல்மட்ட ஆலோசனைக் குழு அமைத் தால் நல்லது என்று சொன்னார்கள்.

மாவட்ட ரீதியில் ஒவ்வொரு மாவட்டத்திலும், எல்லா இனங்களையும் சேர்த்து, அமைதிக் குழு ஒன்று நன்றாகச் செயல்பட்டு வருகிறது. இந்தச் சூழ்நிலையில் இது தேவை இருக்காது என்று கருதுகிறேன்.

சங்கரன்கோவிலை அடுத்துள்ள திருவேங்கடத் தில் நடந்த கொலை வழக்குப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசினார்கள். ஆதிதிராவிடர்கள் மற்றும் நாயக் கர்கள் கோவில் கட்டும் பணியில், முன் விரோதம் காரணமாக, *14.3.92* அன்று இரவு திரைப்படம் பார்த்துவிட்டு வந்த 6 ஆதிதிராவிட நபர்களை, திருவேங்கடத்தில் சுமார் 20 நாயக்கர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் வழிமறித்து, ஆயுதங்களால் தாக்கி, ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த 3 நபர்களைக்



''பொதுத்தொண்டு செய்பவனுக்கு ஏற்படும் தொல்லை, அவன்தன் இலட்சியத்திற்குக் கொடுக்கும் விலையாகும்.''

கொலை செய்துவிட்டதாக வழக்குப் பதிவாகி, இதைத் தீவிரமாக விசாரணை செய்வதற்காகத் தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக 3 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். வழக்கு விசாரிக்கத் தக்க நடவடிக்கை எடுக்கப் படும்.

**தடா சட்டம் பற்றிச் சிந்திக்கலாம்**

அடுத்துப் பேசிய திரு. சிவசுப்பிரமணியன், இலங்கை விடுதலைப் புலிகளுக்குத் துணை போகும் யாராக இருந்தாலும் (திரு. பண்ருட்டி ராமச்சந்திரன், திரு. திருநாவுக்கரசு போன்றவர்கள்) அவர்களைத் 'தடா' சட்டத்தின்கீழ் தக்க நடவடிக்கை எடுத்து கட்டுப்படுத்த வேண்டும் என்று கேட்டிருக்கிறார்.

இதுபோன்ற கருத்தைப் பல உறுப்பினர்கள் வலியுறுத்தி இருக்கின்றார்கள். சட்டப்படி, நிலமைக்கு ஏற்றபடி, இதில் என்ன செய்ய முடியும் என்பதைச் சிந்திக்கலாம்.

நமது சட்டப்பேரவையின் எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் அவர்கள், ஒரு எதிர்க்கட்சித் தலைவர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இலக்கணமாகத் திகழ்பவர். பேசுகிறபோது, ஆழ்ந்த கருத்துச் செறிவோடு விஷயங்களை அவர் பேசுவதால், அனைவரும் கவனத்தோடு அவரது பேச்சுக்குச் செவி மடுக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் பாராட்ட வேண்டிய அம்சங்களைத் தாராளமாகப் பாராட்டுவார். அவரது வாழ்த்து, அளவானது; அதே நேரத்தில் விமர்சிக்க வேண்டிய விஷயங்களை விவரத்தோடும், ஆதாரத்தோடும் சுட்டிக் காட்டுவார். அவரது விமர்சனம் தெளிவானது; எத்தனை மணி நேரம் உழைத்து, எத்தனைப் புத்தகங்களைப் படித்திருந்தால், இத்தனைக் கருத்துக்களை அவர் கூற முடியும் என்கிற வியப்பு நமக்கு ஏற்படும். அது அவரது உழைப்பின் விளைவு!

சிலருக்குக் குற்றம் மட்டுமே கூற வரும். பாராட்ட மனமே வராது. தனது சொந்தக் குரலைத் தானே திரும்ப திரும்பக் கேட்பதற்காக, சத்தம் போட்டுப் பேசுகிற உறுப்பினர்களும் உண்டு. சிலர் கூச்சல் போடுவதற்காகவே சட்டமன்றத்திற்கு வந்து, சத்தற்ற வாதங்களை எழுப்பி, மன்ற நடவடிக்கைகளுக்குத் தொந்தரவு தருவதும், நமக்குத் தெரிந்த விஷயம்தான். ஆனால் திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியம், தனது சட்டமன்றப் பணிகளின் மூலம், மக்களது எதிர்பார்ப்புகளின் நியாயத்தையும், தான் சார்ந்திருக்கிற இயக்கத்திற்கு மரியாதையையும் என்றென்றும் நிலைக்க வைக்கிறவர். அவரை மனந்திறந்து பாராட்டுகிற வாய்ப்பாக, இந்தச் சந்தர்ப்பத்தை நான் பயன்படுத்திக் கொள்கிறேன்.

சில சட்டமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், விமர்சனங்களை எடுத்துரைத்தாலும், ஆக்கப்பூர்வமான வகையில் அவர்களது விமர்சனங்கள் அரசுக்குப் பயன் பட வேண்டும் - நிர்வாகத்தில் குறைபாடுகள் இருப்பின், அவற்றைச் சீர் செய்து, நிர்வாகத்தைச் செம்மைப்படுத்த வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் கூறப்படுபவை ஆகும். அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், திரு. பீட்டர் அல்போன்ஸ், திரு. சிங்காரம் ஆகியோரும், அவர்களைப் போன்ற இன்னும் சிலரும் பேசுகிறபோது, அரசு நிர்வாகத்தில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக் காட்டத் தவறுவதில்லை; பாராட்ட வேண்டியவற்றைப் பாராட்டுகிறார்கள். ஆனால், அதே சமயம் அவர்கள் அரசை விமர்சிக்கவும் பின் வாங்குவது இல்லை. ஆனால் எப்பொழுதுமே ஆக்கபூர்வமான யோசனைகளைத்தான் கூறுகிறார்கள். அவர்களுடைய அடிப்படை நோக்கமே, தங்களது விமர்சனங்களினால், நிர்வாகத்திலுள்ள தவறுகள் திருத்தப்பட வேண்டும், அதனால் மக்களுக்கு நன்மைபயக்க வேண்டும் என்பதுதான்.

**விளம்பர தாகத்தினால், மோகத்தினால்...**

ஒரு சில உறுப்பினர்கள் பேசுகிறபோது, ஆளுங்கட்சிக்கு எரிச்சலை மூட்ட வேண்டும், ஆட்சியில் உள்ளவர்களின் மனதைப் புண்படுத்த வேண்டும், அவர்களுக்கு மனச்சோர்வை ஏற்படுத்த வேண்டும், முடிந்தவரை சட்டப் பேரவைக்குள் அமளி, துமளியை ஏற்படுத்த வேண்டும், என்ற அடிப்படை நோக்கத்துடன்தான் சில குற்றச்சாட்டுக்களை கூறி, அரசு மீது பழி சுமத்துகிறார்களே தவிர, எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காண வேண்டும் என்றோ, மக்களுக்கு நல்லது நடக்க வேண்டும் என்றோ, அவர்கள் எண்ணுவதில்லை. அபாண்டமான பழிகளை அரசு மீது சுமத்தி, தாக்குகிற தொனியிலேயே பேசி, சரமாரியாகக் குற்றச்சாட்டுக்களை அடுக்கிக்கொண்ட போனால், அப்படியாவது தங்கள் பெயர், பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் வராதா, என்ற விளம்பர தாகத்தினால், மோகத்தினால், ஏக்கத்தினால் இப்படியெல்லாம் பேசுகிறார்களே தவிர-உண்மையில் அவர்களுடைய விமர்சனங்களினால் எந்த நன்மையும் விளைய வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இல்லை. அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் ஒரு நபரைப் பிடிக்கவில்லை, அவர்களுக்கு அரசியல் வாழ்க்கையில் விரக்தியே மிஞ்சியுள்ளது என்பதால், அந்த நபர் எதைச் செய்தாலும் எதிர்க்கவேண்டும் என்ற முடிவுடன், கண்மூடித்தனமாக எதிர்க்கிறார்களே தவிர, அவர்களுடைய வாதங்களில் சத்தும் இல்லை அவர்களுடைய கூற்றுக்களில் உண்மையும் இல்லை.

எல்லோரும் பாராட்டும் இந்த அரசின் சாதனைகளைக்கூட பாராட்ட மனமில்லாமல், எல்லாவற்றையும் குறை கூறுவதால், யாரும் இவர்களுடைய பேச்சுக்களை ஒரு பொருட்டாகவே எடுத்துக்கொள்வதில்லை. இம்மாநில மக்களில் பெரும்பான்மையானவர்களுக்கு, இவர்களைப் பற்றிய நினைப்பும் இல்லை; இவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வமும் இல்லை. இவர்களும் ஆங்காங்கே சில பொதுக்கூட்டங்களில் பேசிக் கொண்டுதான் இருக்கிறார்கள். கூட்டந்தான் கூடுவதில்லை. இவர்களுடைய பேச்சுக்கள் பத்திரிகைகளில் மட்டும் தவறாமல் வருகின்றன. நம் மாநிலத்தில் பத்திரிகை படிப்பவர்கள், மொத்த மக்கள் தொகையில் 10 சதவிகிதம் கூட இல்லை. ஆனால் அந்த 10 சதவிகித மக்கள்கூட, பத்திரிகைகளில் இவர்களுடைய பேச்சுக்களைப் படிக்கும்போது, 'இவர்கள் எப்போதும் இப்படித்தான் - குறை சொல்வதைத் தவிர இவர்களுக்கு வேறு வேலையே இல்லை' என்று அலுத்துக் கொள்கிறார்கள்.

இருப்பினும், இப்படிப்பட்ட சிலர் இந்த மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்களாக இருப்பதால், அவர்களுக்கும் பதில் அளிக்க வேண்டியது எனது கடமையாகிறது.

நேற்று சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. திருநாவுக்கரசு அவர்களும், திரு. பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்களும் இங்கு தெரிவித்த சில கருத்துக்களுக்கு, எனது பதிலைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**பாதிவிலையில் உணவுப் பொருட்கள்**

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் பேசும்பொழுது காவல் துறையினருக்கு மலிவு விலையில் உணவுப் பொருட்கள் வழங்கும் திட்டத்தில், குறிப்பிட்ட தொகைக்குப் பதிலாக, விலையில் 50 சதவிகிதம் மானியமாக வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டார். காவல்துறை அலுவலர்கள் மீது அக்கறை கொண்ட எங்கள் அரசு ஏற்கெனவே சில வாரங்களுக்கு முன்னரே இது குறித்து எடுத்த நல்ல முடிவினை நான் எனது பதிலுரையிலேயே தெரிவித்தேன்.

மீண்டும் அதனை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இனி, காவலர்களுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்கள் இன்றைய விலையில் 50 சதவிகிதம் மானியம் அளித்து பாதிவிலையில் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மனித நேயத்தோடு அணுகவும்**

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்கள் உரையாற்றும் பொழுது பொதுவாக 'மனித நேயத்தை'ப் பற்றிக் குறிப்பிட்டார். மனித நேயம் என்பது அடுத்தவரை தன்னைப்போல் கருதி நடத்தும் மாபெரும் பண்பு ஆகும். அவ்வாறு பார்க்கும்போது அரசு காவல் துறையினரை மனித நேயத்தோடும், காவல்துறையினர் பொதுமக்களை மனித நேயத்தோடும் நடத்த வேண்டும். அதே நேரத்தில் பொதுமக்களும் அரசியல்வாதிகளும் காவல்துறையினரின் பல்வேறு பணிகளில் உள்ள சிக்கல்களையும் இடர்ப்பாடுகளையும் கருத்தில் கொண்டு அவர்களையும் மனித நேயத்தோடு அணுகுவதுதான் சிறந்த பண்பாகும்.

> உலகத்திலே மிகவும் மலிவான பொருள் அன்பு தான். வாங்குகின்றவனுக்கும், கொடுக்கின்றவனுக்கும் அது பன்மடங்கு மிகுதியான இலாபத்தைத் தரும்.
>
> —இங்கர்சால்

மக்கள் - குறிப்பாக ஏழை எளியோர், நீதிக்காகக் காவலரை அணுகும்போது, காவலர்கள் அவர்களை மதித்து, உதவியாக இருந்து, அவர்களுக்கு நீதி கிடைக்கப் பணியாற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் தான், எங்கள் அரசு காவலர்களைப் பலவகைகளில் ஊக்குவித்து வருகின்றது. அவர்களிடையே மனித நேய மனப்பான்மையையும் எங்கள் அரசு வளர்த்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நெஞ்சார்ந்த நன்றி**

மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை, தீயணைப்புத் துறை மற்றும் காவல்துறை மானியக் கோரிக்கைகளின் மீது, தேவையான விளக்கங்களோடு நான் ஆற்றிய பதில் உரை, இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் மன நிறைவு அளித்திருக்கும் என நம்புகிறேன். இம்மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு, அரசுக்கு அறிவுரைகளையும், தேவையான யோசனைகளையும் வழங்கியுள்ள மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த அறிவுரைகளும், யோசனைகளும், கருத்துக்களும் அரசால் கவனத்தோடு கவனிக்கப்படவும், அவசியத்தின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அடிக்கடி விமரிசனத்திற்கு உள்ளாகும் இம்மூன்று துறைகளின் செயல்பாட்டைச் செப்பனிடுகிற வகையில், மாண்புமிகு உறுப்பினர்களால் வழங்கப்பட்டுள்ள கருத்துக்கள் அரசின் கவனத்தை வெகுவாகவே கவர்ந்திருப்பதால், அது குறித்த செயல்பாடுகள் துரிதப்படுத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களுக்கு என்னுடைய உரையில் தேவையான பதில் வழங்கப்பட்டுள்ளது என நான் நம்புகிறேன்.

என்னால் பதில் சொல்லப்படாத கருத்துக்கள் ஏதேனும் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய கருத்துக்கள் அனைத்தும் குறிப்பேட்டில் இருப்பதால், அவைகள் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

● ●

# சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கு அரசின் பல்வேறு சலுகைகள்! சட்டப் பேரவையில் மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

சுற்றுலா மையங்களில் நீர் விளையாட்டு, மலையேறுதல், மலைப் பாதை நடைப்பயணம், வானில் பறத்தல் ஆகிய வசதிகளை ஏற் படுத்தத் தமிழக அரசு முடிவு செய்து உள்ளது.

முட்டுக்காட்டில் தேசீய நீர் விளையாட்டுப் போட்டி நடத்தும் நிறுவனம் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இங்கு நீர் விளையாட்டுப் போட்டிகள் நடத்தத் தேவையான வசதிகள் செய்யப்படும். முட்டுக்காடு உப்பங்கழி ஆழப் படுத்தப்படும்.

மன்னார் வளைகுடா முயல் தீவில் சுற்றுலா வ்ளர்ச்சிக் கழகத் தின் உணவகம் அமைக்கப்படும். முயல் தீவிற்கும் இதர தேசீய கடல் பூங்கா தீவுகளுக்கும் சென்று வர படகு வசதிகள் ஏற்படுத்தப்படுத்தித் தரப்படும்.

**பண்பாட்டு நகரங்கள்**

மாமல்லபுரம், தரங்கம்பாடி, காஞ்சிபுரம், தஞ்சாவூர், இராமேசு வரம், சிதம்பரம், கும்பகோணம், ஸ்ரீரங்கம், திருத்தணி, கன்னியா குமரி, பழனி ஆகிய நகரங்கள் பண் பாட்டுப் பாரம்பரிய நகரங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒவ்வொரு நகருக்கும் சிறப்புச் சுற்றுலா மேம் பாட்டுக் குழுமம் அமைக்கத் திட்ட மிடப்பட்டுள்ளது.

இந்த நகரங்களில் பொது மக்களுக் காகச் சுகாதார வசதிகள் செய்து கொடுக்கப்படும். திட்டமிடப்படாத ஒழுங்கற்ற வளர்ச்சிகள் அனுமதிக் கப்படமாட்டாது.

இதேபோல் உதகமண்டலம், குன்னூர் அடங்கிய நீலகிரி மலைப் பகுதி, கொடைக்கானல் அடங்கிய பழனி மலைப்பகுதி, ஏர்க்காடு அடங்கிய சேர்வராயன் மலைப் பகுதி, குற்றாலம் ஆகியவை இயற்கை யெழில் பாரம்பரியப் பகுதிகளாக இனம் பிரிக்கப்பட்டுப் பாதுகாக்கப் படும்.

**சிறப்புச் சுற்றுலாப் பகுதிகள்**

முட்டுக்காடு, மாமல்லபுரம், காஞ்சிபுரம், தரங்கம்பாடி ஆகிய சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளைச் சிறப்புச் சுற்றுலாப் பகுதிகளாக மத்திய அரசு அறிவிக்க வேண்டும்.

போதிய வசதிகள் இல்லாததால் அயல்நாட்டுப் பயணிகள் இங்கு செல்வதைத் தவிர்க்கிறார்கள். மத்திய அரசின் நிதியுதவியோடு இந்தப் பகுதியில் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகள் செய்யத் திட்ட மிடப்பட்டுள்ளது.

தரங்கம்பாடிக்கு அயல்நாட்டுப் பயணிகள் விரும்பி வரும் வகையில்



# வெளிநாடுகளில் சுற்றுலாப் பிரச்சாரம்

தமிழகச் சுற்றுலா மையங்கள், தமிழகக் கலை, கைவினை, பண்பாடு குறித்து வெளிநாடுகளில் பிரசாரம் செய்யும் வகையில் விளம்பரச் சுவரொட்டிகள், சிறு புத்தகங்கள், வீடியோ மற்றும் திரைப்படங்களைத் தயாரிக்க அரசு திட்டமிட்டு உள்ளது.

வெளிநாடுகளில் உள்ள மத்திய அரசு சுற்றுலா அலுவலகங்கள், இந்தியத் தூதரகங்கள், ஏர்-இந்தியாவின் விற்பனை நிலையங்கள் முக்கியச் சுற்றுலா முகவர் அமைப்புகள் (ஏஜென்சிகள்) ஆகியவற்றிலும், இந்தியாவுக்கு வரும் முக்கிய ஏர்லைன்ஸ் விமானங்களிலும் வீடியோ, திரைப்படங்கள் காட்டப்படும். மோரிஷஸ் நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தொடர்ந்து வரும் வகையில் மோரிஷஸ் நாட்டுச் சுற்றுலா வணிக நிறுவனத்துடன் தொடர்பு ஏற்படுத்தப்படும்.

தமிழகச் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் உதகை, கொடைக்கானல், மாமல்லபுரம், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் தொலைபேசி இணைப்பகம் ஏற்படுத்தப்படும். உணவுக் கலை நிறுவன உணவகப் பணியாளர்களுக்குப் பயிற்சி தரப்படும். இந்திய எண்ணெய்க் கார்ப்பரேஷன் (ஐஓசி) பணியாளர்களுக்கெனச் சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களில் அறைகள் ஒதுக்கப்படும். எல்.டி.சி. பயன்படுத்துவோருக்குத் தனிச்சுற்றுலா வசதிகள் ஏற்படுத்தப்படும். திருச்சி, தஞ்சை, குமரி ஆகிய இடங்களில் ஓட்டல்கள் அமைக்கப்படும்.

**கேபிள் கார்**

உதகைக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளையும், பொதுமக்களையும், குழந்தைகளையும் கவரும் வகையில் அங்கு ஒரு 'கேபிள் கார்' அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

கடலூர், சேலம், நெல்லை, குடந்தை, புதுக்கோட்டை ஆகிய இடங்களில் சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்கள் கட்டப்படும். மத்திய அரசின் உதவியுடன் நீலகிரியில் வட்டார உணவுக் கலை நிறுவனம் அமைக்கப்படும்.

**மாம்பழ விழா**

தருமபுரி மாவட்டத்தில் புதிதாக மாம்பழ விழா இந்த ஆண்டு நடத்தப்படும்.

சென்னை சட்டக் கல்லூரியின் பழைய விடுதியைப் புதுப்பித்துச் சுற்றுலா ஓட்டலாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

**- மாண்புமிகு முதல்வர் அவர்கள் 25.3.1992 அன்று சட்டமன்றப் பேரவையில் வைத்த சுற்றுலாத் துறை கொள்கை விளக்கக் குறிப்பிலிருந்து.**

---

ஒரு மேம்பாட்டுத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

தனியார் துறையும் கூட்டுத் துறையும் சுற்றுலாத் திட்டங்களைச் செயல்படுத்த வழிவகைகள் செய்யப்படும்.

**ஈட்டுத்தொகை உயர்வு**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் பணிபுரியும் ஊழியர்கள் பணிக்காலத்தில் இறந்தால் ஏனைய அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படுகிறது போல் ரூ.60,000 ஈட்டுத் தொகை வழங்கப்படும்.

இதுவரை இந்த ஊழியர்கள் இறந்தால் ரூ.25,000 ஈட்டுத் தொகையாக வழங்கப்பட்டது.

சுற்றுலா வளர்ச்சிக் கழக ஊழியர்களுக்கு நகர ஈட்டுப்படியும் வீட்டு வாடகைப் படியும் வழங்கப்படும்.

சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தி வரும் ஓட்டல்கள், சிற்றுண்டி விடுதிகள், சாலையோர உணவகங்கள் நன்முறையில் செயல்படவும், ஓட்டல்களில் உள்ள தோட்டங்கள் சீரிய முறையில் பராமரிக்கப்படவும் அங்கு பணிபுரியும் ஊழியர்களுக்கு ஊக்கப் பரிசுகள் வழங்கப்படும்.

சிறந்த ஓட்டலின் மேலாளருக்கு ரூ.5,000 ரொக்கப் பரிசும், பணியாளர் ஒவ்வொருவருக்கும் தலா ரூ.500-ம் பரிசாக வழங்கப்படும்.

**புதிய சுற்றுலாக் கழக ஓட்டல்**

சென்னை மாநகரத்தில் பிராட்வேயில் பழைய சட்டக் கல்லூரி மாணவர் விடுதி நவீனமயமாக்கப்பட்டு நட்சத்திர ஓட்டலாக மாற்றப்படும். இதற்கு ரூ.2 கோடி செலவாகும்.

புதிதாக இரண்டு குளிர் சாதன வசதியுடைய சொகுசுப் பேருந்துகள் ரூ.20 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

**சுற்றுலாத் தொழிலுக்குச் சலுகை**

சுற்றுலா, ஒரு தொழிலாக ஏற்றுக்கொள்ளப்பட்டு பல சலுகைகளை மாநில அரசு வழங்குகிறது. சலுகை வட்டி வீதத்தில் சுற்றுலாத் தொழில்களுக்கு கடனுதவி வழங்கப்படுகிறது. புதிதாகத் தொடங்கப்பட்ட அங்கீகாரம் பெற்ற ஓட்டல்கள், உணவகங்களுக்கு ஐந்து ஆண்டுகள் வரை விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படும். கேளிக்கை வரியிலிருந்து 50 சதவிகிதம் தள்ளுபடி ரூ.10 இலட்சத்திற்கும் மேற்படாமல் செய்யப்படும். முதலீட்டிற்கு நிலத்தின் மதிப்பு நீங்கலாகப் பத்து சத ஊக்க உதவித் தொகை உள்பட பல சலுகைகள் தரப்படும்.

**சாந்தோம் கடற்கரை**

சாந்தோம் கடற்கரையைப் பாதுகாக்கத் தலைமைச் செயலாளரைத் தலைவராகக் கொண்ட ஒரு குழு தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

மெரீனா கடற்கரையின் மேம்பாட்டிற்காகச் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஒரு திட்டத்தைத் தயாரித்து வருகிறது. மெரீனா கடற்கரையை மேம்படுத்திய பின்னர் சாந்தோம் கடற்கரையை அழகுபடுத்தும் திட்டம் மேற்கொள்ளப்படும்.

***-சட்டப்பேரவையில் மாண்புமிகு முதல்வர் சுற்றுலாத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் முடிவில் அளித்த பதிலுரை (25.3.1992).***

# பயணிகளின் சொர்க்கம் கன்னியாகுமரி

டாக்டர் எஸ். பத்மநாபன்.

கன்னியாகுமரி மாவட்டம் பரப்பிலே சிறியது. ஆனால், பழமையும் பெருமையும் வளமையும் மிக்கது. வரலாற்றுப் பழமை, பண்பாட்டு மேன்மை, இலக்கியச் சிறப்பு, கலை அழகு, இயற்கை வளம் இவை யாவற்றையும் கொண்டது அம்மாவட்டம். செழிப்பான மலைப் பகுதிகள் வற்றாத ஜீவநதிகள், அடர்ந்த காடுகள், 68 கி.மீ. நீளம் கொண்ட வளைந்த கடற்கரை, இவையாவும் இணைந்து நம் குமரி மாவட்டத்திற்கு நம் நாட்டிலே ஒப்பற்றதோர் இடத்தைக் கொடுத்துள்ளன. அந்த அழகிய மாவட்டத்தில் பயணம் செய்வது கண்ணிற்கு மட்டுமல்ல, உள்ளத்திற்கும் ஒரு விருந்தாக அமைகிறது. குமரி மாவட்டத்தைப் பயணிகளின் சொர்க்கம் என்றால் அது மிகையாகாது.

மும்மூர்த்திக்காக அமைந்த ஒரே கோயிலான சுசீந்திரம் தாணுமாலயன் ஆலயம், சித்திரை மாதம் பத்தாம்நாள் சூரிய ஒளி மூலவரின் காலிலே படும்படி கட்டப்பட்ட பறக்கை மதுசூதனர் ஆலயம், நான்கு இந்திய சமயங்களையும் ஒன்று கூட்டிநிற்கும் நாகர்கோவில் நாகராஜர் ஆலயம், நம்மாழ்வாரைப் பெற்றெடுத்த திருவண்பரிசாரத்தில் அமைந்துள்ள திருவாழ்மார்பர் கோயில், முருகவேளுக்கும் வள்ளியம்மையாருக்கும் காதல்வேள்வி நடந்த வேளிமலைக் குமாரகோயில், அக்குமரனின் திருவருளைப்பெற்ற ஒளவையாரின் அரிய திருக்கோயில்கள், இராமாயணக் கதை முழுவதையும் மரப் பலகைகளில் செதுக்கிவைத்துள்ள பத்மநாபபுரம் இராமசாமி கோயில், கலைக் கூடமாகத் திகழும் திருவட்டாறு ஆதி கேசவப்பெருமாள் ஆலயம், ஆறுமாதம் கறுப்பாகவும் ஆறுமாதம் வெள்ளையாகவும் மாறிவரும் கேரளபுரத்து விநாயகரின் கோயில், சமண சமயத் துறவிகள் பல் கலைக்கழகம் அமைந்திருந்த சிதரால் குகைக்கோயில், பாறையைக் குடைந்து அமைக்கப்பட்ட திருநந்திக்கரைக் குடைவரைக்கோயில், இயற்கையெழில் பொங்கித் ததும்பும் திருப்பரப்பு அருவியும், அங்கு அமைந்துள்ள மகாதேவர் ஆலயமும், தாடகையைக் கொன்ற பாவத்திற்காக இராமபிரானால் எழுப்பப்பட்ட திருசரம்கோர்ப்பு இராகவேஸ்வரர் கோயில், சஞ்சீவி பர்வதத்தைக் கொண்டு வரும்போது அனுமானால் எழுப்பப்பட்ட மருந்து வாழ்மலை சிவன் கோயில், மான்மழுவுடன் சிவன், திருமால், சக்தி மூவரும் ஒரே கருவறையில் அமர்ந்து அருள்பாலிக்கும் கருங்கல் பகவதி கோயில், பதினான்கு அடி உயரத்தில் கண்ணன் திருவுருவைக்கொண்ட திப்பரமலைக் கிருஷ்ணன் கோயில், இந்தியத் தாயின் பாதச் சிலம்பென முக்கடலும் கூடி முழங்கும் குமரித்துறையில் தவம் செய்து நிற்கும் குமரியம்மனின் பேராலயம் இவையாவும் அழியா வரம்பெற்ற கலைச் செல்வங்களாக இம்மாவட்டத்திலே காட்சி தருகின்றன.


'வடவேங்கடம் தென்குமரி ஆயிடை தமிழ் கூறு நல்லுலகம்' எனத் தொல்காப்பியமும், 'குமரியம் பெருந்துறை' எனப் புறநானூறும், சிலப்பதிகாரமும் 'தென்றிசைக்குமரியாடி' வருவதை மணிமேகலையும் தெரிவிக்கின்றன. மேனாட்டு வரலாற்று ஆசிரியர்களான தாலமியும், பிளினியும் குமரித்துறையின் சிறப்பை எடுத்து எழுதியுள்ளனர். காசியையும் கன்னியாகுமரியையும் ஒரே நிலையில் வைத்துப் போற்றிப் புகழுவதைக் 'கங்கையாடிலென், குமரியாடிலென்' என்று அப்பர் தேவாரம் எடுத்துரைக்கின்றது.

இறைவன் விசுவநாதராகக் காசியிலும், அவரது சக்தியாம் தேவி கன்னியாகுமரியிலும் நின்று அருளுவதாக ஐதீகம். சிவனில்லையேல் சக்தியில்லை. சக்தியில்லையேல் சிவனில்லை. இதனை உருவகப் படுத்தவே இந்து சமயத்தினர் காசியையும் கன்னியாகுமரியையும் சிறந்த புண்ணியத் தலங்களாகக் கருதுகின்றனர். ஆன்மிகத் துறையில் வடக்கும் தெற்கும் காலகாலமாக இணைந்து நிற்கின்றன. கன்னியாகுமரிக் கடற்கரையோர மணலில் அணுகுண்டு செய்வதற்குரிய 'தோரியம்' என்னும் அரும்பொருள் காணப்படுவது கன்னியாகுமரி சக்தியின் இருப்பிடம் தான் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.


இந்தியத் தாயின் புனித பாதத்தைக் கிழக்கே வங்காளக் கடலும், தெற்கே இந்துமகா சமுத்திரமும், மேற்கே அரபிக் கடலும் தழுவி நிற்கின்றன. இச்சங்கமத்தில் மூழ்கி எழுந்தால் இறந்த மூதாதையர்கள் முக்தியடைவர் என்பது இந்து சமயத்தினரின் நம்பிக்கை. குமரிமுனையிலிருந்து நோக்கினால் காலையில் சூரியன் உதிப்பதையும், மாலையில் அவன் மறைவதையும் நன்றாகக் காணலாம். பௌர்ணமியன்று சூரியன் மறைவதையும், சந்திரன் தோன்றுவதையும் ஒரே நேரத்தில் இங்குத் தவிர வேறெங்கும் காண முடியாது. சித்திரை மாதப் பௌர்ணமி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். இதைக் காண பக்தர்கள் கூட்டம் கூட்டமாக இங்குவந்து குவிகின்றனர்.


உலக நலனுக்காகப் பரமனை நோக்கித் தவம் செய்து நிற்கும் அன்னை பகவதியை 'நீலத்திரைக் கடலோரத்திலே நின்று நித்தம் தவம் செய்யும் குமரி' எனக் கவியரசர் பாரதியார் கூறிச் சென்றார். தமிழ் மூவேந்தர்களும் வணங்கிய தெய்வம் 'கன்னியாகுமரி' என்று அக்கோவிலில் கிடைத்த கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. குமரியம்மனின் வடிவம் கலையம்சம் மிக்கது. அவ்வுருவை வடித்தெடுத்த கலைஞன் என்றுமே

கன்னியாகுமரியில் முக்கடல் சங்கமம்



கடலின் நடுவே





**பத்மநாபபுரம் அரண்மனை**

போற்றுதற்குரியவன். அத் திருவுருவின் முகப்பொலிவு காண்போர் உள்ளத்திற்கு அருளைத்தந்து தெய்வீக உணர்வை ஊட்டும். காணக் காணப் பரவசப் படுத்தும் தன்மை கொண்டது அத் திருவுருவம்.

கடற்கரையிலுள்ள காந்தி நினைவு மண்டபம், அதனை அடுத்துள்ள தவக் கோல விவேகானந்தர், ஆதி சங்கரர் ஆலயங்கள், கடலின் நடுவே கம்பீரமாகக் காட்சி தரும் விவேகானந்தர் நினைவுச் சின்னம் ஆகியவை குமரிப் பெருந்துறையை இந்து சமயத்தினரின் புண்ணியத் தலமாக மட்டுமல்ல; இந்தியத் தாயின் தவப்புதல்வர்களது நினைவுச் சின்னங்களைத் தன்னகத்தே கொண்ட ஒரு திவ்விய தலமாகவும் திகழ வைக்கிறது. குமரியம்மன் கோயிலின் தெற்கே காணும் சங்கிலித்துறையும், அதனை அடுத்துள்ள பதினாறுகால் மண்டபமும், இராஜராஜ சோழனால் எழுப்பப்பட்ட குகநாதேஸ்வரர் கோயிலும், புனிதச் சவேரியார் வருகை தந்த மாதா கோயிலும், வரலாற்றுச் சிறப்புவாய்ந்த வட்டக்கோட்டையும் பயணிகள் குமரிமுனையில் காணவேண்டிய தலங்களாகும்.

உலகத்துப் பழம்பெரும் சமயங்கள் மும்மூர்த்தியின் தத்துவத்தை ஒப்புக் கொண்டாலும் மும்மூர்த்திக்காக எழுப்பப்பட்டுள்ள ஒரே கோயில் இம் மாவட்டத்திலுள்ள சுசீந்திரம் தாணுமாலயர் ஆலயம்தான். (தாணு-சிவன், மால்-விஷ்ணு, அயன்-பிரம்மன்). சேர சோழ பாண்டியர்களின் கை வண்ணங்களை மட்டுமல்ல; நாயக்கர்களின் கலை நுட்பங்களையும் இக் கோவிலிலே நாம் காணலாம். தட்டினால் சுரம் எழுப்பக் கூடிய இசைத் தூண்களும், பதினெட்டடி உயரங்கொண்ட ஆஞ்சநேயர் திருவுருவமும், சங்கினால் செய்யப்பட்ட நந்தியும், நாசித் துவாரத்தைக் காதுவரை கொண்ட நாயக்கரின் உருவமும், பெண் உருவிலே காட்சிதரும் விநாயகரும், மும்மூர்த்தியாக நின்று கீதோபதேசம் செய்யும் பார்த்தசாரதியும் இங்கே கண்டு இன்புறத்தக்கவை.

குமரி மாவட்டத்தின் தலைநகராகத் திகழும் நாகர்கோவில், அதன் நடுவே அமைந்துள்ள நாகராஜர் கோயிலின் பெயரால் வந்ததாகும். இது ஒரு காலத்தில் கோட்டாறு என்னும் பெயரில் வணிகத் துறையில் சிறந்து விளங்கிய ஒரு பெருநகராக இருந்தது. நாகராஜா கோவிலில் மூலவரான ஐந்து தலை நாகராஜரைத் தவிர்த்து, சிவன் வாயு வடிவிலும், திருமால் அனந்தனடியிலும் உள்ளனர். கோவில் தூண்களில் சமண சமயத் தீர்த்தங்கரர்களான பார்சுவ நாதரும், மகாவீரரும் தவக் கோலத்திலே நின்றும் அமர்ந்தும் காட்சி தருகின்றனர். கோயிலின் தென் வாயில் சீனத்து புத்த விகாரத்தை நமக்கு நினைவூட்டுகின்றது.


இவ்வாறு இக்கோயில் சைவம், வைணவம், சமணம், பௌத்தம் இந் நான்கு மதக்கோட்பாடுகளின் கூட்டு உருவமாக நமக்குக் காட்சியளிக்கின்றது. இங்குள்ள கருவறையின் மேற்கூரை ஓலை வேயப்பட்டதாக இருப்பது இங்கு ஒரு தனிச் சிறப்பாகும். மேலும் நாகராஜர் அமர்ந்துள்ள இடம் எப்போதும் ஈரமாக வேயிருப்பது குறிப்பிடத்தக்கது. அங்கிருந்து எடுக்கப்படும் மண்ணே முக்கியப் பிரசாதமாகும். இது ஆறுமாதகாலம் கறுப்பு நிறமாகவும், எஞ்சிய நாட்களில் வெள்ளை நிறமாகவும் இருந்து வருகிறது. எவ்வளவோ காலமாக எடுத்தும் அந்த மண் குறையாமலிருப்பது அதிசயித்தக்க பேருண்மையாகும். கோயிலைச் சுற்றிலும் நாகப்பாம்புகள் நிறைந்திருந்தாலும் இவ்வட்டாரத்தில் பாம்பு கடித்து யாரும் இறந்ததாகச் சான்றுகள் எதுவும் இதுவரை கிடையாது என்று அமெரிக்க நாடு பதிப்பித்த சமயங்களின் கலைக்களஞ்சியம் உறுதிப்படுத்துகின்றது. நாக தோஷங்களை ஒழிக்க இது ஒரு புண்ணியத்தலமாக விளங்குகின்றது. வெண்ணை ஏந்தி நிற்கும் நவநீதனின் பெயரால் அமைந்துள்ள கிருஷ்ணன் கோயிலும், ஈஸ்வரன் பெயரால் அமைந்துள்ள வடிவீஸ்வரமும் நாகை நகரில் பயணிகள் காணவேண்டிய ஆலயங்களாகும்.

நாகர்கோவிலில் வேறொரு பகுதியான கோட்டாற்றில் புனித சவேரியார் பெயரால் அமைந்த கத்தோலிக்கர்களின் பெரிய கிறித்தவ ஆலயம் ஒன்று பேரும் புகழும் பெற்று விளங்குகின்றது. இவ்வாலயத்தில் அப்புனிதரால் வணங்கப்பட்ட மாதா பீடம் ஒன்று அமைந்துள்ளதைக் காணலாம். நமது நாட்டில் மிகப் பெரிய கிறித்தவ ஆலயங்களுள் ஒன்றாகக் கிரேக்கக் கட்டடக்கலையில் கட்டப்பட்ட கற்கோயில் ஒன்றும் இந்நகரில் உள்ளது. இது இலண்டன் நன்னெறிக் குழுவினரால் கி.பி. 1819-இல் எழுப்பப்பட்டது. இந்நகர் முகமதியர்களுக்கும் ஒரு முக்கியத் தலமாக விளங்குகின்றது. இங்குள்ள வேம்படிப்பள்ளியிலே கி.பி. 1585-ஆம் ஆண்டு முஸ்லீம் கவிஞரான ஆலிப்புலவர் மிகுராஜ்மாலை என்ற நூலை அரங்கேற்றினார் என்பர். நாகர் கோவில் நகரங்பூங்காவில் கலைவாணரால் எழுப்பப்பட்டு காந்தியண்ணலின் அறிவுரைகளையும், கவிமணியின் வாழ்த்துக் கவிதைகளையும் தாங்கி நிற்கும் காந்தி ஸ்தூபி இன்று அம்மூவரின் நினைவுச் சின்னமாகத் திகழ்கின்றது. இந்த ஸ்தூபி அமைந்துள்ள பூங்கா சர். சி.பி. இராமசாமி அய்யர் பெயரால் இருப்பதும், ஸ்தூபி திறப்பு விழாவிலே சிறப்புரையாற்றியவர் பேரறிஞர் அண்ணா என்பதும் இங்குக் குறிப்பிடத் தக்கவை.

குமரி மாவட்டத்தில் நம்மாழ்வார் மங்களா சாசனம் செய்த திருப்பதிகள் இரண்டு. ஒன்று திருவண்பரிசாரம் என்ற திருப்பதிசாரம், மற்றொன்று வட்டாறு என்ற திருவட்டாறு. திருவண்பரிசாரத்தில் திருமால் இருந்த நிலையிலும் திருவட்டாற்றில் அவர் கிடந்த நிலையிலும் காட்சி தருகிறார். திருவண்பரிசாரத்தில் அமர்ந்துள்ள பெருமாளை நம்மாழ்வார் 'வண்பரிசாரத்து இருந்த என் திருவாழ் மார்பர்' என்று உரிமை கொண்டாடுகிறார். இதை அடிப்படையாகக் கொண்டு நம்மாழ்வார் பிறந்த தலம் திருவண்பரிசாரம் என்பர். அவரை ஈன்ற தாயார் உடையநங்கையின் வீட்டை நாம் இன்றும் காணலாம். நம்மாழ்வாரால் 'வளமிக்க வட்டாறு' என்று புகழப்பட்ட திருப்பதி தர்ன் திருவட்டாறு. அங்கு அமர்ந்துள்ள ஆதிகேசவப்பெருமாள் ஆலயம் திருவனந்தபுரம் பத்மநாபசாமி கோயிலை ஒத்திருப்பதைக் காணலாம். இதனை ஆதி அனந்தபுரம் என்றும் அழைப்பர். கல்லிலும், மரத்திலும் செதுக்கிய பல கலைச்செல்வங்களை இந்த ஆலயத்திலே நாம் கண்டு களிக்கலாம்.

ஒரு காலத்தில் முருகவேளின் அறுபடை வீடுகளில் ஒன்றாக விளங்கிய

**திருப்பரப்பு அருவி**





சுசீந்திரம் மும்மூர்த்தி ஆலயம்

தோற்றமளிப்பது விஞ்ஞான உலகிற்கு ஒரு புதிராகவே இருக்கின்றது.

குழித்துறையை அடுத்துள்ள திருச்சாரணத்து மலை (சிதரால்) ஒரு காலத்தில் சமணத்துறவிகள் வாழ்ந்த ஒரு புண்ணியத் தலமாகத் திகழ்ந்தது என்று அங்கே கிடைத்த ஆதாரங்களிலிருந்து அறியலாம். பல மாவட்டங்களிலிருந்தும் சமண சமயத் துறவிகள் இங்கு வந்து தாவளமிட்டிருந்தனர் என்றும், கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இவ்வட்டாரத்தை ஆண்டு வந்த ஆய்குல அரசன் விக்கிரமாதித்த வரகுணன் சமண சமயத்தைத் தழுவி, துறவிகளுடன் இங்கே தங்கினார் என்றும், பெண் துறவிகள் (குரத்தியர்) இங்குப் பலருக்கு அறிவூட்டி, அற்நெறிக் கருத்துக்களை மக்களிடையே பரவச் செய்ய அவர்களை நாலா திசைகளிலும் படை படையாக அனுப்பினர் என்றும் அங்கே கிடைத்த கல்வெட்டுக்களிலிருந்து அறிய முடிகிறது.

நாகர்கோவில் பேச்சிப்பாறைப் பாதையில் குலசேகரத்திலிருந்து 3 கி.மீ. தொலைவில் உள்ளது திருநந்திக்கரை. பாறையைக் குடைந்து கட்டப்பட்ட இங்குள்ள கோயில் மிகவும் பழமையானது. இக்குடைவரைக் கோயிலில் கிடைத்த கல்வெட்டு ஒன்று இராஜராஜ சோழன் இக்கோவிலுக்கு விட்டுக் கொடுத்த மானியங்களையும், கோயிலில் சதய நாள் விழாவெடுத்த செய்தியையும் குறிப்பிடுகிறது.

திருப்பரப்பு அருவியும், அதன் அருகில் அமைந்துள்ள பழமையான மகாதேவர் ஆலயமும், அவைகளைச் சுற்றியுள்ள குன்றுகளின் இயற்கையழகும் காண்போர் மனதிற்கு இன்பமூட்டுகின்றன. பெயருக்கேற்றாற்போல் இத்திருவிடத்திலே திருமகள் தங்கியிருந்து நம்மைக் களிப்பூட்டுகிறாள். தக்கனை வதம் செய்துவிட்டு வீரபத்திரனும், பத்திரகாளியும் தங்கள் கோபம் தணிய இயற்கையெழில் கொழிக்கும் இத்திருவிடத்தைத் தேர்ந்தெடுத்து தியானம் இருந்தனர் என்பது ஐதீகம். தோவாளை வட்டத்தில் பொதிகைமலைச் சாரலில் உலக்கருவி எனும் அழகிய, என்றுமே வற்றாத நீர்வீழ்ச்சி ஒன்று உண்டு. அங்கு அகஸ்தியர் கோயில் ஒன்றும் உள்ளது. பேச்சிப்பாறை அணை, பெருஞ்சாணி அணை, கோதையாறு நீர்நிலை மின்சாரத் திட்டம் இவைகள் இம்மாவட்டத்திலே காணத்தக்கவை.



கோட்டாறு சவேரியார் ஆலயம்

தமிழகத்தின் பிற மாவட்டங்களைப் போலவே குமரி மாவட்டத்திலும் ஊரெல்லாம் இறைவன் கோயில் கொண்டுள்ளதைக் காணலாம். இறைவனின் சக்தியாம் தேவி கன்னியாகுமரியில் குமரியம்மனாகவும், கொல்லங்கோட்டில் காளியம்மனாகவும், ஆரல்வாய்மொழியில் மீனாட்சியம்மனாகவும், மண்டைக்காட்டில் பகவதியம்மனாகவும், வடிவீஸ்வரத்தில் அழகம்மனாகவும், ஒழுகினசேரியில் புவனேஸ்வரி அம்மனாகவும், வடசேரியில் காமாட்சி அம்மனாகவும், பூதப்பாண்டியில் சிவகாமி அம்மனாகவும் நின்று குமரி மாவட்டத்தைக் காவல் புரிகின்றனள் என்று கூறும்படி இங்கு ஆலயங்கள் அமைந்துள்ளன. சைவ வைணவ வேறுபாடுகள் இம்மாவட்டத்திலே சிறிதும் கிடையாது. சிவன் கோயிலில் பெருமாளும், பெருமாள் கோயிலில் சிவனும் வீற்றிருந்து அருள் புரிகின்றனர். கேரளபுரத்துச் சிவன் கோயில் நந்தி மண்டபத்தில் இராமர் இலட்சுமணர் சிலைகளைக் கண்டு களிக்கலாம். திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாள் ஆலயத்தின் கருவறையில் மகாதேவர் இருந்து அருளுகிறார். இம்மாவட்டக் கோயில்களில் ஆண்கள் மேலுடை அணிந்து செல்லக் கூடாது என்ற நியதியை இன்றும் கடைப் பிடித்து வருகின்றனர். குமரி மாவட்ட மக்கள் கோயிலில் வணங்கும் முறையும், அவர்கள் சமயக்குறிகளை நெற்றியில் அணிந்து செல்லும் பாங்கும் போற்றிப் புகழத்தக்கவை. இவ்வாறு அரிய பல ஆலயங்களையும், வரலாற்றுச் சிறப்புமிக்க சின்னங்களையும் தன்னகத்தே கொண்ட கன்னியாகுமரி மாவட்டம் பயணிகளின் சொர்க்கமாகத் திகழ்கிறது என்றால் அது மிகையாகாது.

வேளிமலைக் குமாரகோயில் இம்மாவட்டத்திலே தான் உள்ளது. முருகவேளுக்குக் காதல் வேள்வி நடந்ததும், திரிகூட ராசப்பக் கவிராயரால் 'நாஞ்சில் நாட்டு வேள்வி மலை' எனப் போற்றிப் புகழப் பட்டதுமான மலைதான் இன்று வேளி மலை என்ற பெயருடன் விளங்குகின்றது. வேங்கை மர சந்நிதியும், கல்யாண விநாயகரும், குறவர் படுகள விழாவும் முருகவேள் மலைநாட்டுக் குறத்தியான வள்ளியை இம்மலைப் பகுதியிலேதான் மணமுடித்தார் என்பதற்குச் சான்றுகளாக உள்ளன. இங்கு முருகவேள் 8 அடி 8 அங்குலம் உயரத்துடன் விஸ்வரூபத்தில் காட்சி தருகிறார். வள்ளியம்மையாரின் உயரம் 6 அடி 2 அங்குலம். திருப்பரங்குன்றத்தில் தெய்வானையுடன் காட்சி தரும் வேலவன் இங்கு வள்ளியுடன் தரிசனம் தருகிறார்.

வேணாட்டின் தலைநகராகத் திகழ்ந்த பத்மநாபபுரம் இன்று இரண்டரை மைல் நீள கற்கோட்டையால் சூழப்பட்டுப் பல தெருக்களையும், கோயில்களையும், பழமையான ஓர் அரண்மனையையும் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. கோட்டையினுள் திராவிடக் கட்டடக் கலையில் அமைந்துள்ள நீலகண்ட சுவாமி கோயிலும், கேரளக் கட்டடக் கலையில் எழுப்பப்பட்டுள்ள இராமசுவாமி கோயிலும் காணவேண்டிய கலைக்கூடங்களாகும். இராமசுவாமி கோயிலில் இராமாயணக்கதை முழுவதும் 45 பலகைகளில் நாடக ரூபமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. இக்கலைச் செல்வத்தை மர வேலைப்பாடில் இந்திய நாட்டின் சிறந்த கலைச் சின்னங்களில் ஒன்றாகக் கருதலாம்.

பத்மநாபபுரத்திலிருந்து ஒரு மைல் மேற்கே கேரளபுரம் சிவன் கோயில் உள்ளது. இங்கு ஓர் அரச மரத்தின் அடியில் வெயிலையும் மழையையும் தாங்கிக் கொண்டிருக்கும் ஒரு விநாயகர் நிலை ஆவணி மாதத்திலிருந்து ஆறு மாதம் வெள்ளை நிறமாகவும், மாசி மாதத்திலிருந்து கறுப்பு நிறமாகவும்

## அட்டைப்பட விளக்கம்

முதல்பக்க அட்டையில்: மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் 9.3.92 அன்று அரசு தலைமைச் செயலகத்தில் பொது மக்களைச் சந்தித்துக் கோரிக்கை மனுக்களைப் பெற்றபோது எடுத்த படம்.

கடைசிப்பக்க அட்டையில் — செஞ்சிக் கோட்டை

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927


எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.



தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

செஞ்சிக்கோட்டை